**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 08 ♦ ISSUE - 168 ♦ FRIDAY 20 APRIL 2012

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
- தவிர்க்க முடியாத (Neck, Back & Shoulder Pain)
- (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**nathan & co**
Pawnbrokers, Jewellers & Goldsmiths
HALF PRICE PAWN LOANS, HIGH VALUES, LOW RATES
BORROW £100
Nathan & Co charge £4.00 per month APR 52.7%
H&T Pawnbrokers charge £8.00 per month
Albermarle Bond charge £7.99 per month
Prices correct at 01.03.2012
61 Peckham High Street, Peckham, SE15 5EB Tel: 020 7701 7827
6 Tooting High Street, Tooting, SW17 0RG Tel: 020 3441 2202
www.nathan-co.co.uk

SPEAK TO OUR FRIENDLY TAMIL TRAVEL EXPERTS on 020 8866 3311
Flyplaces
Worldwide Travel & Tours
Email: info@flyplaces.co.uk
PRICE MATCH GUARANTEE
FOR BOOKING: 020 8866 3311
EMERGENCY No: 07904 000 037
We accept all major debit & credit cards
BRITISH AIRWAYS

| | |
|---|---|
| COLOMBO | from £169 |
| CHENNAI | from £189 |
| TIRUCHI | from £299 |
| TORONTO | from £199 |
| SINGAPORE | from £249 |

Note: All fares mention are low season, excluding taxes/terms and condition apply.

**Lockup Shop for Sale**
in Richmond Area
High Turnover
(Over £12 000/Week With out Pay Point/ Lottery/ Bus pass/ e Pay)
Very Busy High Street Location
Oppsite the Station
Rent Only £12 000/ Year
off license recently refurbished
Call: 07813456350

கட்டணங்கள் £3.00இலிருந்து!
Nails
Faircut Barbers (Ground Floor)
15 London Road, Tooting ,SW17 9JR
For info Please call: 07947 175 493

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர் வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750'ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838

மாபெரும் மலிவு விற்பனை!
அக்ஷய திருதியை முன்னிட்டு ஏப்ரல் 24 அன்று அனைத்து நகைகளும் மலிவு விலையில்
Thinesh
Jewellers & Textiles
மாபெரும் அதிஷ்டத்தைத் தவற விடாதீர்கள்
276 Lewisham High Street, Lewisham, London SE13 6JZ
தொடர்புகளுக்கு : 020 8613 9569

- Training & Consultancy for The Licensed & Leisure Industry
- Business Management Skills
- Practical Training in Bookkeeping and Payroll
- ESOL with British Citizenship Test in 4 Days
- ACCREDITED COLLEGE
- Advice & Guidance
- Professional Development
- FREE Learning Support in ESOL, English & Maths
- Life in the UK Citizenship Test
- Award for Personal License Holder (APLH)
- Premises License
- Award in Food Safety in Catering
- Payroll Training Courses, Seminars & Workshops
- Bookkeeping Courses

LONDON WIMBLEDON ACADEMY
Call 020 3405 1807 or 07803 903 897

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



### Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புகள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

**Tel: 020 8150 9953 | Mob: 075 3893 3261**


**Head Office**
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.

www.primetrainingcollege.co.uk

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு
£ 190 .00 மட்டுமே
(பரீட்சைக் கட்டணம் உட்பட)
இங்கே சனி 10.00 மணிக்கு
ESOL வகுப்புக்கள் உண்டு



## இயேசு அழைக்கிறார்



பாவக்கட்டா? சாப தோஷமா?
கவலையா? கண்ணீரா? வியாதியா?

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் – யோவான் 16:20
தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை – லூக்கா 1:37

இதோ! சீக்கிரமாய் வரப்போகின்ற இறைவன் இயேசுவை ஆராதிக்க வாருங்கள்.

துதி ஆராதனை ஞாயிறு காலை 10:00 | தொடர்ந்து சிறுவர் பாடசாலையும் நடைபெறும்

இடம்: GLORY CHURCH OF GOD - U.K.
1,George Lane, Lewisham, London SE13 6HQ,
(Near Lewisham Hospital and Behind the Ealam Shop)

Bus: 47, 54, 75, 136, 185, 208
Station: Catford, Lewisham,
DLR: Lewisham

Contact: **Pr.Robert Bhaskharan**
Tel:020 8695 1510 | 077 3761 2352
Email: glorychurchofgod@yahoo.co.uk, robert_bhaskharan@yahoo.co.uk



பிரியமானவர்களே...
**"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்*
*"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்*

**ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
**நேரம் 2.30 pm**
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage**]
[**Bus route no**: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: நல்ல சமாரியன் தேவ சபை
**Bro. Edmond**
**Mob: 07877 977 086 Tel: 020 8691 2705**



## KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!

FREE Basic Tamil Lessons

Tamil Lessons
Beginners
Intermediate
Advanced
£5/hr

Maths
English
Science
£10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் **கல்விக்கூடம்**

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை எமது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளிவாரியாகத் தோற்றவும் முடியும்

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் – மாலை 06.00 மணிவரை நடைபெறும்

– தொடர்புகளுக்கு –
**020 8090 3366**
**07738 056 950**
www.kalvikoodam.co.uk

Harrow Branch
157, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ



## RATHY Jewellers



24-04-2012 அட்சய திருதியையை முன்னிட்டு அனைத்து நகைகளும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் £500, £1000 பவுண்களிற்கு மேல் வாங்குபவர்களுக்கு பென்ரன், மோதிரங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்

* இச்சலுகை ரூட்டிங்கில் மட்டுமே!

*The leading Jewellery store in London with the largest selections including Diamond Jewellery, Thalli kodi and all studed jewellers.*

அழையுங்கள்
**020 8682 2233**

**Rathy Jewellers Tooting**
209 Upper Tooting Road, Tooting SW17 7TG
புத்தம் புது டிசைன்கள் நியாயமான விலை...!!!



## UK COOL AND SHOP FITTING



168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



## வாழ்த்துக்கள்...

தமிழர்களின் புதுவருடம் தையில் பிறப்பதாக ஏற்றுக் கொண்டாலும் பழக்கதோசமாக சித்திரைப் புத்தாண்டை வரவேற்பதில் அதிக ஆட்சேபனை இராது என நம்புகிறேன். பிறந்திருக்கும் புத்தாண்டில் ஈழப் போரில் புண்பட்ட நெஞ்சங்கள் ஆறுதல் பெற மனமார வேண்டுவோம். ஓயாது உழைத்து ஒரு பேப்பர்ரை தவறாது வெளியிட உதவும் ஒரு பேப்பர் காரன்களுக்கும்/காரிகளுக்கும், சகல விளம்பரதார்களுக்கும், வாசகர்களுக்கும் எமது மனமுவர்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

*அன்புடன் உமா மகாலிங்கம்*

## பிரித்தானிய தமிழர் பேரவைக்கு புதிய தலைவர்

பிரித்தானிய தமிழர்பேரவையின் முன்னைய தலைவர் சுகந்தன், செயலாளர் சண் ஆகியோர் பதவி நீக்கப்பட்டு புதியவர்கள் தலைமை பொறுப்பினை ஏற்றுள்ளதாக அறிகிறேன். காலம் தாழ்த்தியாவது இந்த முடிவையெடுத்தமைக்காக பிரித்தானிய தமிழர் பேரவையை பாராட்டுகிறேன். இனி வரும் காலங்களிலாவது, விளப்பமில்லாதவர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்குவதை தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

*அழகானந்தன்*

## செத்தது எப்பிடி திரும்ப தற்கொலை செய்யும்?

இம்முறை சம்பந்தன் கூட்டமைப்பு யூ.என்.பி காரரோடை சேர்ந்து யாழ்ப்பாணத்தில் மே தினம் கொண்டாடப் போகிறார்களாம். இதைக் கேட்டு கடுப்படைந்த கூட்டமைப்பின் அடியாள் ஒருவர் இது தற்கொலைக்கு ஒப்பான விசயம் என்று கட்டுரை எழுதியிருக்கிறார். தலைப்பை பார்த்த சீனா. சிவசேகரம் ஏற்கனவே அரசியலில் செத்துப்போனது எப்படி திரும்ப தற்கொலை செய்து கொள்ளப் போகிறது எண்டு கேள்வி எழுப்பியுள்ளார். அத்தோடை நின்று விடாமல் தமிழர்கள் இந்திய சார்பு, மேற்கு சார்பு நிலையெடுக்கக் கூடாது என்று வேறு போதித்திருக்கிறார். அப்படியென்றால் சீன சார்பு நிலையெடுக்கலாமோ என்ற என்ரை டவுற்றை கேட்கலாமென்றால் காத்திகேசு வாத்தியும் இப்ப இல்லை.....

*சிவரஞ்சன்*

## மடம் கட்டுவதற்கு சிறிலங்கா நிதியுதவி?

லண்டனில் சில தமிழ் கடைக்காரர்களும் வைத்தியர்கள் சிலரும் சேர்ந்து ஒரு மடம் கட்டுகிறார்கள். இந்த திட்டத்திற்கு நிதியுதவி செய்வதற்கு ஆட்கள் இல்லாமல் திண்டாடுகிறார்கள். எல்லாம் இந்த வைத்தியரால் வந்த வினையென கடைக்காரர்கள் ஒரு வைத்தியரை திட்ட, அவர் தன்னால் எம்பசியிலிருந்து தேவையான அளவு காசுவாங்கித்தர முடியம் என தினாவெட்டாக சொல்லியிருக்கிறார். அந்தக் காசு எங்களுக்கு வந்தது தெரிந்தால் மடம் கட்டி முடிய முன்னரே எதிர்ப்பு கிளம்பி விடும் என கடைக்காரர்கள் மறுத்துள்ளார்களாம். கட்டடவேலைக்கு பிடித்துள்ள கொந்தராத்துக்காரர் எம்பசிக்கு நெருக்கமான சிங்களவர் என்பது மேலதிகமான தகவல்

*துஸ்யந்தன்*

## உறங்கிக்கொண்டா இருப்போம்.

என்ன கோபியாரே,...

மேற்குலகத்திற்கு ஆதரவாக அரசு இலங்கையில் வந்து மனிதவுரிமைச் சபைத் தீர்மானம் குறைப் பிரவசமாக மாறாது தடுக்க உங்களால் ஏதாவது ரொனிக் கொடுக்க முடியாதோ? நீங்களும் மற்றைய இனப் பற்றாளர்களும் உறங்கிக் கொண்டா இருக்கப் போகிறீர்கள்??

*உமாபதி*

## கஜேந்திரகுமார்

ஜெனிவாத்தீர்மானத்தில்பலவற்றை இழந்ததற்குக் காரணம் தன் போன்றோர் மக்களால் தெரிவு செய்யப்படாமையேஎன்றுகர்ஜித்திருந்தார் கஜேந்திரகுமார். அவர் ஆற்றலைப் பார்த்தால் அவரை மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மகன் என்பதிலும் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரன் என்பதேசுூடுதலாய்ப்பொருந்தும் அவரால் தமிழ் மக்களுக்கு நன்மை வருமோ இல்லையோ தெரியவில்லை, நிச்சயம் ஒரு பிழைக்கத் தெரிந்தவர்..

*அழகேசன்.*

## பாரு பாரு எம்ஜியார் பாரு?

யாழ்ப்பாணத்திற்கு சென்ற சுதர்சனம் நாச்சியப்பன் என்கிற புறம் போக்கு ஒரு பயாஸ்கோப்காரன் கணக்கில் அத்தியடி குத்தியனை ஈழத்து எம்ஜியார் என்று சொல்லியிருக்கு. எம்ஜியார் எம்மாம் பெரிய ஆள், இது ஒண்டுக்கும் உதவாத லும்பன் எண்டு யாராவது எடுத்துச் சொல்லியிருக்கலாம். இதுக்கிள்ளை, அவர் எம்ஜியார் எண்டால் நான்தான் சரோஜாதேவி எண்டு அங்கை போயிட்டு வந்த ஒண்டு சொல்லித்திரியுது.

*கயல்விழி*

## அல்லாவின் இராணுவம்

சாத்திரி எழுதியிருந்த 'அல்லாவின் இராணுவமும் சனிதுரத்தும் சாக்கோசியும்' அருமையான கட்டுரை. தகவல்களை தந்தவிதமும் நன்றாக இருந்தது. சாத்திரியார் இது போன்ற கட்டுரைகளை தொடர்ந்து எழுத வேண்டும். இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் காலமானதையிட்டு வருத்தமாக இருக்கிறது. எழுபதுகளில் இலங்கை வானொலி நேயர்களை ஆக்கிமிரத்துக் கொண்டவர்களில் அவரும் ஒருவர்.

*பூபாலு*

## கனவுலகிலா?

இறந்தவரை எரித்து எட்டு நாட்களின் பின் அவர் வந்து பாட்டியையும் அவரின்நாயையும் உசார்படுத்துகிறார் என்று, கனவுலகிலிருந்தா எழுதுகிறார் சாத்திரி? சத்தியமாய் உதை நான் நம்பமாட்டேன். யாராவது பக்கத்திலிருப்பவர்கள் சாத்திரியாரை விழிக்க வையுங்கள்.

*கந்தவனம்*

## போராட்டம் அதற்கு ஆதரவு!

சென்ற ஆசிரியர் தலையங்கத்தில், தொப்புள் கொடி உறவுகளின் வாழ்வுரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு என்பது வரவேற்கப்பட வேண்டியது. ஆனால் அணு உலையே வேண்டாம் என்று சொல்பவர்களுக்கு ஆதரவு என்பது உளறல்போல் படுகிறது.

*சங்கரலிங்கம்.*

## கூட்டமைப்பு வராட்டால் தீர்வில்லையாம்?

கூட்டமைப்பினர் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு வராவிட்டால் இணப்பிரச்சனைக்கு தீர்வு இல்லை என மகிந்த கூறியிருக்கிறார். தெரியாமல் தான் கேட்கிறேன், டக்ளஸ், கருணா, புள்ளையான் போன்றவர்களை கூப்பிட்டு கதைத்து தீர்வுகாணலாம் தானே? அல்லது இவர்கள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாத கேணைப் பயல்கள் என அவர் முடிவெடுத்து விட்டாரோ? அதுவும் உண்மைதான்.

*லோகேஸ்வரன்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: editorial@orupaper.com

# கருத்துச் சுதந்திரம் என்று நஞ்சை கலக்காதீர்கள்...

ஒரு பேப்பர் ஐ தவறாமல் படிச்சுவருபவள் என்ற வகையில் இதனை எழுதுகிறேன். ஒரு பேப்பர் 166 இல் இரவி அருணாசலத்தின் பக்கத்தில் தேசியத் தலைவரைப் பற்றி வெளியிட்டிருக்கும் கருத்துகள் பெரும்பாலான உறவுகளின் மனநிலையை பிரதிபலிச்சிருக்கிறது. என்ன தான் யாராவது தேசியத்தலைவரைப் பற்றி அவதூறாக எழுதினாலும், அவரது தியாகமும், அவரது குடும்பத்தின் தியாகமும் பற்றி அனைவரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர் எதற்கும் விலைபோகாத அதிசயமான, அற்புதமான ஒரு மனிதர் அவர். அவரைப் பற்றியெல்லாம் எழுதுவதற்கு ஐயர் போன்றவர்களுக்கெல்லாம் என்ன தகுதி இருக்கிறது? தனது பெயரில் உள்ள சாதிப்பெயரை அகற்றமுடியாத இவர்கள் தான் சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததுபோல் குரைக்கிறார்கள். இவர்கள் போன்றவர்கள் இயக்கத்தில் இணைந்ததால்தான் அந்த இயக்கம் இப்படியாகி விட்டது. முஸ்லீம் கொங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கிழக்கு மாகாண முதலமைச்சராக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்றனவாம். அதனால் அவர் ஜெனீவாவிலயும் வந்து ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்காக வேண்டி முஸ்லீம் நாடுகளுக்கு ஓதிப்போட்டுப் போயிருக்கிறார். இவ்வளவு தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதற்காக ஒரு வார்த்தை சொல்லாத மனிதர், புலம்பெயர்ந்த மக்கள் மீது தமது கோபத்தைக் காட்டுகிறார். இவற்றுக்கெல்லாம் தீபம் தொலைக்காட்சியும் ஒரு காரணம் என்றே சொல்ல வேண்டும். தீபமும் இங்கையிலிருக்கிற வேறு சிலரும் இப்போது புலிகள் இல்லையென்பதால் வாலையாட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

முன்னர் ஒருநாள் நிர்மலா என்றொரு பெண், யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்களை விரட்டினார்கள், அவர்களுக்கு இது கொடுக்கவில்லை அது கொடுக்கவில்லை என தீபத்தில் ஒப்பாரி வைத்தார். யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லீம்கள் இன்னும் புத்தளத்தில பிச்சையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களே சொல்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் ரவூப் ஹக்கீம் என்ன செய்தார்? இவர்களையெல்லாம் கிழக்கில் குடியேற்றப் போகிறார்களா? பிள்ளையான் பாடு என்னவாகப் போகிறது? கருணாவின் கதையையும் காணவில்லை? புலிகளை காரணம் காட்டி தமிழ் மக்களை ஒடுக்கியவர்கள் இப்ப முஸலிம்களுக்கு பதவியைக் கொடுத்து அதையே செய்யப்போகிறார்களா?

முள்ளிவாய்க்காலில் இவ்வளவுநடந்த பின்னரும், நீங்கள் இப்படிப்பட்ட ஆக்களைக் கூப்பிட்டு தொலைக்காட்சியில் நிகழ்த்தி நடாத்தினால், அதை நாங்கள் பார்த்து மகிழ வேண்டுமா? இவையளை தூக்கிப்பிடித்துக்கொண்டு தேசியத்தையும் தலைவரையும் இழிவுபடுத்துவதனை ஊடகங்கள் நிறுத்தவேண்டும். இப்போது சிலர் தாங்கள் அங்கையிருந்து வந்தவை எண்டு கதைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை பார்த்துக் கொண்டிருக்க, கேட்டுக் கொண்டிருக்க இரத்தம் கொதிக்கிறது. ஒரு பேப்பர் இவறறையெல்லாம் வெளிச்சத்துக்கு கொண்டுவரவேண்டும்.

ஒரு பேப்பர் ல் எழுதுகின்ற சில ஆட்களின் (நான் பெயர் சொல்ல விரும்பவில்லை) போக்கும் தேசியத்துக்கு எதிரானதாய் இருக்கிறது. சிலர் மதில் மேல் பூனையாக இருக்கிறார்கள் என்றே நினைக்கிறன். ஏதோ கருத்துச் சுதந்திரம் என்று சொல்லி நீங்கள் தப்பி விடுகிறீர்கள். கருத்துச்சுதந்திரம் என்று பாலுக்குள் நஞ்சை ஊற்றுகிறமாதிரி இருக்கக்கூடாது. ஒரு பேப்பர் ஆசிரியர் குழுவினர் இதனைக் கவனத்தில் எடுக்கவேண்டும் என நினைக்கிறேன். அதுதவிர ஒரு பேப்பர் செய்கிற பணிக்கு நன்றி. கருத்துச்சுதந்திரம் வேண்டும் ஆனால் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் வாழைப்பழத்தில ஊசியேத்துறமாதிரி நஞ்சைக்க கலப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது கருத்துச் சுதந்திரமில்லை. நீங்கள் இரண்டுபக்கத்து நியாயத்தையும் வெளிப்படுத்துவதற்கு இடம் தரவேண்டும். அதுதான் உண்மையான கருத்துச்சுதந்திரம். சிங்களம் தமிழர்களை 60 ஆண்டுகளுக்கு மேலாக படிப்படியாக இனப்படுகொலை செய்து வருகிறது சிங்களம் படிக்காதமையால்தான் தமிழ்மக்களுக்கு இப்படி அரசாங்கம் செய்தது என்று வக்காலத்து வாங்குபவர்களை என்னவென்று சொல்வது? புலிகள் இருந்தபடியாத் தான் இப்படியெல்லாமென்று குறிப்பிட முடியாது. புலிகள் அமைப்பு உருவானது எழுபதுகளில். சுதந்திரம் கிடைத்தது 1948இல். 1956இல சிங்களம் மட்டும் சட்டம் வந்தது. இவையெல்லாம் திட்டமிட்டு நடந்து வருகிறதே இதைப் பற்றி இவர்கள் என்ன சொல்கிறார்கள்?.

இவற்றை விளக்கவேண்டியது ஒரு ஊடகத்தின் கடமை. நீங்களும் கருத்துச் சுதந்திரம் எல்லாருக்கும் கொடுக்கிறோமென்று சொல்லி தீபம் போல நடந்து கொள்ளக்கூடாது என்ற ஆதங்கத்தில் இவற்றை குறிப்பிடுகிறேன்.

*நன்றிகளுடன் இலண்டனிலிருந்து திருமகள்*

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400



Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

→ESOL with Citizenship
• British Passport/ Naturalisation
• Indefinite Leave to Remain
→International ESOL Diploma
• Student Visa / Extension Test
• Spouse Visa / Extension Test
• Work Permit / Extension Test

• Courses from £200
• Successfully trained over 35,000 students
• Certificates within 20 days
• Multilingual staff
• City & Guilds approved centre

National Centres

| | | |
|---|---|---|
| BIRMINGHAM<br>7 Washington Street<br>Birmingham<br>B1 1JR<br>01216339919 | SHEFFIELD<br>Sorby House<br>42 Spital Hill, Sheffield<br>S4 7LG<br>01143034301 | LEICESTER<br>Imperial House<br>St Nicholas Circle, Leicester<br>LE1 4LF<br>01163260248 |
| LUTON<br>169 A, Dunstable Road<br>Luton.<br>Beds – LU1 1BW<br>01582723123 | SLOUGH<br>18-24 Stoke Road<br>Slough, Berkshire<br>SL2 5AG<br>01753722056 | NEWCASTLE<br>51-52 Victoria Avenue<br>Whitley Bay,Tyne & Wear<br>Newcastle Upon Tyne – NE26 2BA<br>01912525265 |

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, APRIL 20, 2012, ISSUE 168

## கூட்டமைப்புக்கென கொள்கை ஏதும் உள்ளதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் அரசியற் கட்சிகளின் தேர்தல் கால இணைப்பாக உள்ள போதிலும், அதனை தமிழ்த் தேசிய அரசியலின் ஒருங்கிணைவாகவே தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். சிறிலங்கா பாராளுமன்றத்தில் தங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதனால், தமிழ் மக்களின் அரசியல் குரலாக அவர்கள் உலக அரங்கில் தெரிகிறார்கள். ஆனால் அதன் தலைவர்கள் வெளியிடும் கருத்துகளில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் வெளிப்படுவதாகத் தெரியவில்லை.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே காணப்படும் முரண்பாடுகளை பொதுவில் கூட்டணிக் கட்சிகளிடையே காணப்படும் கருத்து வேறுபாடுகள் போன்றவை என எடுத்துக் கொள்ளலாம். இருப்பினும் கூட்டமைப்பின சார்பில் தீரமானம் எடுக்கக் கூடிய நிலையில் உள்ள சம்பந்தன், சுமந்திரன், சேனாதிராசா போன்றவர்கள் வெளியிடும் கருத்துகளை நோக்குகையில், அடிப்படைக் கொள்கைகள் விடயத்தில் அவர்கள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்த பிரித்தானிய மேலவை உறுப்பினர் நேஸ்பி, பதின்மூன்றாம் திருத்தத்தின் அடிப்படையில் இன முரண்பாடுகளுக்கு தீர்வு காணலாம் என கூட்டமைப்பினர் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். வலதுசாரிக் கொள்கையுடையவரும் சிறிலங்கா ஆட்சியாளர்களின் நண்பருமான நேஸ்பியின் இக்கூற்றினை கூட்டமைப்பினர் மறுக்கவில்லை.

இம்முறை யாழ்பாணத்தில் மேதின விழாவை நடாத்தும் ஐக்கிய தேசியக் கட்சி அதனை கூட்டமைப்புடன் இணைந்து நடாத்தவுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காகவே தாம் இவ்வாறு இணைந்து மேதின விழாவை நடாத்துவதாக மாவை சேனாதிராசா கருத்து வெளியிட்டுள்ள போதிலும், சம்பந்தன், தாம் பிரதான அரசியற் கட்சிகளுடன் இணக்கப்பாட்டுடன் செயற்படவிரும்புவதாக கொழும்பு ஊடகமொன்றிற்கு விளக்கமளித்துள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசியற் கட்சிகளை மாறி மாறி ஆதரிப்பதும், பின்னர் அவர்களால் ஏமாற்றப்பட்டதாக முறையிடுவதும், தமிழரசுக் கட்சியின் பாரம்பரியமாக இருந்து வருகிறது. அதனையே தமிழரசுக்கட்சியின் தலைவரான சம்பந்தனும் பின்பற்றுவதாகத் தெரிகிறது. அத்தகைய நடைமுறையை தொடரவேண்டிய அவசியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றய கட்சிகளுக்கு கிடையாது. இவ் வியடத்தில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டியது அவர்களது கடமையாக உள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்*

*ஒரு பேப்பர் ஒரு அரசியல் பேப்பர் மாதிரி வந்துட்டுது, அதுவும் என்ன என்னவெல்லாமோ எழுதிறான்கள் எண்டு கனபேர் குறைப்படியினம். எப்பனும் சுவாரசியமாய் இல்லை முந்தின மாதிரி கிண்டல்கள் கேலியளும் குறைஞ்சுபோச்சுது. மொத்தத்திலை recession காலத்தலை வியாபாரம் நடாத்திற கடையள் மாதிரி இருக்குது எண்டெல்லாம் குறைப்படியினம். இப்பிடி நெடுக ஆக்கள் சொல்லுறது வழமைதான் எண்டாலும் இந்த விசயத்திலை கவனம் செலுத்தாமலில்லை. ஆனால் அப்பிடி எழுதிற ஆக்கள் தோதாய் வந்து சேருகினமில்லை. முந்தி எழுதின ஆக்களும் புத்தகங்கள் எழுத வெளிகிட்டிட்டினம், அதாலை அவைக்கும் நேரம் இருக்கிறேல்லை. இதிலை ஆர்வமாய் இருக்கிறவை நிச்சயம் எங்களை தொடர்பு கொள்ளலாம்.*

*எந்த விசயத்தை பற்றி நீங்கள் எழுதியனுப்பிறியள் எண்டது முக்கியமில்லை அதை எப்பிடி எழுதுறியள் எண்டதுதான் முக்கியம். அதுக்காக இரண்டு பஞ்சாங்கங்களிலை எது சரியெண்டு ஆய்வுக் கட்டுரையளை எழுதிறதை, சிவராத்திரி சரியாய் எப்ப வருது எண்ட உங்கடை விஞ்ஞான ஆய்வுகளின் முடிவுகளை எங்களுக்கு அனுப்பாதேங்கோ. அது அதுகளுக்கெண்டும் பேப்பருகள், புத்தகங்கள் இருக்குதுதானே, பிளீஸ் எங்களை விட்டுவிடுங்கோ.*

*'கருத்துச்சுதந்திரம் எண்டுசொல்லி நஞ்சையும் வாழைப்பழத்தில ஊசியேத்துறமாதிரி சில விசயங்களையும் எழுதுறதை கருத்துச்சுதந்திரம் எண்டு சொல்லேலாது. அது கருத்துச் சுதந்திரமில்லை. அப்படியெண்டால் நீங்கள் இரண்டுபக்கத்து நியாயத்தையும் போட்டுக் கதைக்கவேணும்' எண்டு திருமகள் அக்கா எண்டு ஓராள் எங்களுக்கு புத்திமதி சொல்லியிருக்கிறா. அக்கா, நாங்கள் இரண்டு பக்கமில்லை தாயக்கட்டைக்கு இருக்கிற மாதிரி ஆறு பக்கமிருந்தாலும் எல்லா பக்க நியாயத்தையும் வெளிப்படுத்த தயாராய் இருக்கிறம். எங்கடை தணிக்கைப்பிரிவு மேலை சொன்ன ஆராய்ச்சி கட்டுரை விசயத்திலைதான் வெளிப்படும்.*

*மே 12ம் திகதி நடக்க இருக்கிற புத்தகங்கள், காணொளி இறுவெட்டு வெளியீட்டு நிகழ்ச்சிக்கு வாருங்கோ எண்டு அழைப்பு விடுக்கிறம். இது மற்ற நிகழ்ச்சியள் மாதிரியில்லை, வாற எல்லாருக்கும் கருத்துச் சொல்ல இடம் தரப்படும்.*

*கடைசியாய் ஒண்டு ஆனால் முக்கியமான ஒண்டு, தமிழ் ஊடகத்துறையில் மிக முக்கியமான பணியினை ஆற்றிய மாமனிதர் சிவராம் அண்ணரின்ரை நினைவுநாள் இந்தமாசம் இருபத்தெட்டாம் திகதி வருகிறது. எங்களாலை முடிந்தவரை அவரது பணியினை தொடருவம்*

*அப்ப சந்திப்பம் என்ன....*

*ஒரு பேப்பர் காரன்கள் + காரிகள்*

# India gives Sri Lanka lessons in real-politik



By J.S. Tissainayagam

The United States sponsored and carried a resolution on Sri Lanka at the United Nations Human Rights Council (UNHRC) in Geneva on March 22. However, what surprised observers was not US action but that India had voted in favor of a resolution against its South Asian neighbor.

The resolution, calling on Colombo to investigate war crimes allegedly committed by its own troops and Tamil rebels in the final months of fighting in 2009, is admittedly weak. It is nowhere near an international investigation that the UN and many in the international community argued for.

The resolution's lack of vitality is partly due to an amendment moved by India on the original US draft. It was to ensure that any UN oversight on investigation into war crimes would take place only with Colombo's concurrence.

Following the vote, India's Prime Minister Manmohan Singh wrote to Sri Lankan President Mahinda Rajapakse. Singh said, "Your Excellency would be aware that we spared no effort and were successful in introducing an element of balance in the language of the resolution." This fuelled the theory that domestic political reality had spurred New Delhi to first dilute the resolution and then vote for it.

The domestic political reality was the wave of indignation sweeping India's Tamil Nadu state, where Tamils reacted angrily to mounting evidence of atrocities committed on their ethnic brethren in Sri Lanka by that country's military. This led to the two most important political parties in Tamil Nadu – one which was a constituent of Singh's ruling coalition – threatening drastic action unless India voted in favor of the Geneva resolution.

While it is true public opinion in Tamil Nadu pressured New Delhi to vote for the UNHRC resolution, it is only one reason. Other national interests were also at play emanating from international, regional and bilateral concerns.

Internationally, India's reluctance to support democracy movements and struggles for human rights in different parts of the world has caused misgiving, especially as it seeks a permanent seat in a reformed UN Security Council. This has been referred to by commentators from India's liberal establishment to US President Barack Obama during his visit to India in November 2010.

Of regional consequences to India are Sri Lanka's moves to let China inveigle its way into the Gulf of Mannar, the narrow strip of sea separating India and Sri Lanka, in the guise of drilling oil. Earlier, although Sri Lanka appeared to take pains to treat both India and China – Asian giants competing for influence in the Indian Ocean – equally, recent reports say Colombo's relations with Beijing run deeper. India is reportedly perturbed, not for lost commercial opportunities but because the Chinese presence in the Gulf of Mannar is a security threat.

Bilaterally, when India helped Sri Lanka destroy the armed Tamil rebellion, it wished to balance this policy by pushing Colombo to create institutions for minimal power-sharing with its Tamil population. But Colombo's stonewalling on this has denied the project's success. This has exasperated New Delhi not only because it perpetuates instability in Sri Lanka, but also because Colombo's indifference challenges India's regional pre-eminence.

An opportunity for India to make good these reversals without great cost to itself arrived with the UNHRC resolution on Sri Lanka.

First, as the resolution was US-sponsored, it had the US's imprimatur and was therefore more or less assured of safe passage through the UNHRC. It meant, unlike in 2009 when India had to lobby the UNHRC for a pro-Sri Lanka resolution, it did not have to do anything this time.

Second, the UNHRC resolution was a good opportunity to test Sri Lanka's bluff of many years – that the more New Delhi proved an irksome neighbor, the closer into Beijing's embrace would Colombo go.

New Delhi was prepared to issue this challenge because Sri Lanka is India's biggest trading partner, a position China cannot replace. In financing capital-intensive projects, while China's investments are much larger, Sri Lanka is in no position to reject Indian aid. While China continues to provide military hardware to Sri Lanka, India's military relations with Sri Lanka are much wider including joint military exercises, sharing intelligence and training. More than everything else, the presence of a trans-border Tamil population with cultural and linguistic ties, divided by a mere 22 miles of sea, is an advantage that China cannot balance. The list goes on, but let me not belabour the point.

Therefore, New Delhi feels there are limits to Colombo moving into Beijing's orbit. And, even if it did happen, there is precious little Sri Lanka could do that would affect India's vital interests. Drilling oil in the Gulf of Mannar might be the only exception.

In comparison, India's handling of Burma (Myanmar) was different. Despite the US and others chiding New Delhi for remaining silent in the face of Naypyidaw's crackdown on pro-democracy activists in 2007 and the extension of Aung San Su Kyi's confinement in 2009, New Delhi did not reverse its stand. That was because the energy resources and the military and strategic influence China had over Burma made India realize relations with it had to be carefully handled.

Of regional consequences to India are Sri Lanka's moves to let China inveigle its way into the Gulf of Mannar, the narrow strip of sea separating India and Sri Lanka, in the guise of drilling oil.

Evidently New Delhi handles countries differently even when they call themselves Beijing's friends. It is confident that handling Colombo needs no kid gloves now. How Colombo reacts to this demonstration of realpolitik will go a long way in determining future Indo-Sri Lanka relations.

*Courtesy: Global Post*

# அரசியல் வாதிகளிடம் மட்டும் தமிழர் அரசியலை விட்டுவிட முடியாது



குமாரவடிவேல் குருபரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத் துறை விரிவுரையாளரும் அரசியல் செயற்பாட்டளாருமான குமாரவடிவேல் குருபரன் வீரகேசரி வார வெளியீட்டு வழங்கிய செவ்வியில் தெரிவிக்கப்பட்டுள்ள சில கருத்துகளை அதன் முக்கியத்துவம் கருதி இங்கு பிரசுரிக்கிறோம். செவ்வி கண்டவர் தியாகராஜா நிரோஷ்.

*போருக்குப் பின்னரான சூழலில் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதியில் சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், சனநாயக நடைமுறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கருதுகிறீர்களா?*

போருக்கு பின்னரான சூழலில் அடக்குமுறைகள் தொடர்கின்றன. அவற்றினது வடிவங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும்போது அடக்குமுறை மொத்தத்தில் அதிகரித்தும் உள்ளது. போர் ஒன்று ஓய்வடைந்ததன் பின்னர் உயிர் இழப்புக்கள் குறைவடைந்துள்ளன என்ற முன்னேற்றத்தை தவிர்த்து வேறொன்றையும் பெரிதாகச் சொல்வதற்கில்லை என்பதை வடக்குக் கிழக்கு நிலைமைகளை அறிந்தவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். சர்வதேச அழுத்தங்களின் விளைவாகப் பெயருக்கு சில மாற்றங்கள் நடந்த மாதிரியாகத் தோற்றப்பாடு காட்டப்படுகின்றது. ஆனால் வெவ்வேறு வடிவங்களில் அடக்குமுறைகள் புதிது புதிதாக கட்டவிழ்த்து விடப் படுகின்றன.

போருக்குப் பின்னரான சூழலில் குறிப்பாக 'வாழ்ந்தால் போதும்' என்ற மனநிலைக்குத் தமிழர்களைத் தள்ளிவிடும் வகையில் - அவர்களுடைய நாளாந்த "இருத்தல்" (Existence) பற்றி மட்டுமே அவர்களை சிந்திக்க, செயலாற்றக் கூடிய வகையில் அவர்களது அரசியல் கூட்டு மனநிலையை தாழ்த்தும் நோக்கில் இலங்கையின் அரச இயந்திரம் மிகவும் நுண்ணியமாக செயற்பட்டு வருகின்றமையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழர் பிரதேசத்தில் காணப்படும் அதி உச்ச இராணுவப் பிரசன்னத்தையும் குறிப்பாக அரசியல் கருத்தாக்கத்திற்கான வெளிகளை மூடுவதற்கும் செயலற்றதாக்கவதற்கும் அரச இயந்திரம் எடுக்கும் முயற்சிகளை இந்த கண்ணோட்டத்தில் தான் நாம் பார்க்க வேண்டியள்ளது.

'இருத்தல்' பற்றி அதிகமாகச் சிந்திப்பதற்கும் செயலாற்றுவதற்கும் நேரத்தைச் செலவிடுகின்ற போது தமிழர்கள் தமது அரசியலை மறந்து விடுவார்கள் அல்லது தமது அரசியல் செயற்திட்டத்தில் விட்டுக் கொடுப்புக்களை (compromise) செய்து விடுவார்கள் என்ற எண்ணம் ஆட்சியாளர்களிடத்தில் உள்ளது. ஆனால் தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்த இருப்பு சார்ந்த பிரச்சினை ஓர் தனிப்பட்ட நபரொருவருக்குரிய இருப்பு சார் பிரச்சினை இல்லை என்பதை நன்கு அறிவார்கள். ஒவ்வொரு தனிநபரதும் இருப்பு சார் பிரச்சினையானது சமூகத்தின் இருப்போடு பின்னிப் பிணைந்தது என்பதைத் தமிழர்கள் அனுபவ ரீதியாக அறிவார்கள். அந்த இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையிலான அரசியற் செயற்றிட்டத்தையும் அவர்கள் எளிதில் கைவிடமாட்டார்கள் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

*வடக்குக் கிழக்கினை மையப்படுத்தி அண்மையில் தோற்றம் பெற்ற சிவில் சமூகக் குழவில் நீங்களும் அங்கத்துவம் வகித்திருந்தீர்கள். இச் சிவில் சமூகக் குழு முக்கியமாக தமிழ் மக்கள் பிரதிநிதிகள் விட்டுச் செல்லும் குறைபாடுகள் பற்றி மட்டுமே கவனம் செலுத்தியிருந்தது. அதற்கப்பால் தொடர்ந்து இன்றைய நிலையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள இடர்பாடுகள் பற்றி கவனம் கொள்வதாகத் தெரியவில்லை. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?*

தமிழ்ச் சிவில் சமூகம் என்று பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விடப்பட்ட அறிக்கையில் கையொப்பமிடப்பட்டவர்கள் ஓர் அமைப்பாக இயங்குவதில்லை. எமக்கு என்று ஓர் காரியாலயமோ தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாக கட்டமைப்போ கிடையாது. தமிழரது அரசியல் செல்நெறி தொடர்பில் அக்கறை கொண்டவர்கள் என்றளவில் கூட்டாக எடுத்த முயற்சி தான் இந்த அறிக்கை. தமிழ் அரசியலைத் தனியே அரசியல்வாதிகளிடம் விட்டுவிடக் கூடாது என்ற சிந்தனையின் அடிப்படையில் இம்முயற்சி இடம்பெற்றதாகக் கொள்ளலாம். தனிநபர்கள் என்ற வகையில் தத்தமது வேலை சார் தளங்களுடாக, அமைப்புக்களுடாக இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளவர்கள் தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள நாளாந்த இடர்பாடுகள் தொடர்பில் செயற்பட்டு வருகிறார்கள். அப்படிச் செயற்படுகின்றமையால் வந்த அக்கறையில் தான் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கான எண்ணம் தோன்றியது.

'சிவில் சமூகம்' என்றவொரு அமைப்பு இருக்க முடியாது. அது ஓர் எண்ணக்கரு சார்ந்த ஓர் முக்கியமான சமூக செயற்பாட்டு வெளியைக் குறித்து நிற்கின்றது. கட்சியரசியலுக்கப்பால் - பிரதிநிதித்துவ அரசியலுக்கப்பால் - அரசியல் தொடர்பில் செயலாற்றக் கூடிய முக்கிய வெளியை இது குறித்து நிற்கும். இந்தச் செயற்பாட்டு வெளிக்குள் நின்று கொண்டு தமிழரது அரசியல் தொடர்பிலும் அவர்களது சமூக பொருளாதார கலாச்சார இருப்பு பற்றியும் செயலாற்றுகின்றவற்றை சிவில் சமூக அமைப்புக்கள் (civil society organizations) என அழைக்கலாம். இவ்வாறான அமைப்புக்கள் எம்மத்தியில் மிகக் குறைவானவையே. இவற்றை உருவாக்குவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். எம்மில் சிலர் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். அரச இயந்திரத்துக்கு இப்படியான சிந்தனையும் செயற்பாடுகளும் தமது நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து முன்னகர்த்துவதில் பாரிய தடைகற்களாகத் தென்படுகின்றன. தொடர்ச்சியான அழுத்தங்கள் மூலமாக இவ்வாறாகச் சிந்திக்கும் வெளிகளை மூடிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் நாளாந்தம் செயற்படுகின்றனர். ஓர் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற வகையில் நாளாந்தம் இத்தகைய அழுத்தங்களின் பல்வேறு வடிவங்களிற்கு நான் முகம் கொடுத்து வருகின்றேன் என்பதையும் இந்த இடத்தில் சொல்லி வைக்கலாம்.

*இனப் பிரச்சனைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தினை அடிப்படையாகக் கொண்ட தீர்வு பற்றிச் சிந்திக்கப்படுகின்றதே. மேலும் வடக்கு மாகாண சபைத் தேர்தல்கள் பற்றியும் பேச்சுக்கள் அடிபடுகின்றன. இந்நிலைமைகளின் ஆரோக்கியத்தினை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?*

13ஆவது திருத்தத்தை தமிழர்கள் முழுமையாக, தொடர்ச்சியாக நிராகரித்து வந்திருக்கிறார்கள். 28.10.1987 அன்று இந்தியப் பிரதம மந்திரி ராஜீவ் காந்திக்கு அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஆகியோர் அனுப்பிவைத்த கடிதமொன்றில் 13ஆவது திருத்தம் எமது மக்களின் அடிப்படையான அபிலாசைகளைத் தானும் பூர்த்தி செய்யாத ஒன்று என்றும், எமது மக்கள் அனுபவித்த துன்பங்கள், துயரங்களை எந்த வகையிலும் ஈடு செய்வதாக அமையாதது என்றும் தெரிவித்திருந்தனர். இதே சம்பந்தன் அவர்கள் 13ஆவது திருத்தத்தைத் தாம் ஏற்றுக் கொள்வதாகத் தன்னிடம் தெளிவாகக் கூறியதாக இங்கிலாந்தின் பிரபுக்கள் சபை உறுப்பினர் நெஸ்பி அவர்கள் அண்மையில் கூறியிருந்தமை பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

27-04-1989 அன்று வடக்குக் கிழக்கு மாகாண சபையில் உரையாற்றிய முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் 13ஆவது திருத்தத்தின் கீழ் தேசிய பொலிஸ் பிரிவுக்கும் மாகாண பொலிஸ் பிரிவுக்குமுள்ள பொறுப்புக்களைப் பற்றி ஆராய்ந்து விட்டு இவ்வளவையும் தேசிய பொலிஸ் பிரிவு செய்வதாக இருந்தால் மாகாணப் பொலிசுக்கு என்ன வேலை? சம்பளம் வாங்கிப் படுத்து உறங்க வேண்டியது தான் என்று கூறியிருந்தார். இதை விட 13ஆவது திருத்தத்தின் இலட்சணத்திற்கு சான்றாதாரம் வேண்டுமா? சந்திரிகா குமாரதுங்கவினது அரசாங்கமோ ரணில் விக்கிரமசிங்கவினது அரசாங்கமோ 13ஆவது திருத்தத்தைத் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளி எனக் கருதி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லை. விடுதலைப் புலிகள் இருந்தபோது 13ஆவது திருத்தத்தைப் பற்றிப் பேசாத சிங்கள அரசியல் தலைமைகள் இன்று 13ஆவது திருத்தம் என்ற வரையறைக்கப்பால் பேச மறுக்கின்றமை எம்மைத் தோல்வியடைந்த இனம் என்ற மமதையில் அவர்கள் அரசியல் செய்வதையே காட்டுகின்றது.

மாகாண சபைக் கட்டமைப்பைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர் என்ற செய்தியை வெளிப்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண சபைக்கு நடாத்தப்படும் தேர்தல்களில் நேரடியாகப் பங்கெடுக்கக் கூடாது என சிவில் சமூக அறிக்கையில் த.தே.கூவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். மாகாண ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இன்னும் மேலதிகமாக கேட்டு வாங்கலாம் என்று த.தே.கூ சிந்திப்பது போல் தெரிகின்றது. இந்த உபாயம் ஆபத்தானது என சிவில் சமூக அறிக்கையில் நாம் எச்சரித்திருக்கிறோம். 13ஆவது திருத்தம் என்ற வரையறைக்குள்ளிருந்து ஓர் எல்லைக்கப்பால் பிரயாணிக்க முடியாது என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம். கட்டம் கட்டமாக அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனை சாத்தியப்படாது என்றும் மக்களுடைய அன்றாடப் பிரச்சனைகளுக்குக் கூடத் தீர்வுகளைத் தர முடியாத - அடிப்படையில் வலுவான மாகாண சபைக் கட்டமைப்பை த.தே.கூ ஏற்றுக் கொள்ளக் கூடாது எனவும் கூறியிருந்தோம்.

தமிழ்த் தேசிய விரோத சக்திகள் அல்லது அரச சார்பு சக்திகள் வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதைத் தடுக்க நாம் வேறு மாற்று உபாயங்கள் தொடர்பில் சிந்திக்கலாம் என்றும் நேரடியாகத் தான் த.தே.கூ போட்டியிடக் கூடாது என்று நாம் வலியுறுத்தியிருந்தமையும் நினைவு கூரத் தக்கவை. ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறியுள்ள இன்றைய சூழலில் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபைத் தேர்தலை உடனடியாக வைக்குமாறு இந்தியா வலியுறுத்துவதாக அறியக் கிடைக்கின்றது. இதிலிருந்தே எமது அரசியலை முடக்குவதற்காகவே மாகாண சபைத் தேர்தலுக்கான ஆயுத்தங்கள் நடைபெறுவதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

*தமிழ் சிவில் சமூகம் வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் என்பதற்கு அப்பால் மலையகத் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் என்ன கொள்கையினைக் கொண்டுள்ளது?*

முஸ்லிம் மக்கள் சார்பிலோ மலையக மக்கள் சார்பிலோ தமிழர்கள் அரசியல் செய்ய முடியாது, செய்யக் கூடாது என்பது எனது நிலைப்பாடு. முஸ்லிம் மக்களுக்கும் மலையக மக்களுக்கும் தனித்துவமான அரசியலும் அதற்கென கட்சிகளும் உண்டு. ஒலுவில் பிரகடனத்திற்குப் பின்னர் முஸ்லிம்கள் தம்மைத் ஓர் தேசமாகக் கருதி அரசியல் செய்வது போல எனக்குத் தோன்றினாலும் இதிலும் தெளிவற்ற தன்மைகள் காணப்படுகின்றன. ஆட்சிக்கு வருகின்ற எந்தவொரு அரசாங்கத்திலும் பங்கெடுப்பதன் மூலமாகத் தமது மக்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தரலாம், அத்தகைய அரசியலே சரியானது என்ற பார்வை முஸ்லிம் அரசியலிலும் மலையக அரசியலிலும் ஆழமாக ஊன்றி இருப்பது போல் படுகின்றது. தமது அரசியல் தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது இந்த சமூகங்களினது பொறுப்பாகும்.

இம்மக்கள் சார்பில் அரசியல் செய்யக் கூடாது என்ற நிலைப்பாடானது அந்த மக்களுடன் நாம் சேர்ந்து இயங்குவதை நிச்சயமாகத் தடுக்கக் கூடாது. முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பில் ஆழமான விளங்கிக் கொள்ளலையும் அதற்கான ஆதரவு அரசியலையும் (solidarity politics) நாம் நிச்சயமாக செய்ய வேண்டும். குறிப்பாக வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் சுயாட்சி அதிகாரம் கொண்ட இணைந்த வடக்குக் கிழக்கில் தமிழர்கள் முற்று முழுதாக பெரும்பான்மைத்துவ ஆட்சியொன்றை நடாத்தமாட்டார்கள் என்பதையும் அதற்கான கட்டமைப்பு சார்ந்த ஏற்பாடுகளைப் பற்றிப் பேச எமது விருப்பத்தையும் நாம் தெரிவிக்க வேண்டும். ஆனால் இதற்கான சூழல் அமையப் பெற வேண்டும். நிச்சயமாக நீதியமைச்சராகவுள்ள ஹக்கீம், பதுர்தீன் ஆகியோரது அண்மைக்கால அரசியல் நிலைப்பாடுகள் இதற்கான ஏதுவான சூழலை ஏற்படுத்தித் தருவதற்குத் துணை செய்யவில்லை.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate.............. 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: ORU PAPER
Bank: HSBC
A/C: 61429035
S/C: 40-33-09

# ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# பொன்.அம்பலத்தார்

- facebook.com/orupaper @orupaper

## நாடுகடந்த மந்திரித் தவளைகள்

அவசரப்படாதேங்கோ உங்கட கற்பனைக் குதிரை எங்க போகுதென்று எனக்கு தெரியும். கொஞ்சம் கடிவாளத்தை பிடியுங்கோ. ஏனென்றால் இந்த ஆற்றிலிருந்து கிணத்துக்குபோன தவளையைபற்றி முதலில் கதைத்துப் போட்டு பிறகு தமிழீழத்தில் இருந்து புலம்பெயர்ந்த தவளைகளைப்பற்றி பிறகு கதைப்பம். இந்த கிணத்து தவளை என்கிற சொல்லுக்கு உண்மையான அர்த்தம் கணபேருக்கு தெரியாது. கதை இதுதான்.

ஒருமுறை கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. அதில் வசித்த தவளை ஒன்று தண்ணீரில் அடித்து செல்லப்பட்டு ஒரு கிணற்றில் விழுந்தது. அந்த கிணற்றிலே வசித்து வந்த தவளை ஒன்று அந்த தவளையை பார்த்து நீ எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டது.அதற்க்கு கடல் தவளை நான் கடலில் இருந்து வருகிறேன் என்று பதில் கூறியது.

அதற்க்கு கிணற்று தவளை உன்னுடைய கடல் இவ்வளவு தூரம் இருக்குமா என்று கூறி கொண்டு ஒருமுறை எம்பி குதித்து தாண்டியது. அதற்கு கடல் தவளை இல்லை இதை விட பெரியது என்று பதில் கூறியது.அடுத்ததாக கிணற்று தவளை இரண்டு முறை எம்பி தாண்டி குதித்து இவ்வளவு தூரம் இருக்குமா என்று கேட்டது.அதற்கும் கடல் தவளை இதைவிட பெரியது என்று பதில் கூறியது. சரி இந்த கிணற்றில் பாதி தூரம் இருக்குமா உனது கடல் என்று கிணற்று தவளை கூறியது. அதற்கு கடல் தவளை இந்த முழு கிணற்றை விட பல மடங்கு பெரியதுகடல்என்றுபதில்கூறியது.உடனேகிணற்று தவளைக்கு மிகுந்த கோபம் உண்டாகியது கடல் தவளையை பார்த்து மூடனே இந்த கிணற்றை விட பெரிய இடம் இந்த உலகத்திலேயே கிடையாது. நீ மிக பெரிய பொய்யன் உடனடியாக இந்த இடத்தை விட்டு ஓடிப் போ என்று கடல் தவளையை விரட்டி விட்டது.

இந்த தவளைக் கதை போலத்தான் சுமார் ஐநூறு வருடங்களுக்கு முன் அடிமைகளாக்கபட்ட நாம் இன்னனும் கிணத்து தவளைகளாகவே உள்ளோம். அரசாங்கம் என்ற சொல்லை கேள்வியுற்றவுடன் நமக்கு அரச கட்டமைப்பு பற்றி எல்லாம் தெரிந்து விட்டது என்று அந்த கிணற்று தவளையை போல் நமக்கு ஆணவம் வந்து விடுகிறது. ஆனால் அரசியல் அமைப்பு என்பது கடல் போல் ஆழமானது விசாலாமனது என்பதும் தெரிந்து கொள்ளவேண்டிய பல விடயங்கள் உள்ளன என்பதனையும் உணரத் தவறிவிடுகிறோம்.

நான் இப்படிச் சொல்வது எமது நாடு கடந்த அரசாங்கத்தைப் பற்றியது. ஒன்றை மட்டும் தெரிந்து கொண்டு அதையே பிடித்து கொண்டு அதுதான் அரச அமைப்பு என்று அதற்குள்ளேயே உழன்று கொண்டிருந்தால் நாடுகடந்த அரசை முழுமையாக்க முடியாது. நாம் அனைவரும் திறந்த புத்தகமாக இருக்க வேண்டும். நல்ல கருத்துக்களை விருப்பு வெறுப்பின்றி அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து கற்க வேண்டும்.

இந்தக் கதை எழுதியதற்கு பின்னாலும் ஒரு கதையிருக்கிறது அது என்னவெனில்...

நாடுகடந்த அரசாங்கத்தில் ஒரு துணை அமைச்சர் ராஜினாமா செய்தாராம். பலமாதங்களுக்கு முன் அந்த ராஜினாமா கடிதம் பிரதமருக்கு அனுப்பபட்டதாம். மந்திரி ஒருவருக்கும், சபா நாயகருக்கும் தெரியபடுத்தபட்டதாம். மந்திரி பார்த்தாராம். ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டதோ இல்லையோ பதவி காலிதானே என்று தனக்கு விரும்பிய ஒருவரை துணை அமைச்சராக நியமித்தாராம். ஊரில உள்ள சனத்துக்கு இது தெரியாதாம். இப்படியெல்லாம் நடக்குது என்று அரசாங்கத்திலுள்ள ஒருவருக்கும் தெரியாதாம். இந்த இலட்சணத்தில் ஆள் ஆளுக்கு ஈமெயில் அனுப்பிநாட்டிலுள்ள தவளைகள் எல்லாம் அரசியல் அமைப்பு சட்டம் பற்றி விவாதம் நடாத்தி கும்மாளம் அடிக்கின்றனவாம்.

ஒன்றுமே இல்லாத நாடு கடந்த அரசாங்கத்தில், இப்படியான அரசியல் அமைப்பு விடயங்கள் தொடர்பான சர்ச்சைகளுக்கு குறைவில்லை.



முன்னர் இரண்டாகப் பிரிந்ததுபோல் இப்பொழுதும் இரண்டு கோஸ்டிகளாக பிரிந்துள்ளனவாம். அரசியல்துறை அமைச்சரின் தலைமையில் ஒன்றும், சபாநாயகர் தலைமையில் ஒன்றுமாக இன்னொன்றுமாக இரண்டு கோஸ்டிகள் மோதி வருகின்றன. இந்த மோதல்களை எதிர்கொள்ள முடியாமல், சபாநாயகர் தனது பதவியை இராஜினமா செய்திருந்தார். இரண்டு வார இடைவெளிக்குப் பின்னர் சுதாகரித்துக் கொண்டு எழுந்து வந்து மோதலை தொடர்ந்து வருகிறார். இராஜேந்திரா, தாட்சாயினி ஆகியோர் துணை அமைச்சர் பதவிகளை இழந்துள்ளனர்.

இந்த மோதல்களை பார்த்து வெறுப்படைந்த ஜெயசங்கர் முருகையா "என்னதான் நடக்கின்றது இங்கே" யாருக்காவது ஏதாவது தெரிந்தால் கொஞ்சமேனும் எங்களுக்கும் சொல்லுங்களேன்.' என்று கடிதம் எழுதியுள்ளார். பாவம் ல்ண்டனிலிருந்து சுவிற்சலாந்துக்கு நடந்து போன வீரனான அந்தாளின்ரை நிலமையே இப்படியென்றால் சனத்துக்கு இதில் என்ன விளங்கப்போகிறது?

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## கோபத்தையும் பயன்படுத்தலாம்!

'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்று திருவள்ளுவர் கூறுவார். பொதுவாக, கோபம் எங்கே எல்லாம் சேர்கிறதோ அங்கேயெல்லாம் அழிவு தான். முக்கியமாய் அழிந்து போவது மன நிம்மதி. அதன் பின் கோபத்தால் உந்தப்பட்டு செய்யும் செயல்கள் எல்லாமே மேலும் அதிக அழிவை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்கி விட்டே தணியும். இது பொது விதி. ஆனால் கோபம் கூட முறையாகப் பயன்படுத்தப்பட்டால் நல்ல மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்த வல்லது. அது எப்படி என்பதை சில உதாரணங்களுடன் பார்ப்போம்.

1943ல் ஒரு நாள் அமெரிக்க கருப்பர் இனத் தலைவரான மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்), டுப்ளின் நகரில் ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு அட்லாண்டாவிற்கு பஸ்ஸில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவருடன் அவருடைய ஆசிரியை ஒருத்தியும் பயணித்துக் கொண்டிருந்தார். வழியில் சில வெள்ளையர்கள் பஸ்ஸில் ஏறினார்கள். அவர்களுக்கு அமர இடம் இல்லாமல் போகவே பஸ் டிரைவர் மார்ட்டின் லூதர் கிங்கையும், அவரது ஆசிரியையும் எழுந்து அந்த வெள்ளையர்களுக்கு உட்கார இருக்கையை விட்டுத் தரச் சொன்னார். மார்ட்டின் லூதர் கிங்கிற்கு அது அநியாயமாகவும், அவமானம் தருவதாகவும் இருந்தது. ஆனால் அந்தக் காலத்தில் அது அடிக்கடி நடக்கக் கூடிய நிகழ்ச்சி ஆனதால் அவருடைய ஆசிரியை உடனடியாக எழுந்து விட்டார். மார்ட்டின் லூதர் கிங் வேறு வழி இல்லாமல் தயக்கத்துடன் எழுந்தார். அவர் எழத் தாமதமானதால் பஸ் டிரைவர் அவரைக் கடும் வார்த்தைகளால் திட்டினார். அது அவரை மேலும் கோபமூட்டியது. 90 மைல் தூரத்தை அவர் பஸ்ஸில் நின்றபடியே பயணிக்க நேர்ந்தது.

அந்த நிகழ்ச்சியைப் பற்றி தன் சுயசரிதையில் பிறகு எழுதிய போது மார்ட்டின் லூதர் கிங் இப்படி குறிப்பிட்டார். 'என் வாழ்வில் நான் மிக அதிக கோபம் கொண்ட நாள் அது. அந்த இரவை என்னால் என்றுமே மறக்க முடியாது'. ஒடுக்கப்படும் கருப்பு இன மக்களுக்காக அவர் குரல் கொடுக்க அந்த நிகழ்ச்சி ஒரு விதையாக அமைந்தது என்றால் அது தவறாகாது.

அந்தக் கோபத்தை அவர் தணித்துக் கொள்ள அவர் பலரும் நாடும் வழிகளை மேற் கொள்ளவில்லை. தானும் கண்டபடி திருப்பி அந்த டிரைவரைத் திட்டவோ, தாக்கவோ முனையவில்லை. ஒரு மத போதகராக வாழ்க்கையை ஆரம்பித்த அவருக்கு அந்த வழிகளில் மனம் செல்லவில்லை. தனிப்பட்ட விதத்தில் அதை எடுத்துக் கொள்ளாமல் கருப்பர்களுக்கு தொடர்ந்து நிகழும் அவமானமாகக் கண்ட அவர் கோபம் அந்த தவறான அநீதியான முறையையே ஒழிக்க வழிகளைத் தேடியது. 1955ல் மாண்ட்கோமரி பஸ் புறக்கணிப்பு போராட்டத்தைத் தலைமை தாங்கி பெருமளவில் நடத்திய அவர் பல எதிர்ப்புகளைக் கண்டார். அரசாங்கம் சின்ன சின்ன வழக்குகளிலும் அவரை சிக்க வைத்து தடை செய்யப்பார்த்தது. அவருடைய சக கருப்பர் தலைவர்களோ அவரது அறப்போராட்டம் பிடிக்காமல் அவரை எதிர்த்தனர்.

இரண்டு பக்கங்களிலும் எதிர்ப்பு அதிகமாக இருந்தது போதாது என்று வெள்ளைத் தீவிர வாதிகள் தொடர்ந்து தாக்குதல்கள் நிகழ்த்தினார்கள். 1956 ஆம் ஆண்டு அவர் வீட்டிலேயே வெடி குண்டு வெடித்தது. அதிர்ஷ்டவசமாக அவரும் அவர் குடும்பத்தினரும் உயிர் தப்பினார்கள் என்றாலும் அவர் கோபம் அதிகரித்தது. கருப்பர்களில் தீவிரவாதத்தை ஆதரிக்கும் தலைவராக அவரும் மாறி விடும் படியான மனநிலைக்குத் தானும் வந்து விடுமோ என்று கூட சந்தேகப்பட்டதாக அவர் தன் சுய சரிதையில் சொன்னார்.

ஆனால் அந்தக் கோபத்தையும் தனிப்பட்ட விதத்திலும், தனிப்பட்ட மனிதர்கள் மீதும் எடுத்துக் கொள்ளாமல் அப்போதிருந்த சமூக முறையிலேயே குற்றம் கண்ட அவர் அந்த முறையை சமூகத்திலிருந்து அகற்ற போராட்டத்தில் இறங்கினார். அதில் கடைசியில் வெற்றியும் கண்டார். 1964 ஆம் ஆண்டு சத்தியாகிரக வழியில் அவர் அந்த சமூக அநீதிக்கு எதிராக போராடி வெற்றி கண்டதற்காக சமாதான நோபல் பரிசு பெற்றார். 1968 ல் அவர் படுகொலை செய்யப்பட்ட போதும் அவர் தான் எடுத்துக் கொண்ட போராட்டத்தில் வெற்றி பெற்றதை வரலாறு இன்றும் பாராட்டுகிறது.

(அவருக்கு சத்தியாகிரக வழியில் வழிகாட்டியாக இருந்தவர் நம் மகாத்மா காந்தி. இதை மார்ட்டின் லூதர் கிங் பல முறை குறிப்பிட்டு உள்ளார். மகாத்மா காந்தியும் தென்னாப்பிரிக்காவில் இருந்த போது ரயிலில் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கி அதில் பயணித்த போது வெள்ளையரான ஒரு ரயில்வே அதிகாரியால் இறக்கி விடப்பட்டது நினைவிருக்கலாம். தன் அறப்போராட்டத்தை தென்னாப்பிரிக்கையில் தொடங்கியதற்கு அந்த நிகழ்ச்சி தான் விதையாக இருந்தது.)

பஸ்ஸில் நின்று கொண்டே பயணிக்க வைத்த டிரைவரை வாயிற்கு வந்தபடி திட்டியோ, இறங்கிய பிறகு கல்லெடுத்து எறிந்தோ, பிறகு எதாவது ஒரு வெள்ளையருக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்தோ தன் கோபத்தை அவர் தீர்த்துக் கொண்டிருந்தால் தனிமனித கோபத்தைத் தீர்த்துக் கொண்ட ஒரு சராசரி மனிதனின் செய்கையாய் போயிருந்திருக்கும். அமெரிக்க கருப்பர்களுக்கு சம உரிமை கிடைத்த சரித்திரம் உருவாகி இருக்காது. கோபம் நம்முள் பெரியதொரு சக்தியை உருவாக்க வல்லது. உறுதியாகச் செயல்பட வைக்கும் சக்தி வாய்ந்தது. கோபம் இருக்கும் நேரத்தில் செயல்படாமல் இருப்பது தான் மிகவும் கஷ்டம். அப்படிப்பட்ட நேரத்தை முறையாகப் பயன்படுத்தினால் அந்தக் கோபமும் சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்த உதவும்.

இது பெரும் தலைவர்களுக்குத் தான் முடியும் என்பதல்ல, சாதாரண மனிதர்களுக்கும் முடிந்தது தான். எனக்குத் தெரிந்த ஒருவர் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்தவர். அவருக்கு உதவி செய்து வந்தவருடைய மகன் ஒருமுறை அவரிடம் பலர் முன்னிலையில் ?எங்கள் தயவில்லாமல் நீங்கள் இருக்க முடியாது? என்று சொல்லிக் காட்ட அவருக்கு அது ரோஷத்தைக் கிளப்பி விட்டது. "உங்கள் தயவில்லாமல் உங்களை விட உயர்ந்து காட்டுகிறேன்" என்று சவால் விட்டுச் சென்றவர் பத்துவருடங்களில் அப்படியேசாதித்தும் காட்டினார். அவருக்குள்ளே சாதித்துக் காட்ட வேண்டும் என்கிற ஒரு வேகத்தை அந்தக் கோபம் கிளப்பி விட்டது போல இருந்தது. பல சமயங்களில் கோபம் இது போல் பெரிய உந்து சக்தியாக அமையக் கூடும். பெரிய மாற்றங்களுக்கான பிள்ளையார் சுழியை அது போடக் கூடும். அதனால் அர்த்தமில்லாத கோபங்களை அவ்வப்போதே விட்டுத்தள்ளுங்கள். அர்த்தமுள்ளதாய் கோபம் வரும் போது அதனை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு தீர்வையோ, நல்ல மாற்றத்தையோ உருவாக்க முடிந்தால் கோபமும் நல்லதே அல்லவா?

*- என்.கணேசன்*

# அமெரிக்கா - இந்தியா - தமிழீழம் நலன்கள் சந்திக்குமா ?






**கோபி**
*ஒரு பேப்பர்*

கடந்தமுறை இப்பத்தியை நிறைவு செய்யும் போது, சிறிலங்காவில் மேற்குலகத்திற்கு இசைவாகச் செயற்படக்கூடிய ஒரு ஆட்சி ஏற்படுமிடத்தில் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சி குறைப்பிரசவமாக மாறிவிடும் அபாயம் உள்ளமையை நாம் கவனத்தில் கெள்ளவேண்டியவர்களாக உள்ளோம் என குறிப்பிட்டிருந்தோம். இங்கு மேற்குலகம் எனப் பொதுவில் அடையாளப்படுத்துவதை விடுத்து, ஐக்கிய அமெரிக்காவின் ஒழுங்குக்குள் வரக்கூடிய ஆட்சி மாற்றம் நிகழுமானால், சிறிலங்கா மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுவது நிறுத்தப்படுமா என்ற கேள்வியை நாம் முன்வைக்கலாம். ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தை முன்மொழிந்ததன் மூலம் அமெரிக்கா தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளமையால் அதனை நேரடியாக இவ்விடயத்துடன் தொடர்புபடுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

இலங்கைத்தீவு விடயத்தில் அமெரிக்காவின் ஈடுபாடு தொடர்பில் பல்வேறு வியாக்கியானங்கள் வழங்கப்படுகின்றன. அவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துகளாக இருந்தபோதிலும், நீண்டகால மூலோபாய அடிப்படையிலேயே அமெரிக்கா செயற்படுகின்றது என்பதில் கருத்து வேறுபாடுகளில்லை. மூன்றாம் உலக நாடுகளை தமது ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்கு அமெரிக்கா முற்படுகிறது. அதனடிப்படையில் முரண்டுபிடிக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க முனைகிறது என்ற கருத்தில் இப்பத்தி கவனத்தைச் செலுத்துகிறது.

கொமியுனிஸ்ட் நாடுகளுடனான பனிப்போருக்கு பிந்திய காலத்தில், அமெரிக்கா தனது ஒழுங்குக்குள் நாடுகளைக் கொண்டு வருகிறது என்பதற்கு உதாரணமாக யூகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான், ஈராக், எகிப்து, லிபியா ஆகிய நாடுகள் விடயத்தில் அமெரிக்கா நடந்து கொண்டதையும், தற்போது மியன்மார் (பர்மா), சிரியா ஆகிய நாடுகளில் அது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளலாம். நீழும் இப்பட்டியலில் சிறிலங்காவும் சேர்க்கப்பட்டுள்ளமையை ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் வெளிக்காட்டி நிற்கின்றது. எல்லா நாடுகளிலும் ஒரேவிதமான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்பதனால் இலங்கைத்தீவில் ஈராக்கில் நடந்துகொண்டதுபோல் அல்லது சிரியாவில் நடைபெறுவதுபோல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்க வேண்டியதில்லை.

இலங்கைத்தீவின் ஆட்சி மையமான கொழும்பு அரசாங்கத்தினை தமது ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்கு அமெரிக்கா முயன்று வருகிறது என்பதனை இராஜபக்ச அரசாங்கம் அறிந்துவைத்துள்ளது.

இருப்பினும் அமெரிக்கா விரும்புகிற ஒரு மாற்றத்திற்கு தன்னை உட்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் அது இருக்கிறது. இதனை சிறிலங்கா அரசாங்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையாக, அல்லது தமது இறைமை மீதான பற்றுதலாக அல்லது வலதுசாரி - இடது சாரி அரசியலாக பார்க்க முடியாது. மாறாக தன்னை மாற்றத்திற்கு உள்ளாக்குவதற்கு சிறிலங்காவின் அரச கட்டமைப்பு இடம் தரமறுக்கின்றது. ஆகையால் ஆட்சியமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்த முனைவதன் மூலம் அரசாங்கம் அனுபவித்துவரும் பெரும்பான்மை ஆதரவினை இழந்துவிடுவதில் நாட்டம் கொள்ளாது.

சிறிலங்காவின் அரச கட்டமைப்பு என்பது மகாவம்ச மனோபாவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள சிங்கள பௌத்த மேலாதிக்க அமைப்பு. அங்கு தேர்தல் மூலம் ஆட்சியைத் தெரிவு செய்தல் போன்ற சனநாயக வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், தாராண்மைவாத சனநாயக அணுகுமுறையானது தமது கட்டமைப்பை சீர்குலைத்து விடும் என அதன் ஆட்சியாளர்கள் அஞ்சுகிறார்கள். அதனை பெரும்பான்மையான சிங்கள மக்கள் கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள்வதனாலேயே தமிழ்மக்களுடன் அதிகாரத்தினை பகிர்ந்து கொள்வது இதுவரை சாத்தியப்படவில்லை. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும், இராணுவ அதிகாரங்களையும் கொண்ட மகிந்த அரசினால், சிறிலங்காவின் அரச கட்டமைப்பில் மாற்றத்தினை கொண்டுவரமுடியாது என்பதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1987ல் சர்வ அதிகாரங்களையும் கொண்டிருந்த அப்போதைய அதிபர் ஜே.ஆர்.ஜயவர்தன, பதின்மூன்றாம் திருத்தச்சட்ட மூலத்தை மையப்படுத்திய இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்காக நாடு முழுவதிலும் ஊரடங்கு உத்தரவினை பிறப்பிக்க வேண்டியிருநதது என்பதனை இவ்விடத்தில் கவனத்தில் கொள்க.

தாராண்மைவாத சமாதான (liberal peace) அணுகுமுறையின் அடிப்படையில் இலங்கைத் தீவினை ஆட்சிமையத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமெரிக்கா முயற்சிக்கின்றது என்ற கருத்தியலில் பெரும்பாலான தமிழ்த் தேசியவாதிகள் உடன்படுகிறார்கள். ஆனால் அதனை அடையும் விடயத்தில் எத்தகைய அணுகுமுறை கடைப்பிடிக்கப்படும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

ஒரு தரப்பினர், தற்போதுள்ள மகிந்த இராஜபக்ச தலைமையிலான ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தை பதவியிறக்கம் செய்து ஐக்கிய தேசியக் கட்சி போன்ற அதிகமான மேற்குலகசார்புடையவர்களை ஆட்சியில் அமர்த்த முனைவார்கள் என்ற கருத்தை வெளியிடுகிறார்கள். மற்றைய தரப்பினர், சிறிலங்காவின் அரச (state) கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே அமெரிக்கா இலங்கைத்தீவினை தமது ஒழுங்குக்குள் கொண்டு வர எத்தனிக்கும் என வாதிடுகிறார்கள்.

இங்கு குறிப்பிட்டுள்ள இரண்டாவது தரப்பினர் எதிர்பார்ப்பதனைப்போல் சிங்கள பௌத்த மேலாதிக்க அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுமாயின், அதுவே தமிழ்த் தேசிய இனத்தின் நலன்களுடன் ஒன்றிணையும் சந்திப்புப் புள்ளியாக அமையும். இக்கட்டமைப்பு உடைக்கப்படாமல் தமது அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாது என்ற யதார்த்தத்தினை தமிழ்மக்கள் நன்கறிவார்கள்.

மேற்குலகம் விரும்பும் தாராண்மைவாத சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கு, அதாவது இலங்கைத் தீவினை தமது ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்கு, சிங்கள-பௌத்த மேலாதிக்க சிந்தனையே இப்போது முட்டுக்கட்டையாக இருக்கிறது. முன்னர் இவ்வாறான முட்டுக்கட்டையாக விடுதலைப்புலிகளை இருப்பதாக மேற்குலகம் கருதியது என்பதனை மறுப்பதற்கில்லை.

இங்கு இன்னொரு முக்கியமான தரப்பான இந்தியாவை எடுத்துக் கொண்டால், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளில் சிறிலங்காவிற்கு முழு ஆதரவையும் வழங்கிய அதனால், போருக்கு பிந்திய காலத்தில், எதிர்பார்த்த வகையில், தமது நலன்பேணும் செயற்பாடுகளை செய்யமுடியாமல் உள்ளது.

தனது நலன் சார்ந்த செயற்பாடுகளை இலங்கைத்தீவில் மேற்கொள்வதற்கு தடையாக இருப்பது சிங்கள பௌத்த மேலாதிக்க கட்டமைப்பு என்பதனையும், இக்கட்டமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தாமல், இந்தியாவின் நலன்களை இலங்கைத் தீவில் ஈடேற்றிக் கொள்ள முடியாது என்பதனையும் காலம் கடந்தாயினும் இந்தியா உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளது.

பொது எதிரியை எதிர்கொள்ளும் விடயத்தில் தான் ஈழத்தமிழ் மக்களும், இந்தியாவும், மேற்குலகமும் ஒரு புள்ளியில் சந்திக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆனால் இவ்வாறான இணைவு சாத்தியமா என்பது எதிர்கால அரசியல் நகர்வுகளில் மாத்திரம் தங்கியிருக்கிறது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் சிங்கள-பௌத்த மேலாதிக்கம் உடைக்கப்பட வேண்டியது அதன் இருப்பு சார்ந்து உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாக அமைகிறது. மற்றைய இரண்டு தரப்பிற்கும் இத்தகைய அவசரமில்லை. அதுபோல் தமது மேலாதிக்கத்தினை தக்க வைப்பதில் உறுதியாகவுள்ள கொழும்பு ஆளும் வர்க்கம் தமக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்கொள்வதில் தந்திரோபாயமாக நடந்து கொள்ளுவதற்கான வாய்ப்புகள் உண்டு. இத்தந்திரோபாய நடவடிக்கைக்ளில் ஒரு பகுதியாக தமிழ்த்தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் அரைகுறையான தீர்வு முயற்சிகளில் அவை கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கலாம்.

**கடந்த அதிபர் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்ததிலிருந்து தற்போது ரணில் விக்கிரம சிங்கவும் கூட்டுச் சேரந்துள்ளதுவரை, சிங்கள பௌத்த மேலாதிக்கத்துடன் சமரசம் செய்து கொள்ளவே கூட்டமைப்பு விரும்புகிறது.**

சிறிலங்காவின் ஆட்சியமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற விடயத்தில், புலம்பெயர் தமிழ் அமைப்புகளும், தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி, தமிழ் குடிசார் சமூகம் என்பன முனைப்பாக இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், குறிப்பாக சம்பந்தன் - சுமந்திரன் குழுவினர் குழப்பமான நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். சிங்களப் பேரினவாதத்துடன் கரங்கோர்த்துக் கொள்வதில் கூட்டமைப்பினர் மத்தியில் தயக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த அதிபர் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்ததிலிருந்து தற்போது ரணில் விக்கிரமசிங்கவும் கூட்டுச் சேரந்துள்ளதுவரை, சிங்கள பௌத்த மேலாதிக்கத்துடன் சமரசம் செய்துகொள்ளவே கூட்டமைப்பு விரும்புகிறது. சம்பந்தன் சுமந்திரன் போன்றவர்கள் தமிழ்த்தரப்பின் பிரதிநிதிகளாக வெளியுலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவதில் உள்ள ஆபத்து இதுதான். இவற்றின் அடிப்படையில் ஆட்சியமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதற்கான வாயப்புகள் குறைந்தளவிலேயே தென்படுகின்றன.

Tweet your views to @orupaper

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 820 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **Coventry** | |
| Eellakanthan Temple | 02476663554 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace | 020 8813 9663 |
| Spicy Palace restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |


BULLDOG™
Energy Drink
with Taurine
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE INTERNATIONAL TRADE
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE INTERNATIONAL TRADE
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE INTERNATIONAL TRADE
SHEER ENERGY
35p
Power to topple any Bull!
BULLDOG SHEER ENERGY
ENERGY DRINK WITH TAURINE
BULLDOG SHEER ENERGY
Regular
Sugar Free
Sun Mark Limited
World Class Products
ROBUST
Gluco-Max
Max Energy
PURE HEAVEN
ROYALTY
Taste of Distinction
BULLET
ENERGY DRINK
Golden Country
BULLDOG
SHEER ENERGY
summer fine
Anmol
LASER
NO CHOLESTEROL
English Breeze
Flower Garden
SUMO
TOUGH ON GERMS
TOILET GUARD
FIRST LINE OF DEFENCE
Comfi
Soft & Strong
www.sunmark.co.uk

# இலங்கையை விசாரிக்கச் சொல்லும் அமெரிக்க 'ராப்' இசை



இலங்கை ஊடகங்களில் மிக அண்மைக் காலமாக அடிக்கடி குறிப்பிடப்படும் நாடு தென் கொரியா. அமெரிக்காவின் நட்பு நாடு.

ஆசியாவில் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் வரிசையில் இதுவும் ஒன்று.

உயர்தொழில்நுட்ப பொருட்களின் ஏற்றுமதியில் ஜப்பானுடன் போட்டி போடும் நாடு.

இத்தகைய பொருண்மிய ஜாம்பவானின் உதவியை நாடி, இலங்கை செல்கிறது, என்பதுதான் ஊடகத் தகவல்களின் ஊடாக பெறப்படும் செய்தி.

தென்கொரியா, ஆண்டு தோறும் 10,000 இலங்கையருக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது.

பாமரர்கள் மத்தியகிழக்கிற்குச் செல்ல, படித்தவர்கள் தென் கொரியாவிற்குச் செல்கிறார்கள்.

**எண்ணெய்காக அலைந்து திரியும் மகிந்தரின் மந்திரிகள், மேற்குலகோடு முரண்நிலையை வளர்த்துக் கொண்டால், நெருக்கடி நிலைமை பூதாகரமாகும் வாய்ப்புக்களே அதிகம்.**

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கணிசமான அளவு குறைப்பதற்கு தென்கொரியா உதவிவருவதாகக் கூறும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், 8 சதவீத பொருளாதார வளர்ச்சியடைவதாக பெருமைப்படும் அரசு, சொந்தமக்களை ஏன் தென்கொரியாவிற்கு உழைப்புச் சுரண்டலிற்காக ஏற்றுமதி செய்கிறது என்கிற விவகாரத்தை விளங்கப்படுத்துவதில்லை.

அங்கு செல்பவர்களுக்கு, கொரிய மொழியில் அறிவு குறைவாக இருப்பதுதான் இப்போதுள்ள பாரிய பிரச்சனை.

ஆகவே கொரிய மற்றும் சீன மொழியில், குறுகியகால பயிற்சி பட்டறைகளை இலங்கை அரசு ஆரம்பித்தாலும் ஆச்சரியமடைய முடியாது. புலம்பெயர் நாடுகளிலிருந்து இலங்கைக்கு விடுமுறையில் செல்பவர்கள், அங்கு எல்லாம் 'அந்த மாதிரி' இருக்கிறதென்று வாழ்த்துரை வழங்கினாலும் 'இந்த மாாதிரி' இருக்கும் நிகழ்வுகளையும் ஒருகணம் உற்று நோக்க வேண்டும்.

நாடு முழுவதும் அகலமாக நிர்மாணிக்கப் பட்டிருக்கும் வீதிகளில் சீனாவிற்கான கடன் தொகையும் புதைந்து கிடக்கிறது.

சுவாசிக்கும் அமைதிக்காற்றில், முள்ளிவாய்க்காலில் எழுந்த அவலக்குரல்களும் கலந்திருக்கிறது.

வன்னித் தெருக்களில், துரத்தியடிக்கப்பட்ட மக்கள் அன்று சிந்திய இரத்தம், ஆழ உறைந்து கிடப்பது உங்கள் கண்களுக்குப் புலப்படாது.

நில ஆக்கிரமிப்பில், சர்வதேச வல்லரசுக் கரங்களோடு கூட்டுச் சேர்ந்து வெற்றிவாகை சூடிய பேரினவாதச் சிப்பாய்கள், வழிமறித்துச் சோதனை செய்யவில்லை என்பதால், நாட்டில் சமாதான சகவாழ்வு ஏற்பட்டுவிட்டதெனக் கற்பிதம் கொள்ளக் கூடாது.

சுயநிர்ணய உரிமை, தேசியத்துவம் போன்ற பிறப்புரிமைச் சொல்லாடல்கள், அர்த்தமற்ற வார்த்தைகளென சங்கரியார் கூறும் அடிபணிவு அரசியல் கூற்றுக்களை இவை நியாயப்படுத்திவிடும்.

இதைத்தான் சிங்களமும் எதிர்பார்க்கின்றது.

நடந்த, இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழின அடியழித்தலை மறந்து, அபிவிருத்திப் பணியில் கலந்து கொள்ள, புலம்பெயர் மக்களே உங்கள் முதலீடுகளோடு கொழும்பிற்கு வாருங்களென்று மகிந்தர் கூவியழைப்பதை, எமது மேலெழுந்தவாரியான பார்வைகள் ஏற்புடையதாக்கிவிடும்.

தற்போது எண்ணெய்காக கட்டாரிற்கு ஓடுகிறார் ரவூப் ஹக்கீம். சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்யை பெற வியட்னாமிடம் கையேந்துகிறார் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

ஆண்டொன்றிற்கு 14 கப்பல்களில் இலங்கைக்கு எண்ணெய் கொண்டு வரப்படுகிறது.

அதில் 13 ஈரானிடமிருந்து ஒரு கப்பல் சவூதி அரேபியாவிலிருந்து வருகிறது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையால், இலங்கையின் எண்ணெய் இறக்குமதி முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில், கடந்த வருடம் ஒக்டோபரில் வியட்னாம் பெற்றோலியக் கம்பனி ஒன்றுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், 500 மில்லியன் டொலர் பெறுமதியான பெற்றோலியப் பொருட்களை, அங்கிருந்து இறக்குமதி செய்யவுள்ளது இலங்கை அரசு.

கடந்த மாதம் அனைத்துலக நாணய நிதியம் வழங்கிய 427 மில்லியன் டொலர்கள், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்யை வியட்னாமிலிருந்து வாங்குவதற்கு செலவிடப்படும் போல் தெரிகிறது.

இவைதவிர, திறைசேரியில் இருக்கும் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு, இன்னமும் மூன்றரை மாதத்திற்கான இறக்குமதிக்கு மட்டுமே போதுமானதாகவுள்ளதாக அதன் செயலாளர் பீ.வி.ஜெயசுந்தர தெரிவிக்கின்றார்.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

பாலஸ்தீன அதிபர் அப்பாசை அழைத்து, எண்ணெய் உற்பத்தி செய்யும் மத்திய கிழக்கு நாடுகளோடு, இணக்கப்பாட்டு அரசியலை வளர்த்துக் கொள்ளலாமென மகிந்தர் மேற்கொள்ளும் நகர்வுகள், சாதகமான நிலைமையை உருவாக்குமாவென்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

எண்ணெய்காக அலைந்து திரியும் மகிந்தரின் மந்திரிகள், மேற்குலகோடு முரண்நிலையை வளர்த்துக் கொண்டால், நெருக்கடி நிலைமை பூதாகரமாகும் வாய்ப்புக்களே அதிகம்.

அத்தோடு, நவதாராண்மைவாதம் கோட்பாட்டை (NEOLIBERALISM) ஆசியாவிற்கு ஏற்றுமதி செய்யத் துடிக்கும் அமெரிக்கா, அரசின் தடுமாற்றத்தை ஆட்சி மாற்றமொன்றினை உருவாக்க பயன்படுத்துமாவென்ற எதிர்பார்ப்பு பலரிடம் காணப்படுவதை நோக்கலாம்.

ஆனாலும் தென்கிழக்காசியாவில், யதார்த்தவாதமும், நவதாராண்மைவாதமும் கலந்த பொருண்மியக் கட்டமைப்பொன்று காணப்படுவதாக பல ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை, 'படைத்துறை வலுவினை அதிகரிப்பதே, அரசின் நலன்களைப் பாதுகாக்க உதவும்' என்கிற யதார்த்தவாதத்தின் அடிப்படையில் நம்பிக்கை கொண்ட தேசமாக இருப்பதைக் காணலாம்.

சர்வதேச உறவில் (IR), யதார்த்தவாதம், நவதாராண்மைவாதம் மற்றும் உருவாக்கவியல் (Constructivism) குறித்து உரையாடப்படும் வேளையில், இந்தியாவிற்கு முதல் இரண்டு கருத்துநிலைகளும் பொருந்தினாலும், இலங்கையில் யதார்த்தவாதக் கருத்துருவமே மேலோங்கிக் காணப்படுகிறது.

ஆகவே இத்தகைய இலங்கையின் ஒரு நிலை கருத்து நிலைப்பாட்டை, இந்தியா கையாள்வது இலகுவாக இருக்கிறது.

மேற்குலகைப் பொறுத்தவரை, ஆசிய - பசுபிக் பிராந்திய பரந்துபட்ட தளத்தினூடாகவே இலங்கையை நோக்கும் என்பது யதார்த்தமான பார்வையாகும்.

இச்சிக்கலைப் புரிந்து கொள்ளாமல், இலங்கை குறித்தான அமெரிக்க நிகழ்ச்சி நிரலில், நவதாராண்மைவாதம் போக்கினை அவதானிக்க வேண்டுமென்கிற பார்வையைக் கொண்டவர்கள், ஈழப்பிரச்சினையில் மேற்குலக சார்பு நிலையைப் பேண வேண்டுமென கருதுவது போலுள்ளது.

பிரேசில், இரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென்னாபிரிக்கா போன்ற வளர்ச்சியுறும் நாடுகளின் கூட்டமைப்பான பிரிக்சின் (BRICS) எழுச்சி, ஆசியாவில், நவதாராண்மைவாதத்திற்கு சவாலாக அமையப்போகிறதென்பதை அதன் நகர்வுகள் உணர்த்துகின்றன.

அதேவேளை பிரிக்ஸ் இன் ஊடாக, தனது நாணயமான "றென்மின்பி"யை, அமெரிக்க டொலரிற்கு மாற்றீடாக கொண்டுவரும் முயற்சியில் சீனா அதிக அக்கறை கொள்கிறது.

**வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கணிசமான அளவு குறைப்பதற்கு தென்கொரியா உதவிவருவதாகக் கூறும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், 8 சதவீத பொருளாதார வளர்ச்சியடைவதாக பெருமைப்படும் அரசு, சொந்தமக்களை ஏன் தென்கொரியாவிற்கு உழைப்புச் சுரண்டலிற்காக ஏற்றுமதி செய்கிறது என்கிற விவகாரத்தை விளங்கப்படுத்துவதில்லை.**

அனைத்துலக நாணய நிதியத்திற்குப் பதிலாக, அபிவிருத்தி வங்கி ஒன்றினை நிர்மாணிக்க இந்த "பிரிக்ஸ்" கூட்டமைப்பு முயற்சிப்பதாகவும் செய்திகள் வருகின்றன.


ஆகவே மெற்குலகின் NEOLIBERALISM என்பது, ஆசியாவில் வேறு பரிமாணத்தை நோக்கி மாற்றமடைவதை, சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழ்மக்கள் அவதானிப்பது நல்லது.

அத்தோடு அமெரிக்காவின் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ராப் அவர்கள், இலங்கை அரசே சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டுமெனக் கூறுவதையும் கவனிக்க வேண்டும்.






# கோழியும் குஞ்சுகளும்...



சுகி
*(ஒருபேப்பருக்காக)*

நாடு விட்டு நாடு வந்து நாம் படுகிறபாடு கொஞ்ச நஞ்சமில்லை என்று நாம் எல்லோருமே அலுத்துக் கொண்டாலும், இயல்பாகவே நாட்டில் ஏறக்குறைய எல்லா விடையங்களுமே ஒரு சின்ன போராட்டமாகவோ, போட்டியாகவோ அல்லது எமது பங்கை நாம் எடுத்து சேமித்து வைக்காவிட்டால், பிறகு வந்து எடுக்க இருக்கமாட்டாது என்ற நிலைமைக்குள் வளர்ந்ததால், ஒரு விழிப்புணர்வும், உசார்தன்மையும் அத்தோடு சின்ன வயதில் இருந்தே நீதிக்கதைகளையும், நல்வழி, திருக்குறள் என்று தலைக்குள் புகுத்தப்பட்ட வாழ்வியல் சிந்தனைகளால், எமது போதாமைக்குள்ளும், ஒரு தாராளுன்மையுடன், ஊருடன் ஒத்து வாழ்ந்துவந்த நிலை, இங்குவந்தும் எம்மில் பலருக்கு எதையும் தாங்கும் ஒரு மனோநிலையையும், சோதனைகளையும், வேதனைகளையும் உள்வாங்கிக் கொண்டு அதே தளராத மனோபாவத்துடன் புதிய, மொழி தெரியாத நாட்டில் கூட வாழப் பழகிக் கொள்ளவைத்தது.

நாம் பழகிக்கொண்டாலும், இங்கு எம்மில் பலருக்கு புரியாத புதிராக இருப்பது பிள்ளைகளை எப்பிடி கையாளுவது என்பது தான். அங்கு பிறந்து 10வயதளவில் இங்குவரும் பிள்ளைகளும், இங்கேயே பிறந்து இங்கேயே வளரும் பிள்ளைகள் என்றும், தாய்மொழி தெரிந்த, தெரியாத பிள்ளைகள் என்றும், தமிழர்கள் செறிந்து வாழும் பகுதியில் வளரும், வளராத பிள்ளைகள் என பல வேறு சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் அந்தந்த சூழ்நிலை பாதிப்பை உள்வாங்கி வளர்கிறார்கள். அவர்களின் வாழ்கைமுறையும் அதற்கேற்ப இருக்கும் போது, சில நேரங்களில் தெரிந்தோ தெரியாமலோ பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உள்ள இடைவெளி அதிகரிந்துக் கொண்டே போகிறது. அதிலும் ஊரில், நாட்டில் என்று வரும் பல்வேறு பொருளாதார, வதிவிடஉரிமை பிரச்சனைகளில் மூழ்கி போயிருக்கும், அல்லது குடும்ப நலனுக்காக வியாபாராத்தை விஸ்தரிப்பதிலும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் முழு மூச்சாக இருக்கும் பெற்றோர், எல்லாம் வெளிக்க, குஞ்சுகள் பின்னாலே வருகின்றனவா என்று கொஞ்சம் தலையை திருப்பி பிள்ளைகளைப் பார்த்தால், அங்கு பிள்ளைகளுக்கும் இவர்களுக்கும் உள்ள இடைவெளி அதிகரித்து போன நிலையில், இழந்த நேரத்தையும், காலத்தையும் மீளபெறமுடியாத, ஒரு பெரிய இடைவெளி உள்ளதை உணரும்போது மிகவும் வேதனையும், தங்கள் மேல் கழிவிரக்கமும் படுவதோடு மட்டுமல்லாது பிள்ளைகள் மேல் தொடர்ச்சியான கண்காணிப்பு, இறுக்கமான கட்டுப்பாடு, வாக்குவாதம், என்பவற்றால் நிலைமையை விரைவாக சீர்படுத்த நினைத்து, இன்னும் சீர்குலைந்து, பிள்ளைகளின் தொடர்பை நிரந்தரமாக இழந்துவிடுவோமோ என்ற பயத்தில் வாழ்கிறார்கள்.

இங்குவளரும் பிள்ளைகள் சிலர் இரண்டு காலாச்சாரத்திலும் தமக்கு அனுகூலமானதை சந்தர்பத்திற்கு ஏற்றால் போல தமக்கு சாதமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். பிள்ளைகளுக்கு நீங்கள் வழங்கும் தொடர்ச்சியான, நிபந்தனைகள் அற்ற அன்பு அவர்களை உடனடியாக இல்லாவிட்டாலும், காலப்பொழுதில் சரியான பாதைக்கு இட்டுச்செல்லும். அவர்கள் மேல் நாம் வைக்கும் நம்பிக்கையும், அவர்களின் பார்வையில் இருந்து அவர்கள் சொல்வதை விளங்கிக்கொள்ளும் பக்குவமும் இருந்தால் போதுமானது. அழுது ஆர்பார்ட்டம் செய்வதாலோ, உங்கள் அன்பை பணயமாக வைத்து மிரட்டுவதாலோ குறுகிய காலத் தீர்வைக் அடையக்கூடியதாக இருந்தாலும் அது நிரந்தரமான ஆரோக்கியமான தீர்வாக இருப்பதில்லை. இதற்கு சில வருடங்கள் கூட எடுக்கலாம்.

இங்கு வழிகாட்டுதல் (Mentoring) என்று அழைக்கப்படும் திட்டத்தின் கீழ் சில பகுதிகளில் council இலின் உதவியோடு 11 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளோடு சேர்ந்து, ஒரு வழிகாட்டுபவர்போல நம்பிக்கையான நட்பை பேணுவதற்கு, அந்தந்த சமூகத்தில் தொண்டர்களை, அவர்களின் விருப்பத்தின் பெயரின் தேர்தெடுத்து, பயிற்ச்சி அளித்து, அந்தந்த சமூகங்களோடு சேர்ந்து பணிசெய்வதற்கும், அவர்களின் குழந்தைகளுக்கு நம்பிக்கையான வழிகாட்டுபவராக இருப்பதற்கும் வழிகள் செய்யப்பட்டுள்ளன.

உதாரணமாக கரோபகுதியில் உள்ள வழிகாட்டுதல் Mentoring திட்டம், அப்பகுதியில் உள்ள 11 வயதிற்கும் 18 வயதிற்கும் உள்ள பிள்ளைகளுக்கு வழிகாட்டும் உதவியை இலவசமாக Middlesex Tamil Academy என்ற நிறுவனத்தின் ஊடாக தமிழ் பிள்ளைகளுக்கு வழங்கி வருகின்றது. உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் இப்படியான தனிப்பட்ட (one to one) வழிகாட்டும் உதவியிருந்தால் நன்று என்று நினைக்கும் இடத்து, உங்கள் பிள்ளைகளும் அதை விரும்பும் இடத்து அவ்வுதவியை பெறுவதற்கு இன்நிறுவனத்தை அணுகலாம். நன்கு பயிற்றப்பட்ட தொண்டர்கள் இத்திட்டத்தின் கீழ் பணியாற்றுவதற்கு முன்வந்துள்ளார்கள். மேலதிக விபரங்களுக்குmiddlesextamilacademy @gmail.com என்ற முகவரியிலோ அல்லது அத்திட்டத்தின் இணைப்பாளர்களை பின்வரும் கைத்தொலைபேசியின் மூலமோ தொடர்பு கொள்ளலாம் 07780746218 / 07513350007.

**குஞ்சு பருவத்ததை தாண்டிவிட்டால் அவற்றையிட்டு கோழி கவலை கொள்வதில்லை. பிள்ளைகளுக்கும் ஒரு வழிகாட்டல் துணை இருந்தால் அந்த குஞ்சுப் பருவத்தை சரியான முறையில் கடந்து விடுவார்கள்.**

இந்த வயது ஒரு பொல்லாத வயது. இந்த தடுமாற்றமான வயதைத்தாண்டிவிட்டால் ஓரளவு பிரச்சனை தீர்ந்தது மாதிரி என்று நினைக்கும் பெற்றோர் அதிகம். ஆனால் வேலை பளு, வயோதிபர் பராமரிப்பு, மற்ற குழந்தையின் உடல்நிலை, அவர்களின் நோய்கள், உடல் நிலை என்பவற்றால் 11 -18 வயதுப் பிள்ளைகளின் பிரச்சனைகளை மனம்விட்டு கதைத்து அவர்களோடு நேரத்தை செலவிட நேரமில்லாமல் அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அப்பிடிபட்டவர்களுக்கு இந்த திட்டங்கள் உறுதுணையாக இருக்கும். கோழிகுஞ்சுகள் எந்த நேரமும் தாயுடன் நிற்பதில்லை. அதைப் பருந்தில் இருந்து பாதுகாப்பதற்கு, அவற்றுக்கு நிறம் அடித்துவிடுவது உண்டு. அந்த குஞ்சு பருவத்ததை தாண்டிவிட்டால் அவற்றையிட்டு கோழி கவலை கொள்வதில்லை. பிள்ளைகளுக்கும் ஒரு வழிகாட்டல் துணை இருந்தால் அந்த குஞ்சுப் பருவத்தை ஒரு சரியான முறையில் கடந்து விடுவார்கள்.







ஒரு பேப்பர்

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address:

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# தோல்வியை தடுக்கும் நடவடிக்கைகளில் சார்க்கோசி......

## ஜனநாயக-எதிர்ப்பு சட்டங்களை முன்மொழிகிறார்



*பிரான்ஸ் அதிபர் தேர்தலின் முதல் கட்ட வாக்கெடுப்பு இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள நிலையில் தற்போதைய அதிபர் நிக்கலஸ் சார்க்கோசி தோல்வியைத் தழுவுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. துலூஸ் படுகொலைகளையடுத்து அதிகரித்திருந்த சார்க்கோசியின் செல்வாக்கு சரிந்து செல்வதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. 18 வருடங்களுக்கு பின்னர் சோசலிசக்கட்சியின் வேட்பாளர் பிரான்சுவா ஹொலண்ட் அதிபராக தெரிவு செய்யப்படுவார் என பிரித்தானிய ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன. இந்நிலையில் பிரான்ஸ் அரசியல் நிலவரம் தொடர்பாக Antoine Lerougetel என்பவர் wsws.org இணையதளத்தில் எழுதிய கட்டுரையின் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.*

ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு வெளியில் செயல்படும் 'தனித்த வெறியர்களின்' அல்லது 'சுயமாக-தீவிரப்பட்டவர்களின்' பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக என்ற வெளிவேஷத்தில் பிரெஞ்சு ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோசியின் அரசாங்கம் புதிய ஜனநாயக-எதிர்ப்பு சட்டங்களை நேற்று முன்மொழிந்தது. இந்த முறைமைகள் 'பயங்கரவாத' வலைத் தளங்களைப் பார்வையிடும் அல்லது பயங்கரவாத பயிற்சிகளைப் பெற வெளிநாடுகளுக்கு பயணிக்கும் மக்களைத் தண்டிக்கும்.

"நீதித்துறை மந்திரியின் கருத்துப்படி, குழந்தைகளைப் பாலியல்ரீதியில் துன்புறுத்துவோருக்கு (paedophiles) எதிராக போராடுவதற்காக தற்போது செய்யப்பட்டதைப் போல பயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் வலைத் தளங்களை 'வழக்கமாகவும், சட்டபூர்வ தேவையின்றியும்' பார்வையிடுவோரை அந்த சட்ட மசோதா தண்டிக்கிறது.. மரத்துப்போன வெறுப்போடு கவர்ந்திழுக்கும் மற்றும் தூண்டிவிடும் பிம்பங்களிடம் தனிநபர்கள், பெரும்பாலும் இளைஞர்களும் மற்றும் எளிதில் வளைந்து கொடுக்கக்கூடியவர்களும்' மாட்டிக் கொள்வதை நாம் அனுமதிக்க முடியாது. அவர்களை வெளியுலகிற்குக் காட்டுபவர்களுக்கும் விதிவிலக்கு அளிக்க முடியாது".

குழந்தைகளைப் பாலியல்ரீதியில் துன்புறுத்துவோருக்கு எதிரான விதிகளை முன்மாதிரியாக கொண்ட இச்சட்டத்தின் தண்டனைகள், 'வழக்கமான பார்வையாளர்களுக்கு' இரண்டு ஆண்டு சிறை தண்டனை மற்றும் 30,000 யூரோ (40,000 அமெரிக்க டொலர்) அபராதம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

மார்ச் 11 மற்றும் 19க்கு இடையில், மூன்று துணை-இராணுவ துருப்புகள், ஒரு யூத குரு மற்றும் மூன்று யூத பள்ளி குழந்தைகளை துலூஸ் மற்றும் மொந்தபானில் கொடூரமாக கொன்ற முஹம்மது மேராவின் மூர்க்கத்தனமான நடவடிக்கையை அடுத்து, புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிராக முன்மொழியப்பட்ட ஜனநாயக-விரோத முறைமைகளின் ஒரு சரமாரியான பொழிவிற்கு இடையில் இந்த சட்டம் வந்துள்ளது.

சட்டப்பூர்வ புலம்பெயர்வை 50 சதவீதத்திற்குக் குறைத்திருப்பதாக அறிவித்திருக்கும் சார்க்கோசி, ஐரோப்பா உள்ளிருந்தும் மற்றும் வெளியிலிருந்தும் தேவையற்ற புலம்பெயர்வைத் தடுக்க முறைமைகள் பலப்படுத்தப்படவில்லை என்றால் கடவுச்சீட்டின்றி பயணிக்கும் செங்கென் வலையத்திலிருந்து பிரான்ஸை வெளியில் எடுத்துக் கொள்ளவிருப்பதாக அச்சுறுத்தினார். ஹலால் அல்லது கோஷர் உணவு வசதிகளுடன் பள்ளி உணவகங்களில் சிறுபான்மையினருக்கு சலுகைகள் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 22இல் நடைபெற உள்ள முதல் சுற்று பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தலுக்கு மிக முன்னதாக வெளியாகி உள்ள சார்க்கோசியின் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான பிரச்சாரமானது பிரான்ஸிற்குள் நிலவும் அரசியல்-எதிர்ப்பிற்கு எதிராக பொலிஸ் அதிகாரங்களை வலுப்படுத்துவதாக உள்ளது. அதேவேளையில் தேர்தல் பிரச்சாரத்தில் சட்ட-ஒழுங்கு சீர்கேடுகள் என்பதைக் கொண்டு விஷத்தைப் பரப்புவதாகவும் உள்ளது. சார்கோசியின் சமூக கொள்கைகளுக்கு, அதாவது பொது செலவினங்களை இன்னும் கூடுதலாக குறைத்தல், சமூக உரிமைகளை அழித்தல் மற்றும் வேலைவாய்ப்பின்மையின் கூர்மையான அதிகரிப்பு ஆகியவற்றிற்கு தொழிலாள வர்க்கத்திடையே ஆழ்ந்த எதிர்ப்பு நிலவுகிறது. கடைசி வார பிரச்சாரங்களில் சார்கோசி தேர்தல் முடிவைத் திருப்பிபோட விரும்புகிறார்.

துலூஸ் படுகொலையின் உடனடி தாக்கமாக கருத்துக்கணிப்புகளில் சோசலிஸ்ட் கட்சியின் வேட்பாளர் பிரான்சுவா ஹாலன்டை சார்க்கோசி எட்டி பிடிக்க முடிந்திருந்தது. முதல் சுற்றில் முன்னனுமானிக்கப்பட்ட வெற்றியாளராக அவர் சார்கோசியைக் கடந்து வந்திருந்தார். சமீபத்திய கருத்துகணிப்புகளில் 29 சதவீதம் பெற்ற ஹாலன்டிற்கு எதிராக ஜனாதிபதிக்கு 29.5 சதவீத வாக்குகள் கிடைத்தன. இருந்தபோதிலும் இரண்டாம் சுற்றில் சோசலிஸ்ட் கட்சி வேட்பாளர் சார்க்கோசியைவிட வசதியான இடத்தில் இருக்கிறார், அதாவது ஹாலண்ட் சுமார் 56 சதவீதமாகவும், இவர் 46 சதவீதமாகவும் உள்ளார்கள்.

எவ்வாறிருந்த போதினும், அனைத்திற்கும் மேலாக, வலைத் தளங்களைப் பார்வையிடுவதை அல்லது முஸ்லீம் நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதை தவிர வேறெதையும் செய்யாத மக்களையும் குற்றவாளிகளாக்க அந்த சட்டம் அரசிற்கு அதிகமான அளவில் அதிகாரங்களை வழங்குகின்றது. 'பயங்கரவாதத்தின்' வரையறையே இழிவார்ந்த முறையில் குழப்பப்பட்டு வருகிற மேலும் அது பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல் சூழ்ச்சிகள் செய்வதற்கு பயன்படுவதோடு, முற்றிலும் சட்டபூர்வமான பயணம் மற்றும் இணைய உலாவலையும் கூட குற்றத்தனத்திற்கு உள்ளாக்க அது பாதை வகுக்கிறது.

இதுபோன்ற கடுமையான சட்ட மசோதாவைக் கொண்டு வருவதற்கு மேரா சம்பவத்தை சார்க்கோசி பயன்படுத்தியிருப்பதானது, அந்த படுகொலை சம்பவத்தின் போது இருந்த மிகவும் சந்தேகத்திற்கிடமான நிலைமைகள் குறித்து இன்னும் கூடுதலான கேள்விகளை எழுப்புகிறது. ஒரு பொலிஸ் உளவாளியும் மற்றும் இறுக்கமான கண்காணிப்பும் இருந்தும் கூட, மேரா பாதுகாப்பு துருப்புகளால் தொந்தரவு செய்யப்படாமல் ஒன்பது நாட்களுக்கு அவருடைய கொடூரமான படுகொலைகளை அவரால் தொடர முடிந்தது.

மேராவின் மரணத்திற்குப் பின்னர் உடனடியாக, சார்க்கோசி அவரது ஆதாயத்தை உள்நாட்டில் வலியுறுத்தினார். பெரும் பொதுப்படையான நடவடிக்கைகளில், ஊடகங்களால் ஊட்டிவிடப்பட்ட வெறித்தனத்தின் உதவியோடு, உத்தியோகபூர்வ, அரசு-அங்கீகாரம் பெற்ற முஸ்லீம் அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த சம்பவங்களில் கலந்துகொள்ள பிரான்ஸிற்குள் நுழைவதிலிருந்து குறைந்தபட்சம் ஆறு முஸ்லீம் மதகுருமார்களையும் மற்றும் விரிவுரையாளர்களையும் அவர் தடுத்து நிறுத்தினார். சுமார் 30 'சந்தேகத்திற்கு' இடமானவர்களை பொலிஸ் கைது செய்தது அவர்களில் பெரும்பாலாவர்களுக்கு எதிராக எவ்வித ஆதாரமும் இல்லாத காரணத்தால் அவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டார்கள்.

**சோசலிஸ்ட் கட்சியும், அதன் ஆதரவாளர்களும சார்க்கோசியின் புதிய, ஜனநாயக விரோத சட்டங்களைத் தீவிரமாக எதிர்க்க இலாயக்கற்று உள்ளனர்.**

வலைத் தளங்களை பார்வையிடும் பார்வையாளர்களை குற்றவாளியாக்கும் முன்மொழிவின் மீது சோசலிஸ்ட் கட்சி அதன் விடையிறுப்பைக் குவிக்கையில், அந்த சட்டமே ஆழ்ந்த வகையில் ஜனநாயக விரோத குணாம்சத்தை கொண்டிருப்பதன் மீதான பிரச்சினையை ஓரங்கட்டிவிட்டு, பயங்கரவாதிகளுக்கு எதிராக முறைமைகள் அதில் போதியளவிற்கு இல்லையென்று அது விமர்சித்தது. சோசலிஸ்ட் கட்சியின் 'பாதுகாப்பு வல்லுனர்' செனட்டர் பிரர்ன்சுவா ரெப்சமென் கூறுகையில், அந்த திட்டம் 'உபயோகமற்ற, துல்லியமற்ற, ஆக்கபூர்வமற்றதாக கூட இருக்கக்கூடியது' என்பதை நிருபிக்கும் என்றார்.

**சார்கோசியின் சமூக கொள்கைகளுக்கு, அதாவது பொது செலவினங்களை இன்னும் கூடுதலாக குறைத்தல், சமூக உரிமைகளை அழித்தல் மற்றும் வேலைவாய்ப்பின்மையின் கூர்மையான அதிகரிப்பு ஆகியவற்றிற்கு தொழிலாள வர்க்கத்திடையே ஆழ்ந்த எதிர்ப்பு நிலவுகிறது. கடைசி வார பிரச்சாரங்களில் சார்கோசி தேர்தல் முடிவைத் திருப்பி போட விரும்புகிறார்.**

சோசலிஸ்ட் கட்சியும், அதன் ஆதரவாளர்களும சார்க்கோசியின் புதிய, ஜனநாயக விரோத சட்டங்களைத் தீவிரமாக எதிர்க்க இலாயக்கற்று உள்ளனர். குறுநலவாத உணர்வை ஏவிவிட சார்க்கோசியால் பயன்படுத்தப்பட்ட சட்ட-ஒழுங்கு முறைமைகளை அவர்கள் அனைவரும் ஆதரித்துள்ளனர்.

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
▶ வியாபாரத்தை பலப்படுத்த...
▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்
BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping
R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

# பூமி அதிர்வுடன் கூடாமல் போன கூடங்குள அணு உலை



வேல் தர்மா
(ஒரு பேப்பருக்காக)

கூடாங்குளம் அணு மின் நிலையம் பாதுகாப்பானது எனச் சொல்லி வந்த அதிகாரிகள் சென்னையிலிருந்து 1500 கிலோமீட்டர் தொலைவில் இந்தோனேசியாவில் சுமத்ராவை மையமாகக் கொண்டு 8.9 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து காசிநாத் பாலாஜி தலைமையில் அணு மின் நிலையத்தில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தியது ஏன் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. பாதுகாப்பானது என்பதில் அவர்களுக்கே நம்பிக்கை இல்லையா? பூமி அதிர்வுச் செய்தி வந்தவுடன் கூடாங்குளம் பாதுகாப்பானது என்று சொன்னவர்கள் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடியது ஏன்? கூடங்குளம் அணுமின் நிலையம் ஏழு கட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

## சாதாரணப் பூமி அதிர்வு வேறு ஆழிப் பேரலை கொண்டுவரும் பூமி அதிர்வு வேறு என்பதை 2012இல் நிகழ்ந்த பூமி அதிர்வு உணர்த்துகிறது.

இதனால் பேரலைகள் வந்தாலும் அணு உலைகளுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நாங்கள் மேற்கொண்ட ஆய்வு திருப்திகரமாக முடிந்தது' என்று தமிழக அரசின் வல்லுநர் குழு அறிவித்திருந்தது. இந்த ஏழு கட்டப் பாதுகாப்பில் அவர்களுக்கே நம்பிக்கை இல்லையா?

### 2004 வேறு 2012 வேறு

இந்தோனெசியாவில் 2004இல் ஏற்பட்ட பூமி அதிர்வு தமிழ்நாட்டில் உணரப்படவில்லை ஆனால் தமிழ்நாட்டை 24 மீட்டர் ஆழிப்பேரலை தாக்கியது. அதே இடத்தில் கிட்டத் தட்ட அதே அளவு நில அதிர்வு 2012இல் ஏற்பட்ட போது தமிழ்நாட்டில் அதிர்வு உணரப்பட்டது ஆனால் ஆழிப் பேரலை எங்கும் ஏற்படவில்லை. ஒரு மீட்டருக்கும் குறைவான அலை உருவானது. அது அந்தமான் தீவில் 35 செண்டி மீட்டராகக் குறைந்திருந்தது.

### தகடுகளிடை அதிர்வும் தகட்டுள் அதிர்வும்

2004இல் நிகழ்ந்த அதிர்வு பூமித் தகடுகளிடை (inter plate) புறணிக் குமை பிராந்தியத்தில் (subduction zone) நிகழ்ந்த மேல் நோக்கிய அதிர்வு ( vertical movement). 2012இல் நிகழ்ந்த அதிர்வு இந்தியப் பூமித் தகட்டக்குள்(intra plate) நடந்தது ஒரு பக்கவாட்டு அதிர்வு (horizontal movement). சில ஆய்வாளர்கள் 2012இல் நடந்தது ஒரு புது விதமான அதிர்வாக இருக்கலாம். இதுபற்றிய ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

### அனர்த்தம் ஏற்படுத்தும் அனர்த்தம்

2004இல் ஏற்பட்ட அதிர்வு இந்தியப் பூமித் தகட்டின் மேற்பரப்பில் ஏறடுத்திய சிதைவுகளின் விளைவுதான் 2012இல் ஏற்பட்ட சிதைவு என்று சொல்லப்படுகின்றது. 2012இல் ஏற்பட்ட சிதைவு புதிதாக ஒரு பூமித் தகட்டை உருவாக்கியுள்ளது என்றும் சொல்லப்படுகிறது. 2012இல் ஏற்பட்ட அதிர்வு தகட்டு மேற்பரப்பில் மேலும் தகர்வுகளை ஏற்படுத்தி இருக்கலாம். இவ்விரண்டும் கூடாங்குளத்திற்கு அண்மையில் பூமித் தகடுகளிடை (inter plate) அதிர்வு ஏற்படும் சாத்தியத்தையும் பூமித் தகட்டக்குள் (intra plate) அதிர்வு ஏற்படும் சாத்தியத்தையும் அதிகரித்துள்ளது.

### எச்சரிக்கைக் கருவிகள்

2004 இல் ஏற்பட்ட ஆழிப் பேரலையைத் தொடர்ந்து பல நாடுகளில் ஆழிப் பேரலை எச்சரிக்கைக் கருவிகள் பொருத்தப்பட்டன. இவை 2012இல் சரியாக வேலை செய்து எச்சரிக்கையை விடுத்தன என்று சொல்லப்படுகிறது. இனி வரும் பூமி அதிர்வுக்கெல்லாம் ஆழிப் பேரலை எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருந்தால் புலி வருகிறது என்ற கதையாகிப் போய் விடும். சாதாரணப் பூமி அதிர்வு வேறு ஆழிப் பேரலை கொண்டுவரும் பூமி அதிர்வு வேறு என்பதை 2012இல் நிகழ்ந்த பூமி அதிர்வு உணர்த்துகிறது. இவற்றைக் பாகுபடுத்தி எச்சரிக்கக் கூடிய கருவிகள் தேவை.

### வெள்ளாடைகளுடன் இணைந்த காவியாடை


கூடாங்குளத்தை அண்மித்த பகுதிகளில் அதிக கிருத்தவர்களும் கத்தோலிக்கர்களும் வாழ்வதால் கூடாங்குள எதிர்ப்பில் அதிக பாதிரிமார்கள் பங்கேற்றனர். இதனால் அணு மின் உலை ஆதரவாளர்கள் கூடாங்குள எதிர்ப்பாளர்களுக்கு இலகுவாக ஒரு மத சாயத்தை பூசியும் வெளிநாட்டு ஆதரவு இருக்கிறது என்ற வதந்தியையும் எளிதாக பரப்பவும் செய்தனர். தற்போது சுவாமி அக்னிவேஷ் கூடாங்குள அணு உலைக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளார். சுவாமி அக்னிவேஷ் கூறுவது:-சேர்னோபில் அணு உலை விபத்திற்குப் பிறகு இரசியா புதிதாக ஒரு அணு உலையைத் தன்னும் உருவாக்கவில்லை. ஃபுக்குஸிமோ அணு உலை விபத்திற்குப்பிறகு ஜப்பான் படிப்படியாக தனது அணு உலைகளை மூடவிருக்கிறது.

### கூடாங்குளத்தில் கூழாம்பாணி

கழுதை கெட்டால் கெட்டிச் சுவர் என்பது போல் இந்தியாவில் காங்கிரசு ஆட்சியாளர்களுக்கு எதிராக ஏதாவது நடந்தால் அது அமெரிக்கச் சதி என்று பட்டம் சூட்டுவது வழக்கம். கூடாங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்க அமைப்பாளர் எஸ் பி உதயகுமாருக்கு எதிராகப் அமெரிக்கக் கைக்கூலி என்பது உட்படப் பல குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. உதயகுமாருக்கும் அணு உலையை எதிர்க்கும் மற்ற அரச சார்பற்ற அமைப்புக்களுக்கும் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் அபிவிருத்தியை விரும்பாத நாடுகளும் உதவி செய்வதாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. உதயகுமார் வீட்டில் காவல் துறையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி உதயகுமார் வெளிநாட்டில் இருந்து ஒன்றரைக் கோடி ரூபாக்களைப் பெற்றுக் கொண்டார் எனக் கூறியமைக்கு எதிராக உதயகுமார் சட்ட நடவடிக்கை எடுத்தார். இந்தியப் பிரதம மந்திரி கூடாங்குளம் அணு உலைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் வருகிறது என்றார். அதற்கு எதிராகவும் உதயகுமார் சட்ட நடவடிக்கை எடுத்தார். கூடாங்குள அணு உலை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக ஒரு ஜெர்மனியக் குடிமகன் இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டார். உதயகுமார் மத்திய அரசை மாநில அரசிலும் பார்க்க அதிகம் எதிர்க்கிறார் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன. உண்மையில் இந்தியாவில் அதிக அணு வலு உற்பத்தியை அமெரிக்க விரும்புகிறது.

### தடம் மாறிய திராவிடமும் வாதம் மாறிய பொதுவுடமைவாதிகளும்

ஜெய்ப்பூரில் அமெரிக்க உதவியுடன் அணு மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் வந்தபோது அதைக் கடுமையாக எதிர்த்தவர்கள் கூடாங்குளம் அணு மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. கலைஞர் கருணாநிதியும் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவும் ஆரம்பத்தில் கூடாங்குள அணுமின் உலையை எதிர்த்தனர். பின்னர் புதுடில்லி எஜமானர்களுக்கு பயந்த கருணாநிதியும் பூனூல்களின் ஆலோசனையைக் கேட்டு



சுனாமி உருவாகுதல்



சுனாமி நிகழும் நில அதிர்வு




சுனாமி உருவாகாத நில அதிர்வு

ஜெயலலிதாவும் தமது எதிர்ப்புக்களைக் கைவிட்டனர். இந்தியப் பொதுவுடமைக் கட்சி கூடாங்குள அணு உலையை ஆதரிப்பதற்கு சொல்லும் காரணம் மிக விசித்திரமானது. செய்தாப்பூர் அணுஉலை என்பது தனியார் நிறுவனத்தின் அணுஉலை என்பதாலும், அமெரிக்க அணு ஆயுதத் திட்டத்தோடு இந்தியாவை இணைக்கும் என்பதாலும் செய்தாப்பூர் அணு உலையை சி.பி.எம். (பொதுவுடமைக் கட்சி) எதிர்த்தது. ஆனால் கூடங்குளம் அணு உலைத் திட்டம் அப்படியானதல்ல. இது சோசலிச சோவியத் ஒன்றியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். எனவேதான் கூடங்குளம் அணு உலைத்திட்டத்தைநாம் ஆதரித்தோம். ஐய்யோ.. ஐய்யோ.... அணு வெளியிடும் அணுக்கதிரியக்கத்திலும் சித்தாந்த வேறுபாடு உண்டா?

### யானைப் பொரிக்குச் சோளப் பொரி

தமிழ்நாட்டின் தற்போதைய பெரிய பிரச்சனை மின்சாரப் பிரச்சனை. இதற்கு கூடாங்குளம் ஒரு தீர்வாக அமையும் என்கின்றனர் அதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்போர். கூடாங்குளத்தில் 250 மெகா வாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படும். இது தமிழ் நாட்டின் தேவையான 3500 மெகா வாட் மின்சாரத்தைப் பூர்த்தி செய்யப் போதாது என்கிறார் உதயகுமார்.

### ஆழிப்பேரலையால் அழிந்த தமிழன்

தொன்று தொட்டே தமிழினத்திற்கு போராலும் சாவு நீராலும் சாவு. கூடாங்குளம் ஈழத்திற்கு அண்மையில் இருக்கிறது. மைலாப்பூரிலும் பார்க்க ஈழத்திற்கு அண்மையில் இருக்கிறது. கூடாங்குளம் பாதுகாப்பானது என்றல் புதுடில்லியில் இந்தியப் பாராளமன்றத்திற்கும் தென்மண்டல அதிகார மையத்திற்கும் நடுவில் ஒரு அணு மின் உலையை அமைக்கலாம். அணு உலை வெடிப்பால் ஒரு அழிவு தமிழனுக்கு வேண்டாம்.



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# South Asia's Lessons for the Middle East and North Africa

By David Wagner

- While South Asian democracy made progress with respect to equality, dignity and human security, there was less emphasis on rules and institutions to guard against excesses by the majority.
- Constitutions may indeed offer equality of political citizenship, but fall well short of delivering the promise of democracy that most people aspire to.
- An elaborate set of institutions to provide formal autonomy appears to exist but in practice they suffer from erosion of real autonomy and low levels of public trust.
- While all the countries have mechanisms for recognizing and accommodating regional and social diversity, the mantra of the homogeneous nation-state and growing 'majority-rules' practices undermines the co-existence of diversity and democracy.

Oxford University recently co-published the results of the first authoritative political survey of post-Gaddafi Libya, coinciding with the anniversary of the uprising that overthrew the dictator. Just 5 months after Gaddafi's death, while 69% of the 2,000 Libyans surveyed said they would like to have a say in who rules the country, 35% of them preferred that a strong leader rule the country 5 years from now. Just 29% said they preferred to live in a democracy, and 16% said they were prepared to resort to violence to achieve their political objectives.

Dr. Christoph Sahm, director of co-study producer Oxford Research International, points out that "... the Libyan people have not yet developed trust towards political parties, preferring a return of one-man rule..." and that "... Libyans who have had autocratic rule for decades lack the knowledge of how a democracy works and need more awareness of the alternatives to autocratic government." Dr. Sahm's interpretation of the results appears to be based on a widely-held assumption in the west that the Libyan people -- and people more generally around the globe -- prefer democracy to any other form of government, and that by definition, any other form of government cannot possibly be as desirable as democracy -- in any of the many forms it takes.

Given the state of democracy in the U.S. at the present time -- with the population divided more than ever before between the 'haves' and 'have nots,' with big money overtly dominating the political process, and with legalized corruption having been recently revealed in Congress (and only partially revoked as a result of widespread public pressure) -- it's frankly a wonder why any transitional polity would want to emulate western-style 'democracy.'

Another thought-provoking study, also co-produced by Oxford University and published in 2008, queried South Asians about their views on democracy and related issues. The study notes that there have been many benefits to having made the transition to democracy in the region, but at the same time, the failure of South Asian governments to deliver on many of the promises made to their people has created a climate of distrust, apathy, and disillusionment.

The study holds some important lessons for the Middle East and North Africa, from a region that has become well acquainted with democracy:

While there was widespread support for the idea of democracy in South Asia, there was less commitment towards or satisfaction with the institutional form of representative democracy.

While South Asian democracy made progress with respect to equality, dignity and human security, there was less emphasis on rules and institutions to guard against excesses by the majority.

Constitutions may indeed offer equality of political citizenship, but fall well short of delivering the promise of democracy that most people aspire to.

An elaborate set of institutions to provide formal autonomy appears to exist but in practice they suffer from erosion of real autonomy and low levels of public trust.

While all the countries have mechanisms for recognizing and accommodating regional and social diversity, the mantra of the homogeneous nation-state and growing 'majority-rules' practices undermines the co-existence of diversity and democracy.

Political parties are a firm part of South Asia's political consciousness and generate a high degree of popular participation and identification, but their inability to function in a democratic and transparent manner -- or to provide meaningful choices to voters -- has resulted in a low level of trust.

Non-party organizations and social movements have given a voice to the issues and groups ignored by political parties, whose role may have been eclipsed. Yet these organizations also failed to address issues of representation, transparency and accountability.

Ordinary people in South Asia are resilient and, despite their challenging political, economic and social conditions, do not show marked feelings of insecurity. However, minorities continue to experience a sense of insecurity, and the democratic state, with its orientation toward majority rules, can be an additional source of insecurity to them.

Democracy has transformed the people of South Asia from subjects into citizens, with rights and dignity, which has given rise to expectations that most governments in the region have failed to meet.

The study points out that while 70% of Indians preferred democracy, only 37% of Pakistanis did, and 49% of Pakistanis and 21% of Indians said that it did not matter to them whether their government was democratic or not. In Bangladesh and Pakistan -- which have long histories of military-led governments -- 60% of respondents endorsed military rule. And in India, which has had only civilian governments for the past 60+ years, 23% of respondents approved of army rule.

While part of these results can be attributed to a lack of education or sophistication among rural respondents, the truth is that if South Asian governments had done a better job of improving living standards among the majority of their population, it would not have mattered whether a respondent was rich or poor, educated or ignorant, Muslim or Christian -- they would presumably have stated a clear preference for the type of government that had delivered the goods. Shockingly, even after decades of democracy in the region, two-thirds of respondents yearned for the rule of a "strong leader who does not have to bother about elections." Disillusionment with the democratic process appears to be the overriding commonality among South Asian respondents.

> Constitutions may indeed offer equality of political citizenship, but fall well short of delivering the promise of democracy that most people aspire to.

Herein lies the lesson for the Middle East and North Africa. Regardless of how smooth or rocky the path to democracy may be in the future, a failure on the part of regional governments to deliver on their promises, raise living standards, and resist the temptation to impose majority rule on the minority will likely result in the same political apathy and disillusionment that is so prevalent in South Asia. The net result may be a preference for a return to strong man rule, in which case the people of the region will end up asking themselves what the Arab Awakening was all about. Even if the democratically-elected new governments of the region turn out to be successful, the strong men and their backers will continue to lurk in the background -- if they disappear at all. Given the recent political history of Egypt, Libya, Tunisia and Yemen -- and given the likelihood that the newly elected governments in the region stand a good chance of failing to improve the lives of average citizens in the short and medium-term -- the strong men may soon be back by popular demand.

*Daniel Wagner is CEO of Country Risk Solutions, a cross-border risk consulting firm based in Connecticut (USA), and author of the new book Managing Country Risk (www.managingcountryrisk.com).

*Courtesy: The Huffington Post, Los Angeles*

## London Mayor wishes British Tamils in Chithirai Tirunaal message



The Mayor of London, Boris Johnson, extended his wishes to the British Tamil community celebrating Chithirai Tirunaal and Tamil New Year.

In his message Mr Johnson high lighted the significant contributions British Tamils make to the city.

*Full message:*

"I would like to extend my warmest wishes to the British Tamil commu nity on this day of celebrating Chithirai Tiru-naal."

"This important occasion provides us with the opportunity to renew the ties that bring us all together in building a prosperous community based on the bonds of family and social responsibility."

"It is these strong values that enable the tens of thousands of British Tamils who have made London their home to make such a significant contri bution to the city and its communities."

"Puthandu Vazthukal to you and your families on this special day."

MAY 03

மே 3ம் திகதி நடைபெறும் இலண்டன்
மேயர் மற்றும் இலண்டன் பேரவைக்கான தேர்தல்.

உங்களால் மூன்று வாக்குகள் அளிக்கமுடியும் இதற்காக மூன்று வாக்குச்சீட்டுகள் வழங்கப்படும்.

1 இளம் சிகப்பு வாக்குச்சீட்டு மேயருக்கு வாக்களிக்கலாம்

2 இலண்டன் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் ஆவதற்கு மஞ்சல் வாக்குச் சீட்டைப் பயன்படுத்தலாம்

3 இலண்டன் முழுவதிலும் உள்ள பேரவை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு சேம்மஞ்சள் வாக்குச் சீட்டைப் பயன்படுத்தலாம்.

இலண்டன் முழுவதிலும் 33 கவுன்சில்கள்(Borough) உள்ளடங்கிய வாக்காளர்கள் உறுப்பினர் ஒருவருக்கு வாக்களிக்கமுடியும்...

இந்தப்பேரவை உறுப்பினராக ஒரே ஒரு தமிழ் வேட்பாளர் போட்டியிடுகிறார் அவர் அழகரத்தினம் ரதி அவர்கள்.

இலண்டன் முழுவதிலும் உள்ள வாக்காளர் அணிதிரண்டு வாக்களித்தால் வெற்றி நிச்சயம்

Alagaratnam Rathy, 52 Portland Road, Micham, Surrey CR4 3EQ

தமிழ் வாக்காளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!



உங்கள் வாக்குளை செம்மஞ்சல் வாக்குச் சீட்டில் ரதி அழகரத்தினம் என்ற பெயருக்கு எதிராக புள்ளடியிட்டு வெற்றி பெறச் செய்யுங்கள்.

அழகரத்தினம் ரதி அவர்கள்.
(தேர்தல் களம் பல கண்டவர்)

Vote for **Alagaratnam Rathy** X

இலண்டன் பேரவையில் (London Assembly) தமிழ்க் குரல் ஒலிக்கட்டும்.

# "Our lives are in a grave danger. What's the wrong I did?" - *Sandhya Ekneligoda*



Sandhya Priyangani Ekneligoda, wife of disappeared Sri Lankan journalist and cartoonist Prageeth Ekneligoda, recently spoke to the World Socialist Web Site about her ongoing struggle to discover what happened to her husband, and the continuing harassment of the Sri Lankan authorities.

Prageeth Ekneligoda disappeared on 24 January 2010, after he went to report on Sri Lankan presidential election meetings.

Police investigations have drawn the usual blanks and a habeas corpus case, originally filed by Sandhya Ekneligoda in February 2010, is only now being heard at the Colombo Magistrates Court.

Prageeth Ekneligoda supported former Army Commander General Sarath Fonseka, the main bourgeois rival of President Mahinda Rajapakse, during the 2010 presidential election. Fonseka was arbitrarily arrested immediately after the poll and imprisoned on various frame-up charges. Ekneligoda frequently criticised the Rajapakse administration—especially the president and his brothers—over injustice and corruption and is believed to have been disappeared because of these exposures.

Over the past two years, 50-year-old Sandhya Ekneligoda, the mother of two teenage boys, has written to numerous local and international human rights organisations, including the United Nations Human Rights Commission (UNHRC), seeking their help.

She also sent letters to President Rajapakse and other state officials, who have ignored her appeals.

"After the disappearance of my husband," Ekneligoda told the WSWS, "the government began telling lies in order to divert the sentiment of the masses. Former Attorney General Mohan Peiris told the UNHRC that Prageeth had sought refuge in a foreign country, so I wrote him a letter asking about my husband's whereabouts. I never received a reply."

Ekneligoda explained what happened after she participated in a side event at the recent UNHCR sessions in Geneva. The UNHRC adopted a US-sponsored resolution over Sri Lankan human rights abuses in its war against the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE). The Sri Lankan government bitterly opposed the resolution, despite its very limited character.

Ekneligoda said: "With the help of international human rights organisations I went to Geneva to tell my story to the world. For the understanding of those in attendance, I tried to explain the anti-democratic and repressive environment that is increasingly developing in Sri Lanka. I thought this would help to make people aware of the roots of my husband's disappearance.

"Speaking about the militarisation of the country, I explained how the military is occupying the north and east. I presented some pictures and described how the families who were displaced during the war are now living in tents, huts and damaged structures, while by contrast there are growing numbers of tourist hotels and war monuments." Ekneligoda told the WSWS that she was harassed by several members of the Sri Lankan delegation. UK Sinhala Association president Douglas Wickramarathne attempted to ridicule her, declaring: "How can you see yourself as a victim? You came here in a happy mood."

Echoing the Rajapakse government, Wickramarathne and several other Sri Lankan delegates accused her, and others participating in the Geneva event, of being "traitors."

Sri Lanka's state-owned press and television networks published their photographs while media minister Mervin Silva, who is infamous for threatening journalists, publicly branded several Sri Lankan reporters and human right activists in Geneva as "bastards."

Silva told a Sri Lankan public meeting that "these people" were "betraying us in Geneva." He named Sunanda Deshapriya, Nimalka Fernando and Poddala Jayantha, and boasted: "I'm the one who chased [journalist] Poddala Jayantha from Sri Lanka."

The media minister declared that he would not hesitate to "break the limbs" of the named journalists "if they set foot" on the island. Confident that his threats would be endorsed by Rajapakse, Silva said his ministerial position was granted by Rajapakse and "will remain unchanged while he is in power."

Ekneligoda told the WSWS that Silva's outburst was an "attempt to provoke the Sinhala racists against us. Our lives are in a grave danger. What's the wrong I did? The only thing I've done is taken the path of democratic rights."

The police finally accepted my complaint two weeks later." When she later attempted to get a copy of her complaint, police officers told her they had lost the logbook in which it had been entered. In August 2011, the appeal courts decided to take up her February 2010 habeas corpus case and these proceedings are currently underway in the Magistrates Court (MC).

"On March 26, when the case was taken to the MC, I was questioned by the Deputy Solicitor General Shavendra Fernando who represented the state," Ekneligoda said. "He asked more questions about my visit to Geneva. My counsel pointed out that this had nothing to do with the case, but he kept asking me why I went to Geneva, who sponsored me, how much money I was getting per day, and so on."

Ekneligoda told the WSWS that even after explaining the purpose of her Geneva visit—to raise concerns about her missing husband—the state counsel accused her of lobbying against the government and the country. "It was a direct violation of my democratic rights," she added.

Prageeth Ekneligoda's disappearance is part of broader assault on democratic rights that has intensified under the Rajapakse government. The police-state laws developed during the civil war remain in place. The denunciation of government opponents as "unpatriotic" takes places as "disappearances" by pro-government death squads continue.

Various Sri Lankan human rights organisations claim that appeals to the US and other international powers can protect basic rights. This is an illusion. The US sponsored the recent UNHRC resolution not to defend democratic rights but as a means for exerting pressure on the Rajapakse government to distance itself from China.

In the past ten years, 17 journalists and other media workers have been killed and around 50 journalists have fled Sri Lanka in fear of their lives.

*Courtesy: The World Socialist Website*

# துணையற்றவர்களுக்கு நம்பிக்கையும் வெற்றியும் பெற்றுத்தரும் ஆன்மீக, சோதிட அறிஞர் குருஜீ

ஆன்மீக குணப்படுத்தலிலும் சோதிடத்திலும் விசேட திறமையுள்ள பரம்பரை வழிவந்த குருஜீ இவ்வகையான சித்து ஞானமும் விஞ்ஞான அறிவும் தனது உடலில் ஊறியுள்ளதை சிறுவயதிலிருந்தே உணர்ந்திருந்தார்.

அவருடைய சொந்தக் கிராமத்தில் இளவயதினராக இருக்கும்போதே வெள்ளை உடை அணிந்த ஞானி ஒருவர் இவரை அணுகுவது போன்று அடிக்கடி இவரது கனவில் தோன்றினார்.

சிறந்த அருளினால் சூழப்பட்டது போன்ற இவ்வுருவம் குருஜீயிடம் அதிவிசேட குணாதிசயங்கள் அமைந்திருப்பதை சைகைகள் மூலம் தெரியப்படுத்தினார்.

இவர் இளவயதிலேயே தம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் தம்மிடமுள்ள விசேட ஆற்றல்மூலம் மற்றவர்களுக்கு உதவுவதே தமது கடமையெனவும் உணர்ந்து கொண்டார்.

எதிர்காலத்தை உணரும் ஆற்றலுடன் ஆன்மீகப் பாதையில் செல்ல விரும்புவோருக்கு மகிழ்வும் வெற்றியும் பெற்றுக் கொடுக்கத் தேவையான கருவிகளைத் தாம் பெறல் வேண்டும் என்பதை உணர்ந்தார்.

இவருடைய 19 ஆவது வயதில் இவருக்கு அறிவுரைகூறி ஏற்ற பாதையில் நடத்திச் செல்லக்கூடிய ஆசான்கள் இருவர் கிடைத்தது இவரது அதிஷ்டமாகும். இவ்விருவரும் இவருக்கு கணித சாஸ்திரம், கைரேகை, சோதிடம், வழிபாடு, தியானம் பற்றிய அறிவை ஊட்டினர். அத்துடன் அதிஷ்டப் பொருட்கள், நிறங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே சொல்லக்கூடிய ஆற்றலையும் அடைந்தார்.

'மக்கள் துன்பம் காரணமாக என்னிடம் வரும்போது எனது ஆற்றலை உபயோகித்து அவர்களுக்கு ஒரு தீர்வைக் கூறுவேன்'

இவரை நம்பி இவரைப் பின்பற்றுவோர் பலருண்டு. கடவுளின் அருளினாலேயே அவர்களுக்கு என்னால் உதவமுடிகிறது.

என்னிடம் உள்ள ஆற்றலை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அதற்காக அவர்கள் எனக்கும் பணம் கொடுக்கவேண்டியதில்லை. எனது செய்கை அவர்களுக்கு உதவியாக இருப்பின் மீண்டும் வந்து அவர்களுடைய பாராட்டின் பிரதிபலிப்பாக ஏதாவது சன்மானம் அளிப்பார்கள், அல்லது அவர்களது குடும்பத்தவரையோ நண்பர்களையோ என்னிடம் அனுப்புவார்கள். பலதரப்பட்ட சவால்களை ஏற்று அவற்றிற்குத் தீர்வு காண்பதில் உள்ள தனது நேர்மையையிட்டு இவர் பெருமிதம் அடைகிறார்.

## நான் உதவுவதற்கே இங்குள்ளேன். அதற்காக எந்தவித பிரதி உபகாரத்தையும் நான் எதிர்பார்ப்பதில்லை.

இவரிடம் பலதரப்பட்ட பிரச்சனைகளுடன் மக்கள் வருகிறார்கள். திருமணம், குழந்தை பெறாமை, வேலையில்லாமை, வியாபார நட்டம் ஆகியவற்றிற்குத் தீர்வுகளும், உதவிகளும் வெற்றியும் தேடி மக்கள் வருகிறார்கள்.

'நான் உதவுவதற்கே இங்குள்ளேன். அதற்காக எந்தவித பிரதி உபகாரத்தையும் நான் எதிர்பார்ப்பதில்லை. என்னால் முடிந்தவரை முயற்சிப்பேன். நான் வழிபாட்டின் ஆற்றலை நம்புகிறேன். அத்துடன் எனது பார்வை வெற்றியை நோக்கியதாகும்' என்கிறார் குருஜீ.

*குருஜீ - 07965559918*


BHARATHIAR UNIVERSITY
School of Distance Education
State University, Coimbatore, India

- ஐக்கியராச்சியம் மற்றும் ஐரோப்பா வாழ் கல்வி ஆர்வலர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.!!!
- வேலை செய்து கொண்டும், வீட்டில் இருந்துகொண்டும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாரதியார் பல்கலைக்கழக **BA, BBA, BCom, BEd, BSc, MA, MCom, MSc, MBA**பட்டதாரியாகலாம்.
- நீங்கள் விரும்பிய தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் க.பொ.த உயர்தரத்தில் மூன்று சித்திகளுடன் மிகவும் குறைந்த செலவில் கற்கைநெறி மற்றும் வழிகாட்டல் கைநூல் என்பவற்றுடன் அரிய வாய்ப்பினை தருகிறார்கள் இணைடனில் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற மேலை நாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியத்தினர்.
- விண்ணப்ப முடிவுத்திகதி: வருடம் தோறும் மே மாதம் 31.
- தொடர்புகள். மேலைநாட்டுத் தமிழ் பாடசாலைகள் ஒன்றியம்.

- B.A, B.A applied Tamil
- B.Com., B.Sc Mathematics
- B.Sc. Information Technology
- BBA Finance and Accounting,
- B Social work, M.A. Tamil, M.A. English,
- M.A. Sociology, M.A. Journalism M.Com,
- M.Social Work M.Sc Applied Psychology,
- M.Sc Maths M.Sc I/T,
- MBA General, Financial, Human Resource, Banking & Marketing Management





WESTERN TAMIL SCHOOLS FEDERATION-UK
Tel: Manoharan - 020 8540 0705, Vilvaraj 020 8819 3008, 079 5840 8280 , Murugaiah 07960455853
E-mail : info@tamiled.co.uk • Web: www.tamiled.co.uk, www.b-u.ac.in

# KIDS பேப்பர்

## Wondering about Water

from Celebrating Chemistry

What if water did not have all of its special properties? In what ways would the world be different? Think about how strange the world would be if water were different. Write a poem or a story about a world where water doesn't work like we expect.

### Think about these things:

**What if water adhered strongly to many substances?**
How well would windshield wipers work?
How easily could you dry off after a swim?
What would happen when it rained?

**What if water was not very cohesive, and did not stick to itself easily?**
Could you pour a glass of water?
How big would puddles be?
Could plants survive?

**What if water did not dissolve things?**
Could you make a glass of sweetened tea?
Could you wash with soap?
Would ocean water be salty?

**What if ice sank in water?**
Could aquatic plants and animals live through a cold winter?
How long would you have to wait to go ice-skating in the winter?
Would there be liquid water to drink in a cold winter?

**What if water did not have cohesion and adhesion?**
Would water bugs sink?
Could we drip drops from an eyedropper?
Would we need to use detergent to make bubbles in water?

## Kids Painting




*By : Elan*



## BALLOONS

*There are four friends (Adam, Elizabeth, Peter, Sally) and each has a balloon.*
*From the clues below can you match each of them with their age and balloon?*

*The kids are aged 5, 6, 7 and 8 and one of them has a blue balloon.*

*1. The six year old girl has a green balloon.*

*2. Adam has a red balloon and is older than Peter.*

*3. Elizabeth is 5 years old but her balloon isn't yellow.*



| Name | Age | Balloon |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

## Kids Jokes........

***Back a page Start of term jokes***
***Forward a page***
***Mother: How was your first day at school ?***
***Son: It was all right except for some man called "Teacher" who kept spoiling all our fun !***
***I'm not going back to school ever again***
***Why ever not ?***
***The teacher doesn't know a thing, all she does is ask questions !***
***Fred came home from his first day at school. "Nothing exciting happened", he told his mother, "Except the teacher didn't know how to spell cat so I told her"***
***What are you going to be when you get out of school ?***
***An old man !***
***What did you learn in school today ?***
***Not enough, I have to go back tomorrow !***
***Mother: What did you learn in school today***
***Son: How to write***
***Mother: What did you write ?***
***Son: I don't know, they haven't taught us how to read yet !***
***Mother: What was the first thing you learned in class ?***
***Daughter: How to talk without moving my lips !***
***Teacher: What's big and yellow and comes in the morning to brighten a mothers day ?***
***Pupil: The school bus !***
***What's yellow, has wheels and lies on its back ?***
***A dead school bus !***
***How do bees get to school ?***
***By school buzz !***

## Colouring - 168





**Dear Kids...**

Colour and Send in a picture to ORU PAPER you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக்கிளியின் பரிசினைப் பெற படத்திற்கு வர்ணம் தீட்டி அனுப்பி வையுங்கள்..

Last issue Winner : Lusanan (Age 6)



*Hashani*



*Vigaashan*



*Hashani*

## சொற்களைத் தேடுங்கள் - 168

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | யா | யீ | வா | த | டி |
| வி | ணை | க | கீ | து | டு |
| வி | டு | து | கா | ய | மு |
| மு | ணி | ர | ல் | டி | மு |
| ம் | க | ம் | சீ | ர | க |
| வ | யி | று | ணி | கீ | ம் |
| ல் | கா | இ | க் | மு | ழ |

சொற்களைத் தேடுங்கள் :
சொற்கள் : கை , கால் , முகம் , காது , மூக்கு , வாய் , வயிறு .

**By : Ayshvaan**



Lebara
mobile
Sri Lanka
landlines & mobiles
5p
/min
Low-cost international & UK calls direct from your mobile
www.lebara.co.uk
Offer valid until 30/04/12. For all our rates and full terms and conditions, visit www.lebara.co.uk


SBI Express
Money Transfer
to Sri Lanka
• Remittances to Sri Lanka made easy
• Attractive exchange rates
• Send money quickly to the SBI branch in Colombo or other bank branches in Sri Lanka
Kotte SRI LANKA
Dondra
Head
State Bank of India
With you - all the way
Pure Banking. Nothing else.
18,000 STATE BANK GROUP BRANCHES IN 32 COUNTRIES | 146 MILLION CUSTOMERS | IN THE UK SINCE 1921
CITY OF LONDON t: 0800 532 532
BIRMINGHAM t: 0121 515 0400
COVENTRY t: 0247 623 4900
EAST HAM t: 0208 470 2992
GOLDERS GREEN t: 0208 458 3856
HARROW t: 0203 114 1027
LEICESTER t: 0116 242 8830
MANCHESTER t: 0161 817 2530
SOUTHALL t: 0208 574 9833
WOLVERHAMPTON t: 0190 271 6050


Vinishas
Sri Lankan & South Indian Restaurant
இலங்கை, தென் இந்திய உணவகம்
என்றென்றும்
சுவைமிகுந்த உணவு
வகைகள்...
April Offer !!!
• 2 மட்டன் ரோல் £1
• 2 மரக்கறி ரோல் £1
• 3 உழுந்து வடை £1
• 3 பருப்பு வடை £1
• 1 பெரிய அப்பம் 99p
15% off for Takeaway
HALAL
உங்கள் இல்லங்களில்
நடைபெறும் வைபவங்களுக்கு தரமான முறையில்
சுவையான உணவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்
Free Home Delivery
(Minimum order £15.00 within 3 mile radius Between 5pm-10.30pm)
Web : www.vinishas.com
2 Loampit Hill, Lewisham, SE13 7SW
Tel : 020 8691 7944


Shoptek .co.uk
A2 Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3HQ
USED SHOP SHELVING
NEW SHOP SHELVING
large stock of used shop shelving
1000mm GONDOLA BAY £146+VAT
Suppliers of New and Used Shop Shelving
From our Cash & Carry Warehouse
Shoptek .co.uk
Tel: 01455 221512
Email: info@shoptek.co.uk

# இலங்கை தொடர்பான இந்தியாவின் வங்குரோத்து ராஜதந்திரம்

பாகம் 109

பலரைப் பலகாலம் ஏமாற்றலாம், சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது.

ஐநா மனிதவுரிமைப் பேரவையில் நல்லிணக்க அணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கொண்டுவரப்பபாட்ட தீர்மானத்தை ஆதரித்துவாக்களித்ததோடு சரி! இனிதமிழினத்தை எப்படியாவது பேய்க்காட்டி, எதிர்வரும் தேர்தல்களில் ஏமாற்றிவிடலாம் என்றிருந்த மத்திய அரசை ஆளும் காங்கிரசுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா நல்ல பாடங்களைப் புகட்டத் தொடங்கியிருக்கிறார். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதியுடன் விருந்துண்டு திரும்புவதற்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டமைப்பிலிருந்து அதிமுக விலகிக் கொண்டவுடன் திமுகவும் தனது அங்கத்தவரை வாபஸ் பெற்றது டெல்லியின் பாச்சா இனித் தொடர்ந்தும் தமிழர்களிடம் எடுபடப் போவதில்லையென்பதைக் காட்டிநிற்கிறது.

இதனால்மத்திய அரசின்வெளிநாட்டுக்கொள்கையையும், இலங்கை தொடர்பான அணுகுமுறைகளையும் வகுத்து நடத்தும் பெருந்தலை இராஜதந்திரிகளுக்கு இனிமேல் கொஞ்சம் அவதானமாகக் காய்களை முன் நகர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இனி அவர்களுக்கு, தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் இடையே ஓடித்திரிய வேண்டிய கட்டாயமும்?, சும்மா அடிக்கடி இலங்கைக்கு வந்து ஜனாதிபதியுடன் கைகுலுக்கி பல்லிளித்துவிட்டுப் போகும் வேலையும் குறைந்துவிடும். இலங்கை போகுமுன் எதைப்பற்றித் தமிழக முதல்வருடன் பேசுவது, இலங்கை ஜனாதிபதியிடம் பல்லிளித்துவிட்டு வந்து எதனை பெற்ற பெறுபேறுகளாக தமிழினத் தலைவர்களிடம் கூறுவது என்பதைத் திட்டமிடுவதே இவர்களுக்குப் பெரிய சிரமமாக இருக்கப் போகிறது. அதாவது எல்லோரையும் எப்போதும் ஏமாற்றிய ராஜதந்திரம் தற்போது முடியும் தறுவாய்க்கு வந்துவிட்டது. ஆங்கிலத்தில் சொற்சிலம்பமாடி நாசுக்கான வசனநடைப் பிரயோகங்களைப் பாவித்து, பிரேரணைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதன்மூலம் இந்த ராஜதந்திரிகள் தங்கள் மேதாவிலாசத்தை ஆங்கில இலக்கணத்தில் வேண்டுமானால் காட்டலாம். ஆனால், மூன்றே நாட்களுக்குள் கிட்டத்தட்ட ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான தங்கள் உறவுகளைப் பறிகொடுத்துவிட்டு அதற்காக நீதிகேட்டு நிற்கும் உலகத் தமிழினத்தின் அகநெருப்பை இந்த இலக்கணங்களால் அணைத்துவிட முடியாது என்பது சிறிது சிறிதாக இப்போது துலாம்பரமாகி வருகிறது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ஐநா மனிதவுரிமைப் பேரவை கொண்டுவந்த தீர்மானத்தில் இந்திய ராஜதந்திரிகள் தங்கள் ஆங்கிலப் புலமையைக் காட்ட வெளிக்கிட்டு இப்போது மூக்குடைபட்டுப் போயிருக்கிறார்களேயொழிய ராஜதந்திர ரீதியில் பெரிய ஆதாயங்கள் எதையும் அடைந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்தியா கொண்டுவந்த மாற்றத்தைப் புரிந்துகொண்டு அதன்மீது நன்றியுணர்வோடு இலங்கையில் யாரும் இதுவரை கருத்துக் கூறவில்லை. எல்லோரும் இந்தியா தங்களுக்கு எதிராக வாக்களித்து விட்டதே என்று குறைதான் கூறுகிறார்கள். அமெரிக்காவும் அரசியலில் தங்கள் மேதாவிலாசத்தைக் காட்ட முற்பட்ட இந்திய ராஜதந்திரிகளின் அற்பத்தனமான இந்த நடவடிக்கையையிட்டு எதுவும் செய்ய முடியாமல் அவர்களின் விருப்பப்படி எதையாவது மாற்றவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டது.

சில தனிமனிதர்களின் பக்குவமற்ற செயற்பாடுகள் சில வேளைகளில் ஒரு சமூகத்தையோ ஒரு இனத்தையோ பெரிதும் பாதித்துவிடும். மேற்படி பிரேரணையில் இந்தியாவின் பெயரால் சில தனிமனிதர்கள் தமது மேதாவிலாசத்தைக் காட்டச்செய்த மாற்றங்களும் இத்தகைய பாதிப்பையே ஏற்படுத்தப் போகின்றன. இலங்கையின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக மனிதவுரிமைப் பேரவையைக் காத்திருக்க வைப்பதும், கடைசியில் ஒத்துழைப்பு எதுவும் கிடைக்காத நிலையில் மனிதவுரிமைப் பேரவை 22வது கூட்டத்தொடரில் தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பதும். அதனை விவாதத்திற்கு எடுத்துவிட்டு இலங்கைமீது மீண்டுமொரு கண்டனப் பிரேரணையையோ அல்லது வேண்டுகோளையோ நிறைவேற்ற முற்படுவதும், இந்தியா அதனிலும் சில திருத்தங்களைச் செய்தாற்தான் ஆதரிப்பேன் என்று அடம்பிடிப்பதுமாக காலத்தை இழுத்தடிக்கக்கூடிய நடவடிக்கைகளையே நாம் வருங்காலத்திலும் எதிர்பார்க்க முடியும். அதன் விளைவு! இலங்கைத் தீவில் தமிழினத்தின் முற்றான அழிவுக்கே இட்டுச் செல்லக்கூடும்.

நல்லவேளையாக தமிழகம் இதனைப்புரிந்து கொண்டு இந்த ராஜதந்திரிகளின் அர்த்தமற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, உலகத் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்பட முற்பட்டிருப்பது ஆறுதல் தருகிறது. இதுவரை பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டித் தமிழகத்தை அடக்கி வைக்க முற்பட்ட இந்திய ராஜதந்திரம் இனி உருப்படியாக ஏதாவது செய்தேயாக வேண்டுமென்னும் நிர்ப்பந்தத்துக்குள் சிக்கியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் தலைவிதியை எழுதவேண்டிய பொறுப்பை உலகமும், அதனை ஊக்கு விக்கவேண்டிய பொறுப்பை புலம்பெயர்ந்த சமூகமும், எமது தேசியத்திற்கெதிரான இந்தியாவின் நடவடிக்கைகளை அடக்கி அதனை வழிக்குக் கொண்டுவரவேண்டிய பொறுப்பை தமிழகமும் எடுக்கும் போதுதான் தமிழனின் விடுதலைக்கான பாதை போடப்பட முடியும்.

அபிவிருத்தியென்ற பொற்கூண்டினுள்ளே ஆயுத முனையில் அடக்கி வைக்கப்படும் கிளிகளாக ஈழத் தமிழினத்தை வாழப்பழக்கி விடுவதுதான் இலங்கையரசின் நோக்காக இருக்கிறது. எந்தவித அரசியல் உரிமைகளுமற்றவோர் சிறுபான்மையினமாக எண்பது வீத பெரும்பான்மையிடம் நாம் அடங்கிப்போக வேண்டும், தற்போதுள்ள சிங்களக் கட்சிகளுடன் எமது பிரதிநிதித்துவம் கலந்து கரைந்து விடவேண்டும், எமக்கென இன்றிருக்கும் தாயகம் இல்லாதொழிந்து பெரும்பான்மையினத்தின் ஆதிக்கத்துக்குள் முழு இலங்கையும் கொண்டுவரப்படவேண்டும் என்னும் பேரினவாதவெறியை எவ்வாறு எதிர்கொண்டு எமது பூர்வீக தாயகத்தை ஜனநாயக அரசியல், ராஜதந்திர வழிமுறைகளால் வென்றெடுப்பது என்பதே இன்று நம்முன்னுள்ள மிகப்பெரிய கேள்வியாகவிருக்கிறது.

**தமிழகம் மட்டும் உரிய காலத்தில் விழித்தெழுந்து சரியான நடவடிக்கையில் இறங்காவிட்டால் பாக்குநீரிணைக்குத் தெற்கே தமிழினத்தின் சுவட்டைக்கூட எதிர் காலத்தில் காணமுடியாமல் போகலாம்.**

தமிழ்நாட்டின் தொடர்ச்சியான கண்காணிப்பும் ஆதரவும் இல்லாவிடில் தமிழீழ மக்களின் அடையாளம் சிதைக்கப்பட்டுவிடும். இந்தியாவும் அதன் ராஜதந்திரமும் இந்தச் சிதைவைக் கருத்திலெடுப்பதாகத் தெரியவில்லை.

இலங்கையில் தமிழர் பிரச்சனையென்று ஒன்று இல்லாதுவிடின் அதன் அணிசேரும் தன்மையும் மாற்றமடைந்துவிடும். சீனாவின் அச்சுறுத்தல் தனக்கு அதன்பிறகு இருக்காது என்று இந்திய ராஜதந்திரம் தப்புக் கணக்குப் போடுகின்றது.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)


# Wine Tower விற்பனைக்கு (For Sale)



எங்கள் நிறுவனத்தில் 4 பாரமான தட்டுக்களை கொண்டதும், 172 - 180 Bottleகளை கொள்ளளவு (capacity) கொண்டதுமான, சிறந்த வியாபார உத்திகளுக்கு (Great promotional display) உகந்ததுமான பழரச கோபுரம் (Wine tower) மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உள்ளது. இது உங்களின் wine விற்பனை வேகத்தினை அதிகரிக்கும் முகமாக எமது நிறுவனத்தினால் (Nisha trading Limited) மிகக் குறைந்த விலையுடன், தரமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**விலை : £199.00 மட்டுமே (We Beat All UK Prices)**

Item description:
360 degree wine tower black colour
Size: 770mm x 770mm x 550mm

CHEAP AND QUALITY PRODUCT

கிடைக்கும் இடங்கள்:

**Nisha Wine**
Unit 05,
Roseberry Avenue
Tottenham, N17 9SR

**Shakthi Cash & Carry**
Unit 04,
681, Mitcham Road,
Croydon, CR0 3YH

**Hi-Line Cash & Carry**
Unit 02,
40, Purley way
Croydon, CR0 3JP

மேலதிக தொடர்புகளுக்கு: (தொலைபேசி) - 0208 443 7058
E Mail : info@nishatrading.com

# நெருக்கடிக்குள் உள்ளதா தமிழ்த் தேசியம் ?



தர்மரத்தினம் சிவராம் (11.08.1959-28.04.2005)

*(மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் அவர்கள் கொல்லப்படுவதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்னர் அவரால் எழுதப்பட்ட கட்டுரையை அவரது 7வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மீள்பிரசுரம் செய்கிறோம். இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் இன்றைய அரசியல் நிலவரத்துக்கு பொருந்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது )*

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் பலதையும் பத்தையும் பற்றி ஒரு முறை பேசிக்கொண்டிருந்தபோது அவர் "நான் எது வந்தாலும் தேசியத்தின் பக்கந்தான், நாம் தேசியத்தைக் கடைசிவரை விட்டுக்கொடுக்க முடியாது" எனக் கூறினார். தேசியம் எனப் பேசும் போது நீங்கள் எதை கருதுகின்றீர்கள்? எதை விளங்கிக் கொள்கின்றீர்கள்? என அவரிடம் கேள்வி கேட்டு உரையாட அப்போது சூழ்நிலை அனுமதிக்கவில்லை. ஆயினும் அங்குமிங்குமாகத் தொடர்கின்ற பயணங்களின் தனிமையில் இக்கேள்வியை அசைபோட்ட போது மேலும் சில கேள்விகளும் எண்ணங்களும் தோன்றின. தமிழ் தேசியம் பற்றி ஒரு மறுபார்வையை வேண்டி மேற்படி கேள்விகளையும் எண்ணங்களையும் உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

முதலாவது தமிழ்தேசியம் என்றால் புரிந்து கொள்ளப்படுவது என்ன? நான் மேற்குறிப்பிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரைப் போல் தேசியம் பேசுகின்றவர்கள் அதற்கேதாவது வரைவிலக்கணம் வைத்திருக்கின்றார்களா? தமிழ் தேசியம் என்பது ஒரு கருத்தியலா? அதாவது இதுதான் தமிழ் தேசியம் என நாம் அனைவரும் இனங்கண்டிடக் கூடிய கருத்துக்களின் தொகுப்பா? அல்லது அது தமிழனாய் தம்மைக் கருதுகின்ற ஒவ்வொருவரிடமும் இருக்கக் கூடிய ஒரு சமூக உள்ளுணர்வா? அல்லது தமிழ் மொழியைத் தம் தாய் மொழியாகக் கருதுகின்ற அனைவரிடமும் நாடு, மதம் எனும் பேதங்களை மேவி பரந்து கிடக்கின்ற ஒரு உளப்பாங்கு எனத் தமிழ்த் தேசியத்தை நாம் கூறலாமா?

இந்த உணர்வு அல்லது உளப்பாங்கு தமிழர் எனத் தம்மைக் கருதுகின்ற அனைவரிடமும் இன்று காணப்படுகின்றதா? அன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் இன மக்களிடம் மட்டுமே ஒரு அரசியல் உந்துவிசையாக உள்ளதா? இப்படியான கேள்விகளை நான் அடுக்கிக்கொண்டு போவதற்குக் காரணமுண்டு. எமது உரிமைப் போராட்டத்தின் வெற்றிகளும் சரி, பின்னடைவுகளும் சரி, தோல்விகளும் சரி, தமிழ்த்தேசியத்தின் பல்வேறு விளைவுகளாகவேயுள்ளன.

உதாரணமாகத் தமிழ்த் தேசியம் பற்றித் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை முன்னாள் சிறப்புத் தளபதி கருணாவிற்கு இருந்த புரிதலும் அவர் ஏற்படுத்திய குழப்பங்களுக்கு ஒரு முக்கிய காரணம் என்றே நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. புலிகளால் துரோகிகள் எனக் கண்டிக்கப்படும் மாற்றியக்கத் தலைவர்கள் கூட செய்யாத ஒரு கைங்கரியத்தை அவர் செய்துள்ளார். இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையே வடக்கு கிழக்கு ஆகிய சிறிலங்கா அரசின் நிர்வாக மாகாணங்கள் இணைந்த தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயக பூமி எனும் கருத்தாகும். இது இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் கேள்விக்குட் படுத்த முடியாத கருத்தாக, நம்பிக்கையாகக் கடந்த 56 ஆண்டுகளாக நிலைத்து வந்துள்ளது. நான் அறிந்தவரை சிறிலங்காப் படைகளோடு இன்று முற்றாகச் சங்கமமாகிப் போய்விட்ட ராசீக் குழுவின் தலைவர் கூட தமிழ்பேசும் மக்களுடைய தாயக ஒருமைப்பாடு சிதைக்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்தது கிடையாது. (சிறிலங்காப் படைகளுடன் இவர் இணைந்து வேலை செய்த போது நடைமுறையில் அவரது செயல், தாயக ஒருமைப்பாட்டை சிதைப்பதற்கே உதவிற்று என ஒருசாரார் கூறலாம். ஆனால் இங்கு வலியுறுத்த முனையும் விடயத்திற்கு ராசீக் கிழக்கைப் பிரி என அறிக்கை மேல் அறிக்கை விடவில்லை என்பது தான் முக்கியம்).

எம்மைப் போன்றவர்கள் ஒரு காலத்தில் மட்டக்களப்பிற்கெனத் தனி இயக்கம் தொடங்கிய போதும் அதை தமிழ் பேசும் மக்களது தாயக ஒருமைப்பாட்டை காக்கின்ற ஒரு விடுதலை அமைப்பாகவே கருதினோம். பின்னர் விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடைசெய்து தாக்குதல்களில் ஈடுபட்டபோதும் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைப் பிரி என்று யாரும் கிளம்பவில்லை. ஆனால் இன்று கிழக்குத் தனியாக வேண்டும் என்ற கூச்சலோடு புறப்பட்டுள்ளார் புலிகளின் முன்னாள் தளபதி. தமிழ்த் தேசியத்தில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பிரதிபலிப்புத்தான் கருணா என்ற நபர். இது விளிம்பிற்குத் தள்ளப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தை அணி திரட்டி மிக வெற்றிகரமான ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கு தமிழ் தேசிய உணர்வும் அதன் வழிப்பட்ட கருத்தியலும் அடித்தளமாயிருந்தன என்ற உண்மை ஒரு புறம்.

அதேவேளை பிராந்தியம், மதம், வர்க்கம் என தமிழ் பேசும் தாயக மக்களை கூறுபோடக் கூடிய அகமுரண்பாடுகளைத் தெளிவுடன் மேவி இல்லாது செய்யக்கூடிய ஆற்றல் மிக்கதொரு கருத்தியலாகத் தமிழ் தேசியத்தை நாம் வளர்த்தெடுக்கத் தவறியதன் விளைவுகளை நாம் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகச் சந்தித்து வந்துள்ளோம் என்ற உண்மையை நாம் மறுபுறம் நோக்க வேண்டும்.

முஸ்லிம்களை அந்நியப்படுத்தி சிங்கள மேலாண்மையாளரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எமது போராட்டம் ஆட்படுவதற்கும் இன்று பிராந்தியப் பிரிவினைப் பேசும் ஒருவர் உருவாகியதற்கும் அடிப்படைக் காரணம்

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ கஞ்சல் கொட்டும் இந்தியா

இந்திய அரசுக்கு எதிராக ஈழ ஆதரவுத் தமிழர்களும் கஷ்மீர்ப் போராளிகளும் கடுமையான விமர்சனங்களை அச்சு ஊடகங்கள், இணையத் தளங்கள், சமூகத் தளங்கள் போன்றவற்றில் முன்வைப்பது இந்திய அரசை கடும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இதற்கு எதிராக அது இப்போது பல தரப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது. இலண்டனிலும் ஈழ ஆதரவாளர்கள் இந்தியாவின் துரோகங்களைப் புட்டுப் புட்டு வைப்பதால் அதற்குப் பதிலடியாக இலண்டனில் இந்தியா கஞ்சல் கொட்டத் தொடங்கியுள்ளது.

## ■ ஜீரிவியில் ஒரு பன்னாடை

இலங்கை அதிபர் மஹிந்தவின் **கைக்கூலி**எனக் கருதப்படுபவரும் தமிழின விரோதியும் யாழில் வைத்து எம்ஜீஆரைக் கேவலப்படுத்தியவரும், மஹிந்த ரஜபக்சவிற்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்த பன்னாடையுமான சுதர்சன நாச்சியப்பானின் பேட்டி ஜீரிவியில் ஒளிபரப்பானது தமிழின உணர்வாளர்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. மாற்றுக் கருத்துக்கு இடம் கொடுப்பது வேறு மாற்றானின் பிரச்சாரத்திற்குக் களம் அமைப்பது வேறு என்கிறார்கள் அவர்கள்.

## ■ கொல்லிணக்கமும் கற்றுக் கொள்ளாத பாடங்களும்

காலியில் தமிழர்கள் குடியிருப்புகளில் தீவைப்பும் கொள்ளைகளும், யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட இளைஞன் சடலமாக மீட்பு, சிறையில் உள்ள தமிழ்க் கைதிகளை சிங்களக் கைதிகள் கத்திகளால் வெட்டு போன்ற செய்திகளுக்கு மத்தியில் இந்தியப் பாராளமன்றக் குழு இலங்கை வந்து நல்லிணக்கம் பற்றி ஆராய்கிறது.

## ■ கடாஃபிக்கு நடந்தது எமது நாட்டில் நடக்குமா

லிபிய முன்னாள் தலைவர் கேணல் மும்மர் கடாஃபிக்கு நடந்தது தனக்கு நடக்காது என்றார் இலங்கை அதிபர் மஹிந்த. கடாஃபி தனக்கு எதிராக கிளர்ச்சி செய்த பெண்களைக் கற்பழிக்கும் படி தனது படையினருக்கு உத்தரவிட்டார் என ஜேர்மனியப் பெண் ஊடகவியலாளர் அம்பலப்படுத்தியுள்ளார். இதுபோல் இலங்கையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை யார் அம்பலப்படுத்துவார்?

## ■ கெடுவான் கேடு நினைப்பான்

ஜெனீவாத் தீர்மானத்தைத் தொடர்ந்து இலங்கை இந்தியாவிற்கு எதிராகப் பல நடவடிக்கைகளை எடுக்கிறது. சிங்களவர்களுக்கு இந்தியாவில் மீது வெறுப்பு வரச்செய்ய இந்தியாவில் பயிற்ச்சி பெற்ற விடுதலைப் புலிகள் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர் என்ற செய்தியைப் பரப்பிவிட்டுள்ளது. இது புதுடில்லியை மட்டுமல்ல போயஸ் தோட்டத்தையும் ஆத்திரப்படுத்தியுள்ளது. பல வற்புறுத்தல்களுக்குப் பின்னர் அமெரிக்கா இந்தியாவை இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வைத்தது. இந்தியாவை இலங்கை விரோதித்தால் இரசியாவையும் இழக்கும் சாத்தியம் உண்டு.

*ஊருளவாரி*




ஒருபேப்பர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த
அ.இரவி மற்றும் சயந்தன் ஆகியோரது நூல் வெளியீட்டுக்கு
ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள் அன்புடன் அழைக்கிறோம்....

அ.இரவி எழுதிய
'பாலைகள் நூறு' நூல் வெளியீடு

சயந்தன் எழுதிய
'ஆறாவடு' விமர்சன அரங்கு

'வெடித்த நிலத்தில் வேர்களைத் தேடி'
விவரணப்பட வெளியீடு

ஒன்றைச் செய்யுறதென்டு சொல்லிட்டு சில நேரம்
செய்யாமல் விட்டுவிடுவம் ஆனால் சற்று
மாறுதலுக்காக சொன்ன மாதிரியே செய்யப் போறம்...

MAY 12

- இடம்: சிவயோகம் மண்டபம்.
  180 – 186 UPPER TOOTING ROAD,
  SW17 7EJ
- காலம்: 12 மே 2012
- நேரம்: மாலை 5:00மணி முதல்

மேலதிக விபரங்களுக்கு : 020 7043 4310

www.facebook.com/orupaper info@orupaper.com @orupaper

## சித்திரைத் திருவிழா







கொவன்றி பகுதியில் அமைந்திருக்கும் ஈழக்கந்தன் ஆலயத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சிறப்புப் பூஜைகள் இடம்பெற்றன. நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

## பத்திரிகை அறிமுகம்







புலம்பெயர் தமிழ் மக்களுக்கான ஊடகங்களின் வரவு கொண்டாடத்தக்கவை. கவனிக்கத்தக்கவை அந்த வகையில் நோர்வேயில் வாழும் தமிழ்ச் சமூகத்தின் பல்லாண்டு கால எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் 'தமிழ் வானவில்' என்னும் புதிய பத்திரிகை சித்திரை புத்தாண்டு முதல் வெளிவருகின்றது. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் பலர் வாழும் நோர்வே நாட்டில் தோன்றிய முதலாவது ஜனரஞ்சக தமிழ் பத்திரிகை இதுவாகும். இப்பத்திரிகையின் அறிமுகம் மற்றும் வெளியீட்டு நிகழ்வு புதுவருட தினத்தன்று பேர்கனில் இடம்பெற்றது. இந்த விழாவில் ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா பிரதம அதிதியாக பங்கேற்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட பேர்கன் வாழ் கல்வியாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் தங்களின் கருத்துகளையும் வழங்கினர். அறிமுக நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்

## இளையோர் ஒன்றுகூடல்









உலகளாவிய தமிழ் இளையோர் அவையினரால் ஒழுங்கு படுத்தப்பட்ட உலகளாவிய தமிழ் இளையோர் ஒன்றுகூடல் மற்றும் கருத்தரங்கானது லண்டன் மாநகரில் சனி 07 .04 .2012 மற்றும் ஞாயிறு 08 .04 .2012 ஆகிய தினங்களில் இடம்பெற்றது. உலகத் தமிழ் இளையோர்கள் ஒன்றுகூடி தேசியம், தமிழ் மொழி, தமிழினப்படுகொலைகள் மற்றும் கலை கலாசாரம் பற்றி விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டார்கள்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக உலகம் முழுவதும் இருந்த இளையோர்கள் வருகை தந்தார்கள் குறிப்பாக கனடா, ஜெர்மனி, இத்தாலி, நோர்வே, சுவீடன், சுவிஸ் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் இருந்தும் உரை நிகழ்த்தினார்கள். இம்மாநாடு இரு பிரிவுகளாக தமிழர்களின் பூர்வீகம் தொடக்கம் தேசிய அடையாளங்கள் வரை சனிக்கிழமையும் தமிழின இனப்படுகொலை தொடக்கம் அனைத்துலகம் வரையான கலந்துரையாடல்கள் ஞாயிற்றுகிழமையும் இடம்பெற்றன. இது தவிர 60 வருடங்களுக்கு மேலாக தொடரும் தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையினையும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உலக அரங்கிற்கு எடுத்துசெல்லும் முகமாக அதனுள் பாண்டித்தியம் உள்ள பேச்சாளர்களுடனான பட்டறைகளும் இடம்பெற்றன.

# மரண அறிவித்தல்



**அமரர் மகேஸ்வரி பொன்னுத்துரை**

மலர்வு: 13-03-1925

உதிர்வு: 16-04-2012

யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த **மகேஸ்வரி பொன்னுத்துரை** லண்டனில் 16-4-2012 காலமானார்.

இவர் மாணிக்கம் – கண்மணி தம்பதியின் அன்பு மகளும், தில்லையம்பலம் – பூரணம் தம்பதியின் (நீர்வேலி) மருமகளும், காலம் சென்ற பொன்னுத்துரையின் (Asst. Auditor General Sri Lanka) அன்பு மனைவியும், லிங்கம் (கண்ணன் – லண்டன்), கருணாகரன் (சிட்னி), குமுதினி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெயந்தி, சுபாஷினி (உஷா), திரு ஆகியோரின் அன்பு மாமியும், சஞ்ஜே, பிரதீப், பிரவீனா, நிஷாந்தி, நிஸ்கலா, மயூரன் ஆகியோரின் பேத்தியும், Toraவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் **22-04-2012** அன்று காலை **10.30** முதல் **12.30** வரை இலக்கம் **50, Whitta Road, E12 5DA** உள்ள **Manor Park Chapel**ல் நடைபெற்று, பிற்பகல் **1.00** மணிக்கு **(Aldersbrook Road, Manor Park, E12 5DQ** வில் உள்ள) **City Of London Cemetery**ல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : பிள்ளைகள்**

**மேலதிக தொடர்புகளுக்கு:**

**Tel: 0208 503 9399**



# சிமிக்கி

*சாத்திரி*
*(ஒரு பேப்பர்)*

மனோகரா தியேட்டர் முதலாவது வகுப்பு இருக்கையில் நாதனும் சாவித்திரியும் படத்தில் மூழ்கிப்போருந்தனர். மடமடக்கும் பட்டுச் சேலையில் அவளும் வெள்ளை வெள்ளைச் சட்டை வெள்ளைக்காற்சட்டையில் அவனும். அவர்களை பார்தததுமே புதிதாய் கலியாண மானவர்கள் என்று சொல்லிவிடலாம்.வெள்ளி விழா படத்தில் ஜெமினிகணேசனை ஒட்டி உரசி யபடி ஜெயந்தி காதோடுதான் நான் பாடுவேன் காதோடுதான்நான் பேசுவேன் என்கிற பாடலை பாடிக்கொண்டிருந்தார். எல் ஆர் ஈஸ்வரியின் குரலில் அனைவருமே சொக்கிப் போய் அமர்ந் திருந்தனர். நாதனின் விரல்கள் சாவித்திரியின் விரல்களிற்குள் புகுந்து இறுக்கிக் கொள்ள திரை வெளிச்சத்தில் நாணத்துடன் நாதனை திரும்பிப்பார்தாள். நீரும் அசல் அந்த கீரோ யின் மாதிரித்தான் இருக்கிறீர் யாரோ புது ஆள் பெயரை எழுத்தோட்டத்திலை கவனிக் கேல்லை வாற ஞாயிறு வந்து படத்தை திரும்ப பாக்கேக்குள்ளை கீரோயினின்ரை பேரை கவ னிக்கவேணும். அதிலை அவா போட்டிருக்கிற மாதிரி ஒரு சிமிக்கி உமக்கும் போட்டால் அந்த கீறோயின் மாதிரியே இருப்பீர் எண்டு சாவித்திரி யின் காதில் கிசுகிசுத்தான். படம் முடிந்து வெளியே வந்து சைக்கிளில் சாவித்திரியை ஏற்றிக்கொண்டு வீட்டிற்கு போய்க்கொண்டிருக் கும் போது அவனது மனம் முழுதும் எப்படி யாவது அவளிற்கு ஒரு சோடி சிமிக்கி வாங்கி குடுப்பது என்கிற எண்ணம் மட்டும்தான் மன தில் நிறைந்திருந்தது சாவித்திரியோ காதோடு தான் பாடலை மனதிற்குள் முணு முணுத்த படியே இருந்தாள்.

நாதன் தொலைத் தொடர்பு இலாகாவில் சாதாரண ஊழியன். சாவித்திரியை கோயிலில் அவனது அம்மா காட்டியதுமே பிடித்துபோய் திருமணம் செய்து கொண்டான். இருவர்களது குடும்பங்களும் நடுத்தர குடும்பங்கள்தான். நாதன் குடும்பத்தில் ஒரேயொருத்தன் என் பதால் அவனது வீட்டிலேயே சாவித்திரியோடு குடும்பம் நடாத்தத் தொடங்கியிருந்தான். நாலைந்து தடவைகள் வெள்ளிவிழா படத்தை அவர்கள் பார்த்து முடித்துவிட்டதொரு நாளில் வேலை முடிந்து வீட்டிற்கு மகிழ்ச்சியோடு வந்த நாதன் சாவித்திரியை தன் தாய் தந்தைக்கு தெரி யாமல் இரகசியமாக அவளை அறைக்குள் அழைத்தவன். அவளது கண்ணை மூடச் சொல்லி கைகளில் சிறிய பொட்டலத்தை வைத் தான். கண்களை திறந்த சாவித்திரியின் கண்கள் ஆச்சரியத்தோடு ஆனந்தக் கண்ணீ ரால் கசிந்தது. அவளது கைகளில் ஒரு சோடி சிமிக்கி மின்னியது.அவளது காதில் இருந்த வளையங்களை கழற்றிவிட்டு சிமிக்கியை போட்டு விட்டவன் நீர் இப்ப அசல் அந்த கதாநாயகி மாதிரியே இருக்கிறீர் எங்கை ஒருக்கா அந்த பாட்டை பாடுமன் என்றதும். வெட்கத்தில் குனிந்த சாவித்திரியின் கன்னத்தின் அருகே முகத்தை கொண்டு போனதுமே. கெதியிலை அப்பா ஆகப்போறார் இன்னும் ஆசையைப் பார் என்று வயிற்றை தடவிக்காட்டினாள். அவன் கன்னத்திற்கு கொடுக்கப்போன முத்தத்தை அப்படியே இறக்கி அவளது வயிற்றில் கொடுத்து விட்டு இப்ப இரண்டுபேருக்கும் கணக்கு தீர்த் தாச்சு என்று சிரித்தான். இண்டைக்கு நல்லம்மா கிழவி என்ரை வயித்தையும் நான் நடக்கிற தையும் பாத்து ஆம்பிளை பிள்ளைதான் எண்டு சொன்னவ....

உண்மையாவே நல்லம்மா கிழவி சொன்னால் அரக்காது என்றபடி மீண்டும் அவளதுகன்னத்தை நோக்கி முகத்தை கொண்டு போகும் பொழுது.. டேய் தம்பி வேலையாலை வந்ததும் சாப்பி டாமல் உங்கை என்னடா செய்யிறாய் என்கிற அவனது அம்மாவின் குரலை கேட்டதும் அவசர மாய் உடுப்பை மாற்றிக்கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.

♠ ♠ ♠ ♠

ஒவ்வொரு இரவிலும் அவனது அணைப்பில் இருக்கும் சாவித்திரியின் சிமிக்கியை அவன் சுண்டி விழையாடுவததோடு அந்த பாடலை ஒருக்கால் பாடச்சொல்லி கேட்பதும் அவளும் இரண்டொரு வரிகளை முணுமுணுப்பதும் அவ னிற்கு ஒரு பழக்கமாகிப் போய் விட்டிருந்தது கால ஓட்டங்கள் அவர்களிற்கு ஒரு மகனை யும் மகளையும் பிள்ளைகளாக்கி மகிழ்வை கொடுத்ததோடு அவனது தாய் தந்தையரின் மர ணங்களும் இயற்கையோடு கரைந்துபோய்விட் டிருந்தது. அவனது வேலையும் பறிபோயிருந் தாலும்.சிறிதளவு ஓய்வூதியப்பணம்கிடைத்துக் கொண்டிருந்தது..அளவான வருமானம் அழ கான குடும்பம். அன்பான மனைவி சாராசரிமனி தருக்கு இருக்கவேண்டிய அனைத்தும் இருந் தாலும். நாட்டின் அசாதரண சூழலும் அரசி யலும் அவர்களையும் அவ்வப்பொழுது சீண்டத் தவறியதேயில்லை. தொண்ணூறுகளின் ஆரம்பம். பிள்ளை பிடி இராணுவத்திடமிருந்து பிள்ளையை காப்பாற்ற கையிலிருந்த பணத் தோடு நகைகளையும் அடைவு வைத்து மகனை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். பதி னெட்டுவருடங்களிற்கு பின்னர் முதன் முதலாக சாவித்திரியின் சிமிக்கியும் கழன்று அடைவு கடைக்குள் போயிருந்தது. அவளிற்கு வேறு எதுவும் பேட விருப்பம் இல்லததால் வேப்பங் குச்சியை முறித்து காது ஓட்டையில் செருகி விட்டிருந்தாள் நாதனிற்கும் சிமிக்கி இல்லாத சாவித்திரியின் முகத்தை பார்க்கவே அந்தர மாக இருந்தது. மகன் வெளிநாட்டிலை இருந்து காசு அனுப்பினதும முதல் வேலையா நகை யளை மீட்கலாம். இல்லாட்டி நான் சிமிக்கியை மட்டுமாவது எப்பிடியும் மீட்டுத் தருவன் என்று அவள் மனதை தேற்றியபடியிருந்தார். அதே போல் பிரான்ஸ் வந்து சேர்ந்துவிட்ட மகன் பல மாதங்களின்பின்னர் அனுப்பியபணத்தில் சிமி க்கி மீண்டதும்தான் சாவித்திரியின் முகத்தில் மகிழ்ச்சி முழுவதுமாய் மீண்டிருந்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வோடை மகளும் குமராகிவிட்ட நிலையில் வன்னிக்குள் புகுந்து விட்டிருந்தவர்கள். உடனடி செலவுகளிற்காக நகைகள் அடைவிற்கு போனாலும் சாவித்திரி சிமிக்கியை மட்டும் கழற்றவேயில்லை.அதே நேரம் மகள் இயக்கத்துக்கு ஓடிடுவாளோ எண் டிற பயத்திலை மகனை நச்சரிச்சு அவளை யும் ஒரு மாதிரி இலண்டனில் கட்டிக்குடுத்து விட் டிருந்தார்கள். காலப்போக்கில் வன்னிக்குள் ளேயே புலிகளின் நிருவாகக் கட்டமைப்பில் நீதி நிருவாகத் துறையில் நாதனிற்கு பதிவாள ராக வேலையும் கிடைத்துவிட வன்னியிலேயே தங்கிவிட்டிருந்தனர். இறுதி யுத்தத்தில் பல இலட்சம் மக்களோடு மக்களாக அவர்களும் மணிக்பாம் முகாமில் முடங்கிப் போனவர்கள். பிள்ளைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவ தற்குகூட கையில் பணமேதும் இல்லாத தால் மீண்டும் சிமிக்கியை கழற்றி அம்மானின் ஆள் என்டவனிடம் குடுத்து கொஞ்சப்பணம் வாங்கிமகனுடன் கதைத்து உண்டியலில் காசும் எடுத்து வெளியே வந்த பிறகு அம்மானின் ஆளை தேடினால் காணக்கிடைக்கவில்லை. சிமிக்கி போன கவலையில் மீண்டும் சாவித்திரி யின் காதுகளில் வேப்பங்குச்சி புகுந்து கொண் டது. கொழும்பில் தங்கியிருந்தவர்களிற்கு அவசரமாக ஸ்பொன்சர் வேலைகள் நடந்தது.

அனால் நாதன் மகனிடமும் சாவித்திரி மகளிடமும் போய் விட்டிருந்தார்கள். அப் பொழுதுதான் தாங்கள் தனித்தனி தீவுகளிற் குள் தூக்கிவீசப்பட்டிருப்பதை அவர்கள் உணர் ந்தார்கள். தொலைபேசியில் மட்டுமே நலம் விசாரிப்புக்கள். ஒருநாள் சாவித்திரி சாதாரண மாய் சாப்பிட்டியளோ என்று தொலைபேசியில் கேட்டதற்கு. என்னத்தை எதை சாப்பிட்டாலும் வைக்கலை சாப்பிட்டமாதிரிக் கிடக்கு ருசியே இல்லையெண்டு சொல்லப்போக அது மருமகளின் காதில் விழுந்து அதை அவள் அழுதழுது என்ரை சாப்பாடு சரியில்லையாம் எண்டு மாமா மாமிட்டை சொல்லுறார். ஏதோ என்னாலை முடிஞ்சது இவ்வளவுதான் எண்டு கணவனிடம் சொல்ல அது பெரிய பிரச்சனை யாகிப் போயிருந்தது. அன்றிரவு மகன் நாத னிற்கு வெளிநாடு ஐஸ் சாப்பட்டு வகை பற்றி பெரியதொரு விரிவுரையே நடத்தியதோடு உங்களிற்கு சிகரற் வாங்கித்தாறன். குடிக்க பியர் வாங்கி அடிக்கி வைச்சிருக்கிறன். வெத் திலை வாங்கி போட காசும் தாறன் இதை விட வாழக்கையிலை வேறை என்ன வேணும் இனிமேல் மருமகளை குறைசொல்லாதையுங்கோ என்று முடித்திருந்தான். அதற்கு பிறகு நாதனும் பேச்சை குறைத்துக் கொண்டார். தமிழ் அதிகம் தெரியாத பேரப்பிள்ளையும் பள்ளிக்கூடம் போய்விட்டால் தனியே, தொலைக்காட்சிதான் பொழுது போக்கு அதுவும் நாள்செல்ல வெறுத்துப் போய்விட கொஞ்சம் வெய்யிலடித் தால் வெளியில் இறங்கி உலாவுவார். சாவித் திரிக்கு தொலைக்காட்சி மட்டுமே தஞ்சமாகிப் போனது. மகள் எவ்வளவு நச்சரித்தும் காதில் தோடு போட மறுத்துவிட்டாள். எங்கையாவது வெளியில் போகும் போது மட்டும் மானம் மரி யாதைக்காக மகள் தருவதை போடுபவர் வீட் டிற்கு வந்ததும் கழற்றி குடுத்துவிடுவார் மகளும் காரணம் கேட்பதில்லை சாவித்திரியும் சொல்வதில்லை.

♠ ♠ ♠ ♠

ஒரு வருடத்தில் நாதனிற்கு பிரான்சின் விசா கிடைத்துவிட மகன் குடும்பத்தோடு மகளிடம் போயிருந்தார். மனைவியை கண்ட அவரது மகிழ்ச்சி அவளின் காதுகளை பார்த்ததுமே மறைந்து போனது. ஆனால் அவரும் ஏதும் மனைவியிடம் கேட்கவில்லை. பிரான்சிற்கு திரும் பியதும் ஒரு முடிவு செய்திருந்தார். தமிழ் வர்த்தக நிலையங்கள் அதிகம் உள்ள பகுதி யான லா சப்பல் பகுதில் ஒவ்வொரு கடையாக ஏறி வேலை தேடத் தொங்கியிருந்தார். அவரின் வயதை பார்த்து எல்லாருமே தயங்கினா லும் ஒரு கடைக்காரன் இரவிலை இரண்டு மணித்தியாலம் சாமான் அடுக்கிற வேலை சம் பளம் மணித்தியாலத்துக்கு ஏழு யுரோ சம்பளம் பதிய மாட்டன் விரும்பினால் செய்யலாமெண் டான். நாதனுக்கும் கிடைத்தவரை லாபம். அடுத்தநாளே பகல் நகைக்கடை கண்ணாடிக ளிற்குள்ளால் கண்களை மேயவிடத் தொடங் கியிருந்தார்.

மகனிற்கும் தான் வேலைக்கு போறது தெரி யாமலிருக்க தெரிஞ்ச சினேதன் ஒருதன் அம் பிட்டிருக்கிறான் லா சப்பல் பக்கம் போய் அவ னோடை கதைச்சிட்டு வாறனான் என்று கதை விட்டிருந்தார். ஒரு மாதம் போனதும் ராஜூ யுவர் லசின் கதைவை தள்ளிக்கொண்டு உள்ளை புகுந்தவர் தம்பி எனக்கொரு சிமிக்கி வேணும் எண்டார். கடைக்காரனும் இருந்த சிமிக்கிவகை எல்லாத்தையும் அவர் முன் பரப்பினான். இதன்ன ஒண்டும் சரியில்லையெண்டு விட்டு பக்கத்திலிருந்த மோகன் தங்கமாளிகை என்று பாரிசில் இருந்த எல்லாக்கடையும் ஏறி இறங்கி விட்டார் அவர் தேடியமாதிரி சிமிக்கி எங்கையும் இல்லை. திரும்பவும் ராயூயுவர்லசிற்கு நுளைந்த வரிடம் தம்பி நான் சொல்லுறமாதிரி செய்து தருவியோ??

தாராளமா நீங்கள் காசை தாறியள் அதுக் கேற்றமாதிரி செய்து பொருளை தருவம்.

சரி ஒரு பேப்பரும் பேனையும் தாரும். என்ற தும் நீட்டிய பேப்பரில் கண்ணாடியை சரி செய்து விட்டு மெதுவாக நடுங்கும் கைகளால் சிமிக்கியை கீறிமுடித்தார். அவரும் அட்வான்ஸ் குடுத்து சிமிக்கி செய்யத் சொல்லி எல்லாம் நல்லாய் போய்க் கொண்டிருந்த ஒருநாள் கடை யில் சாமான் அடுக்கிக்கொண்டிருந்த நாதன் நிமிர்ந்து பார்த்து திடுக்கிட்டு போனார். மரு மகள் அவரை பார்த்து விட்டு மருதாணி பவுடரை எடுத்துக்கொண்டு போய் கடைக்காரரிடம்...

*தொடர்ச்சி 21ம் பக்கம்*



NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

# எரிபொருள் புரளி

கடந்த சில தினங்களுக்கு முன்னர், எரிபொருள் நிலையங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. காரணம் இருப்பில் இருந்த எரிபொருளின் கையிருப்பு அடியோடு வற்றிவிட்டது. ஓடாத கார்களையும் ஓட்டிச்சென்று, எவ்வளவு கூடுதலாக எரிகொள்கலன்களில் நிரப்பியும், நிரப்பாமலும், ஒரே வெறிபிடித்து அலையும் மனிதர்களைக் கண்டு வெட்கப்படுவதைத் தவிர வேறு என்னதான் செய்யமுடியும்.

இத்தகை பரபரப்புக்கும் காரணமான வதந்தி, எரிபொருள் வினியோகிக்கும் சாரதிகளின் உத்தேச வேலை நிறுத்த எச்சரிக்கை. வதந்திகள் எவ்வளவு தூரம் மனிதர்களை உலுப்பிவிடுகிறது என்பதை எரிபொருள் நிரப்பும் நிலையங்களே சாட்சி. இந்த மனிதர்கள் படும் அவஸ்தையை நேரினில் பார்த்தவர்கள், பலருக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை, நாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனப்போக்கையே அவர்களிடம் பிரதிபலிப்பதைக் கண்டார்கள்.

அது சரி, ஒரு வாரத்துக்கோ அல்லது இரண்டு வாரத்துக்கோ தேவையான எரிபொருளை வாங்கிவிட்டார்களென்று வைத்துக்கொள்வோம். அதன் பிறகும் தட்டுப்பாடு தொடர்ந்தால் என்ன செய்யப் போகிறார்கள். இந்தக் கேள்வியின் உண்மையை உணர்ந்தால், ஒருவேளை எரிபொருள் நிலையங்களில் இடம்பெற்ற முட்டுதல் மோதல்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

மனிதர்களின் மனோபாவம், எரிபொருள்களில் மட்டுமல்ல, தொடர்ந்து வரும் வங்கி விடுமுறை நாட்களில் கூட, பெரிய பெரிய விற்பனை நிலையங்களில் அலைமோதும் கூட்டம், தேவைக்கு அதிகமான பொருட்களை, குறிப்பாக உணவுப்பொருட்களை அள்ளிக்கொண்டு செல்வதை அனேகர் அவதானித்திருப்பீர்கள். இதில் அனாவசியமாக வீசப்படும் பொருட்களை கணக்கில் எடுத்தால், உலகமெங்கிலும் பட்டினியால் உயிரிழக்கும் எத்தனையோ குழந்தைகளுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க முடியுமென்பதை உணர்வது எப்போது.

நிலத்துக்கடியில் கிடக்கும் எரிபொருள் இருப்பு, இன்னும் 50 வருட காலத்தில் இல்லாமல் போய்விடும் என்று ஆய்வாளர்களின் அறிக்கைகள் கூறும். அதே நேரம் ஒரு வாரத்துக்கோ அல்லது இரண்டு வாரங்களுக்கோ தாக்குப்பிடிக்க முடியாமல் வெறிபிடித்து அலையும் இன்றைய சமூகத்தினர், வீதி வீதியாக முடங்கிக் கிடக்கப்போகும் எரிபொருள் நிலையங்களைக் கண்டு எப்படி முகம் கொடுக்கப் போகிறார்களோ அறியோம்.

சூடேறிவரும் சீதோஷ்ண நிலைமைக்கு ஒரு காரணமான எரிபொருளை பக்குவமாக சிக்கனமாக பாவிப்பதற்கு இன்றைய சமூகத்தினர் முன்வராது போனால், 50 வருடத்தில் அருகிப் போகும் எரிபொருள் அதற்கு முன்னரே ஒழிந்து விட நாமே வழிவகுத்தவர்கள் ஆவோம்.

# உயரும் அலைகள்

கடல்கொண்ட நகரங்களின் கதைகளை காவியங்கள் வடித்தன. கடல் அலைகளால் காவு கொள்ளப்போகும் நகரங்கள் பற்றிய எச்சரிக்கையை, அமெரிக்காவின் மிகப்பெரிய Geologial Survey சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இதுவரை சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில், கடல் அலைகள் மெல்ல மெல்ல உயர்வது நிருபணமாகியுள்ளது. 2100 ஆண்டளவில், இதன் உயரம் ஆகக்குறைந்தது 1 மீற்றர்வரை இருக்கலாமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தளவு உயரத்துக்கு கடல் அலைகள் உயருமானால் அனேகமாக 32,000 சதுர கிலோமீற்றர் அளவிலான நிலத்தை அமெரிக்காவில் மட்டும் கபளீகரம் செய்யுமென்பது ஆய்வாளர்களின் மதிப்பீடாகும்.

அமெரிக்காவின் 48 கரையோர மாநிலங்களை ஆட்டிப்படைக்கப்போகும் இந்த கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பு, கரையோரவாசிகளான 3.7 கோடி மக்களை கதிகலங்க வைக்கப் போவது வெளிச்சம். இந்த மக்கள் தொகை கிட்டத்தட்ட அமெரிக்காவின் முழுச்சனத்தொகையில் 1.2 விகிதமென விபரம் கூறியுள்ளனர். ஐந்து பெரிய மாநிலங்களான புளொறிடா, லூசியானா, கலிபோர்னியா, நியூயோர்க், நியூஜேர்சி ஆகிய கடற்பிராந்தியங்களில் கடல் தொழிலையே நம்பி வாழும் இந்தக் குடியிருப்பாளர்கள் ஏற்கனவே பலமுறை சூறாவழியினாலும், கடல்கொந்தளிப்பாலும் நொந்துபோனவர்கள்.

ஒரு மீற்றர் உயரத்துக்கு மோதப்போகும் கடல் அலைகளை எப்படிச் சமாளிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. Environmental Research Letters தரும் தகவல்களின்படி, 2150 நகரங்களின் கரையோர எல்லைகள் உயரும் கடல் அலைகளால் அழிந்துவிடும் ஆபத்து நெருங்கி வருவதை எச்சரித்துள்ளது. இதில், நியூயோர்க், நியூ ஓர்லியன்ஸ், சான் பிரான்சிஸ்கோ ஆகிய நவீன நகரங்களின் கரையோரப்பகுதிகளும் அடங்குமென குறிப்பிட்டுள்ளார்கள்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

இவைபோக, மிரட்டும் இந்த அலைகளின் அசைவுகளால் புயல் மூட்டம் மோதுவதும், வெள்ளம் நாட்டுக்குள் புகுவதும், இடையிடையே சூறாவளிகளின் அச்சுறுத்தல்களும் வரப்போவதை எதிர்பார்க்கலாம். அமெரிக்காவுக்கே இந்தக்கதியென்றால் மாலைதீவு போன்ற தாழ்ந்த பிரதேசங்களில் வாழ்பவர்களின் கதி என்னவாக இருக்குமென நினைக்கவே மனம் சிலிர்க்கிறது.

# கருவிகளைத் திருத்த சூரிய ஒளி

கைகளிலும், பைகளிலும் காவித்திரியும் கைத்தொலைபேசிகள், ஐபோன்கள், அவசர அவசரமாக எடுக்கும்போது கைதவறி விழுவது தவிர்க்க முடியாதது. அதிர்ஷ்டமிருந்தால் அவற்றை திரும்பவும் பயன்படுத்தலாம். விழுந்ததினால் உண்டாகும் கீறல், சேதம் மோசமாக இருப்பின் அவை பயன்படாமல் போவதை நன்கு அவதானித்த ஆராய்ச்சியாளர்கள், இதற்கு ஒரு பரிகாரம் தேட முற்பட்டனர்.

Hattiesburg நகரத்தைச் சேர்ந்த தென்பகுதி மிசிசிப்பி பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் Marek Urban என்பவரும் அவரது குழுவினரும் மேற்கொண்ட ஆராய்ச்சியில், மேற்கூறிய கருவிகளை தயாரிக்க உதவும் பிளாஸ்ரிக் மேலுறைகளுக்குப் பதிலாக மாற்றுவழி ஏதாவது கிடைக்காதா என ஆராய்ந்தபோது புதிதாக உருவாகும் மரப்பட்டைகளின் மூலம் தயாரிக்கப்படும் பிளாஸ்ரிக் உறைகள் சேதமடையும் போது இயற்கையாகவே குணமடையும் தன்மையைக் கொண்டுள்ளதை கண்டுபிடித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது, அவ்வாராய்ச்சியாளர்கள் உபயோகப்படுத்திய மூலப்பொருள் சேதங்களைச் சீர்படுத்தும் போது, கலர் மாறாமலும் லேசர் ஒளி பாய்ச்சியே திருத்தக்கூடியதாக இருந்தது. ஆனால், புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிளாஸ்ரிக் மூலப்பொருள் சேதங்கள் உண்டாகும் இடங்களில் அதன் கலர் சிவப்பாக மாறி, அவை சூரிய ஒளியிலோ அல்லது தகுந்த வெப்பநிலை மாற்றத்திலோ சில நிமிடங்கள் காயவைத்தால், அவை தானாகவே பழைய நிலைக்குத் திரும்புவதை அவதானித்துள்ளனர். ஒருமுறை மாத்திரமல்ல, பல தடவைகளிலும் இவ்வாறு சேதமடையும் கருவிகளை நிவர்த்தி செய்யலாம்.

தற்போது பாவனையிலுள்ள மூலப் பொருளான பிளாஸ்ரிக்கில் காணப்படும் சங்கிலித் தொடர் போன்ற Polymers இப்புதிய பிளாஸ்ரிக் வகையிலும் காணப்பட்டாலும் இதன் சிறியளவிலான Molecular Beidges, கருவிகள் சேதமடையும் போதோ அல்லது கீறல்கள் உண்டாகும் போதோ, காயப்படும் தன்மைக்கேற்றவாறு இசைந்து கொடுத்து, தனது நெழிவு சுழிவுகளை மாற்றியமைக்கும் தன்மையுடையதாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் அவதானித்துள்ளனர். எனவே, பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சூரிய ஒளியினால் பாய்ச்சப்படும் சக்தி, பழையபடி இருந்த நிலைக்கு கருவிகளைத் திருத்துவதற்கு உதவுவதாக அறிக்கையிட்டுள்ளனர்.

கலிபோர்னிய மாநிலத்தில், சான்டியாகோ நகரில், அமெரிக்க இரசாயன ஆராய்ச்சிமையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தொடரில் Marek Urban அவர்களால் முன்வைக்கப்பட்ட அறிக்கை சமீபத்தில் ஆராயப்பட்டுள்ளது. இவர்களுடைய கண்டுபிடிப்பின் மூலப்பொருள் நிச்சயமாக அதிக விலை கொடுக்க வேண்டிய பொருள் அல்லவென்றும் உலகில் எந்தப்பகுதியிலும் பயன்படுத்தக் கூடியதாக இருக்குமென்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. புதியவரவை பொறுத்திருந்து பார்ப்போம்.


SPIRITUAL HEALING & ASTROLOGY

FREE — ABSOLUTELY FREE — FREE

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒருமுறைசந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி,வியாபாரம், திருமணம், குழந்தை பாக்கியம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம் மற்றும் விசா தொடர்பான விடயங்கள் பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோர்ட் வழக்குகள், கண்திருட்டி பரிகாரம் செய்வார். சாந்தி செய்து தரப்படும்.

உடன் சந்தியுங்கள்.....

People ask as to how he got such spiritual powers at such a young age. It is just one of God's miracles.

Please Take Prior Appointment

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.

GURU JI [Spiritual Healer & Astrologer]

07965 559 918 | Hounslow, Middlesex

All matters will be kept confidently.



லண்டன் மாநகர அவைத் தேர்தல்

London Assembly Elections 2012

Merton & Wandsworth Constituency



Vote & Elect on 3rd May 2012

Thamilini Kulendran

தமிழினி குலேந்திரன்

சுயமாகச் சிந்தித்து , சுயேட்சை வேட்பாளர் தமிழினி குலேந்திரன் அவர்களுக்கு 03/05/2012 ல் நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

Thamilini Kulendran | X

Published and Promoted by Miss Janani Sivaji of 112, Bickley Street, London SW17 9NE

Please send your opinion to vkulendran@yahoo.com

# மார்க்கிச லும்பன்களும் அடக்கு முறைக்கெதிராக லும்பன்களும்

*மௌலி*
*(ஒரு பேப்பருக்காக)*

இடது சாரிகள் என தம்மைக் கூறிக்கொள்பவர்கள் அதிகரித்துள்ள இந்தக் காலத்தில், பாமரனான எனது அறிதலுக்கு எட்டிய விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். இக்கட்டுரையில் தெரிவிக்கப் பட்டிருக்கும் கருத்துக்கள் Bruce Franklin மற்றும் பிரசித்தி பெற்ற மார்க்சிய சிந்தனையாளர் Frantz Fanon இனதும் எழுத்துக்களில் இருந்து பெறப்பட்டவையாகும்.

இதனை எழுதவேண்டும் என்ற ஆவலை என் மனதுக்குள் புகுத்தியவர் மார்க்சியவாதி எனக் கூறிக் கொள்ளும் காதர் மாஸ்டர் தொலைக் காட்சி ஒன்றில் கொடுத்த தவறான விளக்கமாகும். அதைவிட முக்கியமானது அண்மையில் தமிழ் லும்பன்கள் சிலர் கரோ பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் விளைவித்த குழப்பம்.

முதலில் லும்பன்கள் எனப்படுவோர் காதர் அவர்கள் சொன்னது போல் தெருச் சண்டியர்கள் அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தொழிலாளவர்க்கத்தில் இருந்தும் பல்வேறு காரணங்களால் புறந்தள்ளப்பட்ட ஒரு பிரிவினராகும். அவர்களை புரட்சிகர சக்திகள் 'சரிவர' கையாளத் தவறின் அவர்கள் அடக்குமுறையாளனின் ஆயுதங்களாகி விடுவர். ஏனெனில் எதிரி லும்பன்களின் பலவீனங்களை அறிந்து அவர்களை புரட்சிகர சக்திகளுக்கு எதிராக ஏவி விடுவான் . தனியாக தமக்கென வாழ்வு அமைக்க வலு இல்லாத லும்பன்களை எதிரி இலகுவில் தன் அடியாட்களாக மாற்றிவிடுவான் . எதிரியால் இலகுவில் வாங்கப்படக் கூடியவர்கள் லும்பன்கள். அண்மையில் தீபம் தொலைக்காட்சியில் தோன்றிய இரு 'மார்க்சியவாதிககள்', மர்க்சிசத்தை குழி தோண்டிப் புதைக்கும் இரு கருத்துக்களை முன் வைத்தார்கள் .

காதர் சொன்னார் 'விடுதலைப் புலிகளில் இருந்தவர்கள் லும்பன்கள், அதாவது ஊரிலை சொல்லுவமே தெறிச் சண்டியர்கள்' போன்றவர்கள் என்றார். வில்லுப் பாட்டுக்கு ஆமா போடுபவர் போல அந்த விடயத்துக்கு சிஞ்சா போட்ட சிவலிங்கம் 'ஆயுதப் போராட்டம் சமூக விரோதிகளுக்கு தான் பலன் தரும். உண்மையான அரசியலுக்கு அது தடை' என்றார்.

இங்கு முக்கியமான மூன்று கேள்விகள் உள்ளன:

1. விடுதலைப் புலிகள் தெருச் சண்டியர்களா?
2. மார்க்ஸ் சொன்ன லும்பன்கள் தெருச் சண்டியர்களா
3. விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் சமூக விரோதிகளுக்கு தான் பயன் தருமா?

இவர்கள் பேச்சைக் கவனித்தபோது இவர்களுக்கு லும்பன் என்பதன் அர்த்தமே தெரியாதவர்கள் என்பது புலப்பட்டது. ஆயுதப் போராட்டம் சமூக விரோதிகளுக்கு தான் பயன் தரும் என்பவருக்கு விடுதலை வரலாறு ஏதாவது தெரியுமா என்ற கேள்விகளுக்கு மேலாக நிகழ்ச்சியை நடாத்திய தீபம் தொலைக் காட்சியின் ஊடகவியலாளர், இவர்களை ஏன் இப்படிக் கட்டாக் காலித் தனமாக பேச விட்டார் போன்ற கேள்விகளில் இருந்து பிறந்ததே இந்தக் கட்டுரை.

மார்க்சின் சமூக அரசியல் சூழ்நிலை என்பது மன்னர் ஆட்சி, அடிமை வியாபார கால லும்பன்களுக்கும் தொழிற் புரட்சிக்கு பிந்திய நவீன முதலாளித்துவ 'ஜனநாயக' உலக லும்பன்களுக்கும் இடையில் நிறைய வேறுபாடு உண்டு என்பதை இருவரும் மறந்து புலி எதிர்ப்பு வெறியைக் கக்க தீபம் அதனை ஒளிபரப்பியது என்றே கூறவேண்டும்.

நவீன உலக லும்பன்கள் எனப்படுவோர் 'வேலை இழந்த' அல்லது 'வேலைக்கு அமர்த்த முடியாத' நவீன சமூகத்தின் எந்த அங்கத்துடனும் தம்மை இணைத்துக் கொள்ள முடியாத வழி தவறிய மனிதர்கள். சமூகச்சீர் கேடுகளால் உருவாக்கப்பட்ட அவலக் குழந்தைகள் இவர்கள். அவர்களது உருவாக்கத்திற்கு சமூகம்தான் பாத்திரவாளிகள் என்பதை உணராதவர்கள் சமூக விடுதலை பற்றி பேசும் தகுதி அற்றவர்கள். அடக்கப்படும் சமூகம் கலாச்சாரம் இழந்து, கல்வி அறிவு இழந்து மற்ற கட்டமைப்புக்கள் சீர்குலைந்து இருக்கும் பொழுது அங்கு உருவாகும் மனிதனின் குறைபாடுகளுக்கு அவனைக் குறை கூறி, புறந்தள்ளி, எள்ளி நகையாடி, பரிகசித்து கொள்வது மேட்டுக்குடி மனோபாவமே தவிர வேறெதுவும் இல்லை.

சரி கொஞ்சம் சீரியசான விடயத்துக்கு வருவோம். லும்பன் என்ற ஜேர்மனிய பதத்தை புரட்சியுடன் முதலில் பாவித்த மார்க்ஸ் அந்த வார்த்தை தொடர்பாக விரிவாக ஆராயாமலேயே இறந்துவிடுகின்றார் அவர் குறிப்பிட்டவற்றில் முக்கியமான பகுதியை தமிழில் பின்வருமாறு குறிக்கலாம் "சமூகத்தில் பல்வேறு வர்க்கங்களில் இருந்து அங்கும் இங்கும் என பல இடங்களில் இருந்து சிதறுண்ட ஒரு கூட்டமே இந்த லும்பன்களாகும்"

தமது நிலங்களையும் தொழிற் திறமையையும் இழந்த விவசாயிகளை லும்பன்கள் எனக் குறிப்பிடும் மாவோவின் வார்த்தைகளைப் பாருங்கள்.

"Apart from all these other classes> there is the fairly large lumpenproletariat> made up of peasants who have lost their land and handicraftsmen who cannot get work. They lead the most precarious existence of all . . . .One of China's difficult problems is how to handle these people> Brave fighters but apt to be destructive, they can become a revolutionary force if given proper guidance. ("Analysis of the Classes in Chinese Society").

The Wretched of the Earth என்ற ஆக்கத்தில் பிரபல மார்க்சிச சிந்தனையாளர் எழுத்தாளர் Frantz Fanon லும்பன்கள் பற்றி குறிப்பிட்டதை Bruce Franklin மேலும் விளக்கமாக எழுதி உள்ளதை இனி பார்ப்போம்.

பனான் லும்பன்கள் போராட்டத்தில் இணைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி லும்பன்கள் எனப்படுவோர் 'உடைமைகள்' அற்றவர்கள் என அடையாளம் காண்கிறார். அவர்களை புரட்சியில் இணைக்க மூன்று முக்கியமான காரணங்களை அவர் முன் வைக்கின்றார்.

அவர்கள் தான் போருக்கு உண்மையில் தயாரானவர்கள். (வெள்ளைக் கோட்டுச் சூட்டுக் மார்கிச லும்பன்கள் அல்ல. என்பதைத் தான் அவர் சொல்லுகின்றார்). கிராமிய புரட்சியாளர்கள் ஆட்சி அதிகார மையத்தை ஆடவைக்க அவர்களின் அவசியத்தை அவர் குறிப்பிடுகின்றார். மிக முக்கியமாக லும்பன்கள் புரட்சியாளர்களுடன் இணைக்கபடாவிட்டால் அவர்கள் புரட்சிக்கு எதிராக அடக்குமுறையாளன் பக்கம் இணைந்து விடுவார்கள் என்கிறார். வேறு வழிகளில் வாழத் தெரியாத லும்பன்கள் தான் இன்று சிறீலங்கா அரசின் கைகூலிகளாக வலம் வருவதை நாம் கண்கூடாகவே பார்க்கின்றோம். எமது அமைப்புக்கள் அனைத்தும் இதில் கவனம் செலுத்த வேண்டும். இந்த லும்பன்களுக்கு 'தேவையான' சமூகத்தில் தங்களையும்மதிக்கின்றார்கள் என்ற மாயை தேவைப்படுகின்றது. மார்க்கிச லும்பன்கள் முதல் அனைத்து லும்பன்களும் இப்படித்தான் எதிரியின் பக்கம் செயல்படுகின்றார்கள்.

காதர்-சிவலிங்கம் போன்றோரின் கூத்துக்களில் நேரத்தை வீணடிக்காது மனுவில் கையெழுத்து இடுங்கள்....
http://epetitions.direct.gov.uk/petitions/14586

## சபிக்கப்பட்ட சந்ததி

தன்னைக் கடந்து போன
தலைமுறைகளின் இளமைகள்
தொலைந்து போன கதைகளை
சுமந்தபடி
தொடர்ந்தும் இருக்கிறது அந்த
நகரம்...

என் பாட்டி தன் பருவ
காலங்களை என் பாட்டன் தன்
இளமைகளை என் தந்தை தன்
பால்யகாலங்களை
தொலைத்துக் கொண்டது அந்த
நகரத்தின் நிழலில்தான்..

நாங்கள் சிறுவர்களாக
இருந்தபோது
அது சிறுவயதுகளில் இருந்தது..
நாங்கள் இளைஞர்களாக
இருக்கிறபோது
அது இளமை ததும்ப
புன்னகை வடிக்கிறது..
நாங்கள் முதுமையை
அணைக்கும்போது
அது எங்கள் கண்களுக்கு
முதிர்ந்திருக்கும்..

யுத்த நாட்களில் தலைவிரி
கோலமாகவும்
பண்டிகை நாட்களில் மயக்கும்
கன்னியைப் போலவும்
அது தன்னை
அலங்கரித்துக்கொள்கிறது...
நகரத்துக்கு வரும் இளம்
பெண்களின்புன்னகைகளில்
அது தன்னை உயிர்ப்பாக
வைத்திருக்கிறது.....

யுத்தங்கள் தின்ற அந்த சரித்திர
நகரத்தில் இருந்து
தந்திரமாக தப்பிய செல்வந்தத்
தலைமுறை ஒன்று
நாகரீகங்களின்
தலைநகரங்களைநோக்கி
நகர்ந்து கொண்டது...
மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை
மாற்றிக்கொண்டது...
தங்கள் குழந்தைகளுக்காக
மொழியைக் கூட மறக்கக்
கற்றுக் கொண்டது...

விடுதலையைப் பற்றி
பாடியவாறு விடுமுறைகளை
அனுபவித்தது..
புரட்சியைப் போதித்துக்
கொண்டு
புகலிடங்களில் அடிமையாய்
வாழக் கற்றுகொண்டது..
ஏழைத்தலை முறையை
எரிமலையாய் இரு என்று
சொல்லி விட்டு சுதந்திர
நெருப்பில் சுகமாய்க்
குளிர்காய்ந்தது..

அந்த நகரம் தன்னை மாற்றிக்
கொண்டதைப் பார்த்து
மகிழ்ந்து கொண்டது அந்தத்
தலைமுறை...
யுத்தத்தின் பின்னால் அது தன்னைப்
புதுப்பித்த போது பூரித்தது....
விடுமுறைகளுக்கு வந்து
விருந்துண்டு சென்றது...
திருவிழாக்களுக்கு வந்து
தேரிழுத்துப் போனது
நாகரீக உடைகளுடன்
அந்த நகரத்து வீதிகளில்
அலைந்து திரிந்தது..
அந்நகரத்து ஏழைகளின் பெருமூச்சை
பணத்தின் பின்னால் இருந்து
பார்த்து ரசித்தது.....

எல்லாக் காலங்களுக்கும் ஏற்ப
எல்லா நாகரீகங்களுக்கும் ஏற்ப
எல்லா சந்தர்ப்பவாதங்களுக்கும் ஏற்ப
அந்த தலைமுறையும்
அந்த நகரமும்
தம்மை மாற்றி வாழக்
கற்றுக்கொண்டன...

ஆனால்..
அந்த நகரத்தின் ஏழைத் தலைமுறை
தன்னை மாற்றிக்கொள்ளும்
பொழுதெல்லாம்...
கலாச்சாரத்தின் பெயரால்
கல்லெறியப்படுகிறது ......
யுத்தத்தில் இருந்து மீண்டு
புன்னகைக்கும் போதெல்லாம்
துரோகி ஆக்கப்படுகிறது ......
வாழ்வதற்காக
ஆசைப்பட்டபோதெல்லாம்
வரலாற்றின் பெயரால் தூற்றப்படுகிறது...

அழுவதற்காக மட்டும் வாய்திறப்பதே
அவர்களுக்கு அழகெனச்
சொல்லப்படுகிறது...
மரணச் சடங்குகள் மட்டுமே
அவர்களின்
திருவிழாக்கள் ஆக்கப்படுகிறது...
சேலைகளைத் தாண்டி அந்த ஏழைப்
பெண்கள்
மேலே போவது எதிர்க்கப்படுகிறது......

எல்லாவித கனவுகளையும்
புதைத்துக்கொண்டு
எல்லாவித ஆசைகளையும்
அடக்கிக்கொண்டு
எல்லாவித விருப்புக்களையும்
எரித்துக்கொண்டு
தியாகிப் பட்டங்களை மட்டும்
அணிந்தபடி புலம்பெயர்ந்தவர்களின்
பாவங்களை கழுவும் பரம
பிதாக்களாகவும் சுய நலக்காரர்களின்
சிலுவைகளைச் சுமக்கும் இயேசு
நாதர்களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது
அந்த நகரத்தின் ஏழைத் தலைமுறை.....

-சபேஸ்

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா


# இலங்கைப் பயணம்: சுஸ்மாவைச் செல்லாக் காசாக்கிய ஜெயலலிதா



வேல் தர்மா
*(ஒரு பேப்பருக்காக)*

இந்த ஆண்டு இலங்கைப் பத்திரிகைகளில் இதுவரை வந்த நகைச்சுவைகளில் மிகச் சிறந்த நகைச்சுவை இந்திய இணை அமைச்சர் வி.நராயாணசுவாமி இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா பாதுகாப்பாக இருக்கும் என்று கூறியதே. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இந்தியப் பாரராளமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று சுஸ்மா சுவராஜ் தலைமையில் போருக்கு பிந்திய ஈழத்தமிழர்களின் மறுவாழ்வு குறித்து நேரில் ஆய்வு செய்வதற்காக என்று சொல்லிக் கொண்டு இலங்கை சென்றது. அதுபசில் ராஜபக்ச, மலையத் தொழிற்சங்கவாதிகள், மலையக அரசியல்வாதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடபடப் பலதரப்பினரைச் சந்தித்தனர். இக்குழுவின் பயணம் தொடர்பாகக் கேட்டபோதே அமைச்சர் வி நராயாண சுவாமி தனது திருவாய் மலர்ந்தருளினார். இக்குழுவினர் 15-ம் திகதியில் இருந்து 21-ம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பர்.

## இந்திய உளவுத் துறைக்குத் தெரியாதா?

இலங்கையில் இப்போதைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதை இலங்கைப் பத்திரிகைகளைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். இந்திய உளவுத் துறை இலங்கையில் செயற்படுகிறது. இலங்கை நிலைமையைப்பற்றி இந்திய உளவுத் துறைக்குத் தெரியாததை சுஸ்மிதா சுவராஜ் கண்டறியப் போகிறாரா? இதிலும் பார்க்க நடிகை சுஷ்மிதா சென்னை அனுப்பி இருக்கலாம். அவருக்கு இலங்கை ஆட்சியாளர்கள் காட்டு காட்டு என்று காட்டியிருப்பார்கள்.

## மீண்டும் பதின்மூன்று பல்லவி மீண்டும் நாமம்

இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தம் இந்த ஆண்டு இறுதியில் தனது இருபத்து ஐந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது. இலங்கை ஆட்சியாளர்களைச் சந்தித்த சுஸ்மா சுவராஜ் பதின்மூன்றாம் திருத்தத்தை அமூல் செய்யும் படி வலியுறுத்தினார். ஐக்கிய நாடுகள் சபையில் போர்த்துகீசியப் பிரதிநிதியின் உரையைத் தனது உரை என்று எண்ணி வாசித்துச் சாதனை புரிந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் பதின்மூன்றுக்கு மேல் சென்று தமிழர்களின் பிரச்சனையைத் தீர்ப்பேன் என்று கூறிவிட்டுப் பின்னர் அப்படி ஒன்றும் கூறவில்லை என்று மஹ்ந்த ஏமாற்றினார்.

**போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் பேசுவதற்கு போதுமான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இந்தப் பயணம் வெறும் கண் துடைப்பாகத் தான் அமையும் என்பது தெளிவாகியுள்ளது. சிறிலங்கா அதிபருடன் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கும்**

சுஸ்மா ஏற்கனவே நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்திருப்பதால் அவருக்கு காது குத்தப்படலாம். சுஸ்மா சுவராஜ் அவர்களும் ஒரு அப்பட்டமான பேரினவாதியே. அவர் இலங்கைப் பேரினவாதிகளுக்கு தொடர்ச்சியாகப் புகழாரம் சூட்டினார்.

## உண்மையான நோக்கம்

இலங்கை அரசு ஒரு தூதுக் குழுவை இலங்கை அனுப்பியதன் நோக்கத்தை கலாநிதி விக்கிரமபாகு 'ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரவளித்துள்ளமையால் ஆத்திரமடைந்துள்ள இலங்கை அரசாங்கத்தை ஆசுவாசப்படுத்தவே இக் குழு இங்கு வருகிறது. இதன் மூலம் மன்மோகன்சிங்கை மகிழ்ச்சிப்படுத்தி மஹ்ந்தவை ஆசுவாசப்படுத்தி வடக்கிலுள்ள தமிழ் மக்களின் கடல்வளம், கனிய வளம் மற்றும் காணிகளை கொள்ளையடிப்பதே இக்குழுவின் திட்டம்' என குற்றம் சாட்டினார். ஆனால் தூதுக் குழுவின் முக்கிய நோக்கம் வேறு. இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை சில முக்கிய காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது:

1. இந்தியாவின் அதிகார மையமான தென் மண்டலத்தில் இருப்பவர்களின் சாதிய நலன்கள்.
2. இந்தியாவை ஆள்பவர்களின் குடும்ப நலன்கள்
3. இலங்கையில் வர்த்தகம் செய்யும் இந்தியப் பெரும் முதலாளிகளின் நலன்கள்.

இந்த மூன்றையும் வைத்துக் கொண்டு இலங்கை தொடர்பாக இந்தியா தனது செயற்திட்டங்களை வகுத்துக் கொள்கிறது. இதற்கு சிங்கள மக்களுடன் ஒரு சிறந்த நட்பை இந்தியா பேண வேண்டியது அவசியமாகிறது. அப்படி வகுத்த கொள்கைக்ளும் செயற்திட்டங்களும் ஆளும் காங்கிரசுக் கட்சிக்கு தமிழ்நாட்டில் 2011இல் ஒரு பெரும் தேர்தல் தோல்வியைக் கொடுத்தது. இந்த தேர்தல் காரணங்களுக்காக இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி அமைக்கத் தயாரில்லை. இலங்கையில் சீனா அதிக ஆதிக்கம் செலுத்துவதைப்பற்றி இந்திய ஆட்சியாளர்களோ கொள்கை வகுப்பாளர்களோ அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் இலங்கையில் பெருகிவரும் சீன ஆதிக்கம் மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் ஐக்கிய அமெரிக்காவையும் அதிகம் கவலையடைய வைத்தது. அதனால் இலங்கையின் மனித உரிமை மீறல்களை அவர்கள் கையில் எடுத்துக் கொண்டனர். வட இந்தியாவில் இடைத் தேர்தல்களில் ஏற்பட்ட தோல்வியால் அதிகரித்த தமிழ்நாட்டு வாக்காளர்களின் தேவையும் அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நெருக்குதல்களும் இந்தியாவை இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வைத்தது. இதனால் இலங்கை அதிருப்தி அடைந்தது. இதனால் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் சகல அரசியல் கட்சிகளும் ஒருமித்து இலங்கை தொடர்பான இந்தியாவின் தற்போதைய கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் தேர்தல் காரணங்களுக்காக கொள்கை மாற்றம் தேவைப்படாது என்று எண்ணினர்.

**இலங்கை நிலைமையைப் பற்றி இந்திய உளவுத் துறைக்குத் தெரியாததை சுஸ்மிதா சுவராஜ் கண்டறியப் போகிறாரா? இதிலும் பார்க்க நடிகை சுஷ்தா சென்னை அனுப்பி இருக்கலாம். அவருக்கு இலங்கை ஆட்சியாளர்கள் காட்டு காட்டு என்று காட்டியிருப்பார்கள்.**

அதனால் இந்தியாவின் சகல கட்சிகளைச் சேர்ந்தவரகளை இலங்கைக்கு அனுப்பி அவர்களை இலங்கை கவனிக்க வேண்டிய மாதிரிக் கவனித்தால் அவர்கள் இலங்கை சார்பான இந்தியாவின் தற்போதைய கொள்கைகளை ஏற்றுக் கொள்வர் என நினைத்தது. அதில் முதல் இடியைப் போட்டவர் ஜெயலலிதா.

## ஜெயாவின் அதிரடிக் காய் நகர்த்தல்

சட்டசபைத் தேர்தலில் தமிழின உணர்வாளர்களின் ஆதரவுடன் பெரும் வெற்றியீட்டிய ஜெயலலிதாவின் அடுத்த கனவு 2014இல் நடகக இருக்கும் பாராளமன்றத் தேர்தலில் நாற்பது தொகுதிகளிலும் வெற்றியீட்டி தான் அடுத்த இந்தியப் பிரதமராக வேண்டும் என்பதே. ஏற்கனவே அவரது சோதிடர்கள் அவருக்கு இந்தியப் பிரதமராகும் யோகம் உண்டு என்று சொல்லிவிட்டனர். தான் ஒரு ஈழத் தமிழர்களின் தீவிர ஆதரவாளர் என்று தன்னைக் காட்டிக் கொள்வதில் ஜெயலலிதா இப்போது அதிக கவனத்துடன் செயற்படுகிறார். இந்தியப் பாராளமன்றக் குழு இலங்கை செல்லும் என்றவுடன் ஜெயலலிதா குழுவின் நிகழ்ச்சி நிரலைப் பார்த்தேன் அதில் விருந்துகளும், அரசின் கொண்டாட்ட நிகழ்ச்சிகளுமே அதிகம் இடம் பெற்றுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் பேசுவதற்கு போதுமான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இந்தப் பயணம் வெறும் கண் துடைப்பாகத் தான் அமையும் என்பது தெளிவாகியுள்ளது. சிறிலங்கா அதிபருடன் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கும்

# பரதேசியின்.... பதில்கள்....!

கேள்வி : பரதேசியாரே என் காதலை நான் காதலிப்பவளிடம் சொல்ல வேண்டும் ஆனால் எல்லோரையும் போல கடிதம்..... பூ கொடுக்கிறது இப்படியல்லாமல் வித்தியாசமாக சொல்ல ஆசைப் படுகின்றேன் கெல்ப் பிளீஸ்...

*சேகரன்-மிச்சம்*

பரதேசி : நல்லது உங்கள் காதலியிடம் போய் உனக்கு கால் வலிக்கின்றதா எனக்கேழுங்கள் அவளும் ஏன் இப்படி கேக்கிறாய் என தலையை சொறிந்தபடி கேட்டபாள். கொஞ்சநாளாக என் கனவில் நீதான் ஓடிக் கொண்டிருக்கிறாய் என சொல்லுங்கள். அவள் சிரித்தாள் என்றால் ஓகே. ஆனால் நீ முதல்லை ஓடிப்போடா என்று குனித்தால் தயவு செய்து அந்த இடத்தைவிட்டு எஸ்கேப் ஆகிவிடவும்.

☠ ☠ ☠

கேள்வி: என்மனைவி நான் தன்னை எப்பொழுதுமே புகழ்ந்து பேசியல்லையென எப்ப பாத்தாலும் புறுபுறுத்தபடியே இருக்கிறாள். மனிசியை எப்படி புகழலாம் எண்டு ஏதாவது யோசினை சொல்லுங்க சாமி...?

*ராமசேகரம் - ஈஸ்றகாம்*

பரதேசி : இதுக்கு போய் சாமி ஆமி எண்டு பெரிய வசனம் எல்லாம் வேண்டாம். உங்கள் மனைவியை மேலும் கீழும் பாருங்கள் பின்னர் என்ன ஆச்சரியம் தேவதைகளின் கால்கள் பூமியில் நடக்குமா ?? அது சொர்க்கத்தில்தானே நடக்கும் என்று சொல்லிப்பாருங்கள். பிறகென்ன நீங்கள் எதிர் பார்த்தது நடக்கும். ஆனால் டேய்.... பேயின் கால்கள் கூடத்தான் நிலத்தில் நடக்காது என்று அவர் கத்தினால் நீங்கள் எதிர் பார்க்காததும் நடக்கும்.

☠ ☠ ☠

கேள்வி: எனக்கு பெரிய வண்டி(வயிறு) உள்ளது பரதேசியாரே எல்லாரும் சோத்துவண்டி எண்டு பகிடிபண்ணுகிறார்கள். வாக்கிங் போகிறேன் ஆனாலும் குறையவில்லை என்ன செய்யலாம் அவமானமாக இருக்கிறது.

*ஜயதர்சன்-ஹறோ*

பரதேசி : அட கவலைப்படாதே நண்பா எனக்கும் அதே பிரச்சனைதான். அதன் தீமையை விட நன்மையே அதிகம். தடக்கி விழுந்தால் மூக்கு உடையாமல் காப்பாத்துகிறது. பொது இடங்களில்உங்களை தொழிலதிபராக(ஏசியன் கடை வைத்திருப்பவர்) என அடையாளம் காட்டவும். அதே நேரம் நீங்கள் தீவிர சிந்தனையாளர் எனவும் காட்ட உதவும் காரணம் நீங்கள் யோசிக்கும் போதெல்லாம் வண்டியை தடவலாம்.....

☠ ☠ ☠

பரதேசியின் கருத்துக்களுக்கு facebook.com/orupaper பின்தொடர @orupaper

# இலங்கை தொடர்பான...

அதற்குப் பலிக்கடாவாக ஈழத்தமிழினத்தையும் அதன் தாயகத்தையும் பலி கொடுக்கஅது தயாராயிருக்கிறது. தமிழகம் மட்டும் உரிய காலத்தில் விழித்தெழுந்து சரியான நடவடிக்கையில் இறங்காவிட்டால் பாக்குநீரிணைக்குத் தெற்கே தமிழினத்தின் சுவட்டைக்கூட எதிர்காலத்தில் காணமுடியாமல் போகலாம். தக்க தருணத்தில் ஜெயலலிதா போன்ற பெருந்தலைவர்கள் மத்திய அரசுடன்மோதி இலங்கை தொடர்பான அதன் வெளியுறவுக் கொள்கைகளை மாற்றியமைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கினாலன்றி இந்திய ராஜதந்திரிகளின் இலங்கை தொடர்பான இன்றைய அணுகுமுறைகள் தொடரவே செய்யும். விளைவு, இலங்கையையும் இழந்து, தமிழகத்திலும் சீன ஆதிக்கம் கொண்ட புரட்சிகர சக்திகள் தலையெடுப்பதில் முடிவடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஈழத்தமிழர்களை இந்தியா ஆதரிப்பது இந்தியதேசியத்தில் பிரிவினையைக் கொண்டுவந்துவிடலாமென்னும் கருதுகோள் இன்று நிரூபிக்கப்பட முடியாததாகி, ஈழத் தமிழர்களை இந்தியா கைவிடுமானால் இந்தியதேசியம் செல்லாக்காசாகி தமிழகத்தில் பிரிவினைக் கோசம் வலுப்பெறவும் அதனைச்சாதகமாக்கிச் சீனாபோன்ற நாடுகள் பிரிவினைக்கு ஊக்கமளிக்கவுமே வழியேற்படும் என்னும் புதிய கருதுகோளே சரியானதாகவும் ஆகிவிடக்கூடும்.

இந்தியாவில் மாவோசார்பு நக்சலைட் புரட்சிவாதிகளின் செல்வாக்கு அங்குள்ள பழங்குடியினர் மத்தியில் வளர்ந்து வருகிறது. இந்திய அரசின் பழங்குடியினர் மீதான அடக்குமுறை புரட்சிவாதத்திற்கு மேலும் எண்ணெயூற்றிப் பற்றவைக்கிறது. தமிழகத்திலும் பிராமண ஆதிக்கத்திற்கெதிரான மக்களின் குமுறல் நீறுபூத்த நெருப்பாக அடங்கிப்போய் இருக்கிறது. பொருண்மிய வளர்ச்சிகண்ட மாநிலமாதலால் புரட்சிகரவுணர்வு பெரிதாக உருவாகவில்லையென்றாலும், தமிழன் என்னும் அடிப்படையில் புறக்கணிக்கப்படும்போது விளைவுகள் ஆபத்தானவையாக மாறலாம். தமிழகத்திலும் பிரிவினைக் கோஷம் வலுப்பெறலாம்.

மொத்தத்தில் கிணறு வெட்டப் பூதம் வெளிக்கிட்ட கதைபோல இந்திய ராஜதந்திரம் எதையோ சாதிக்கப்போய், சீனப்பூதத்தைத் தனது நாட்டுக்குள்ளேயே வரவழைத்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த வேண்டத்தகாத நிகழ்வுகள் ஏற்படாதிருக்க வேண்டுமானால் ஈழத் தமிழர் தொடர்பான தெளிவானவோர் கொள்கையை இந்திய நடுவண் அரசு தமிழக அரசின் ஒத்துழைப்புடன் உருவாக்கி அதன் அடிப்படையில் இலங்கையில் இனப்பிரச்சனையைத் தீர்க்கும் நடவடிக்கையில் இறங்குவதும். அதற்காக இலங்கையரசை வற்புறுத்துவதுமே சரியான அணுகுமுறைகளாகும்.

அதைவிட்டுவிட்டு, இரண்டு தரம் ஜனாதிபதியாகி அரசியலிலிருந்தே ஒதுங்கிப்போன சந்திரிகா அம்மையார், செல்வாக்கிழந்து நிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் போன்றோரை அழைத்துப் பேச்சு வார்த்தைகளை நடத்திக்கொண்டிருப்பதும். சர்வகட்சிக் குழுவை விருந்துக்கு அனுப்புவதும் இந்தியாவின் ராஜதந்திர வங்குரோத்துத்தனத்தையே காட்டுகின்றது.

# முருகா.....

## This is too much!!

சிட்னி முருகன் கோயில் கொடியேற்றம், கொடியிறக்கம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என இனிதே நடந்தேறி முடிவடைந்தது . ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெறும் இத் திருவிழா இம்முறையும் மிகவும்நன்றாகவே நடைபெற்றது. நானும் இடைக்கிடையே சென்றுமுருகனின் அருள் என்பக்கமும் கிடைக்க ஆவனசெய்தேன். பென்ஸ் கார் வாங்குவதற்கு என் பெருமான் முருகனின் கடைக்கண் பார்வை என் பக்கம் திரும்ப வேண்டும் என்பதற்காக இவ்வருட திருவிழாவில் கூடிய கவனம் செலுத்தினேன்.

திருவிழா தொடங்க முதல், தாயையும் மகளையும் தற்செயலாக சந்திக்க வேண்டி ஏற்பட்டது. மகள் என்னொடு சினேக பூர்வமாக பழகுவாள். எங்கே கண்டாலும் அங்கிள் எப்படியிருக்கிறீங்கள் என்று சுகம் விசாரித்து விட்டுத்தான் செல்வாள் இங்கு பிறந்து வாழ்ந்து வருபவள். தாயார் ஒரு சின்ன சிரிப்புமட்டும்தான். கதைக்க மாட்டார், என்னைவிட ஒரு இரு வயது குறைவாக இருக்கும் எனநினைக்கிறேன்.

'ஹாய் அங்கிள் எப்படி இருக்கிறீங்கள் ?'

'நல்லாயிருக்கிறேன் என்ன இந்த பக்கம்?'

'கோயில் கொடியேறுது தானே அதற்கு பலகாரம் சுட வேணும் என்று அம்மா கூட்டிக் கொண்டு வந்தவ, பூங்காவனம் சிட்னி யூத்ஸ் தானே செய்யிறவையள், பூங்காவனத்திற்கு கட்டாயம் வாங்கோ'

'ஓம் ஒமோம் கட்டாயம் வாரன்' என்றுபோட்டு நான் என்ட வேலைகளை கவனிக்க தொடங்கி விட்டேன். பூங்காவனத்திருவிழா சிட்னி இளைஞர்களால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுகின்றது. சிட்னி முருகனுக்கு கொடியேறினால் சில இளசுகளுக்கும், கிழசுகளுக்கும் கொடியேறினமாதிரி உற்சாகத்துடன் நிற்பார்கள். இந்த இளசுகளும் கிழசுகளுடன் சேர்ந்து பலகாரம் சுட்டு பொலித்தீன் பைகளிலிட்டு அதை அழகுப் பைகளில் போட்டு பத்திரப்படுத்தி வைப்பார்கள். சாதரண திருமண வைபவங்களில் கொடுப்பதற்கு எப்படி அழகு படுத்துவார்களோ அது போல அழகு படுத்தப்பட்டிருக்கும். திருக்கல்யாணம் முடிந்தவுடன் பக்தர்களுக்கு அதை கொடுப்பார்கள்.

சிட்னியில் உள்ள தமிழ் வியாபார ஸ்தாபனங்களுக்கும் முருகனின் கொடியேற்றத்துடன் கொஞ்சம்வருமானமதிகமாகும். அத்துடன்சிட்னி வாழ் முருகன் அடியார்கள் ஆண்கள் ,பெண்கள் எல்லோரும் பக்தி பரவசத்தில் இருப்பார்கள். அநேக வீடுகளில் மரக்கறிதான் அந்த 10,12 நாட்களும், அதிகமாக fresh காய்கறி தான் சமைப்பார்கள், frozen மரக்கறிகள் வாங்கமாட்டார்கள்.

அரச ஸ்தாபனங்களில் பணி புரிபவர்கள் 10 நாட்கள் லீவு போடுவார்கள், லீவுகள் எடுக்க முடியாதவர்கள் கொடியேற்றம், தேர், தீர்த்தம் போன்ற விசேட தினத்தின் பொழுது லீவு எடுப்பார்கள், லீவு எடுப்பது வேலைத்தளங்களில் கடினமாக இருந்தால் இந்த நாட்களில் முருக அடிகாளர் சிக் (sick) லீவில் நின்றாவது முருகனின் அருளை பெறுவார்கள். பூங்காவனத்திருவிழா இரவில் நடப்பதால் லீவு ஒரு பிரச்சனையாக இருப்பதில்லை... கொடியேற்றுவதற்கு வழமையாக குருக்களை தாயகத்திலிருந்து அழைப்பார்கள். இந்த முறை எங்களுடைய லோக்கல் ஐயர் கொடியெற்றம் செய்தார். ஏன் இந்த முறை இப்படி என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது வந்தார் எங்கன்ட சகலகலா வல்ல கந்தர்.

'என்ன அண்ண இந்த முறை ஊரிலிருந்து குருக்கள் வரவில்லையோ'

அக்கம் பக்கம் திரும்பி பார்த்து போட்டு சொன்னார் 'உங்க பெரிய புடுங்கு பாடு நடக்குது. அவுஸ் அரசு இனிமேல் குருக்கள்மாருக்கு விசா கொடுக்கமாட்டங்கள் என்று சொல்லி போட்டாங்கள், கோவில் திருவிழாவுக்கு என வந்தவையள் ஒருத்தரும் திரும்பிபோரதில்லையாம், அதுதான் லோக்கல் குருக்கள் கொடியேற்றினவர். இந்த முறையும் ஒருத்தர் வந்தார் அவரை கேட்டவையளாம் சிட்னியில் இருக்கும் குருக்கள்மாருக்கு பயிற்சி அளிக்க, ஆனால் வந்த குருக்கள் எலாது என்று போட்டு திரும்பி போயிட்டாராம்' பெரு மூச்சவிட்டுப் போட்டு 'உன்னிடம் ஒன்றையும் சொல்லகூடாது நீ போய் இணையங்களில் கிறுக்கி போடுவா' என்றபடியே மெல்ல நான் இருந்த இடத்தை விட்டு அகன்றார்.



ஒவ்வோரு திருவிழாவும் ஒரு குறிப்பிட்ட சப்பெர்ப்புக்கு (suburb) வழங்கப்பட்டிருக்கும் . அந்த சப்பெரப்பை விட நாங்கள் சிறப்பாக செய்யவேணும் என்ற எண்ணம் ,போட்டி எல்லா சப்பெர்ப்காரருக்கும் இருந்தது. அதை சிலர் செயலில் செய்தும் காட்டியிருந்தார்கள் . ஒரு நாள் திருவிழாவில் பல பெண்கள் கிட்டதட்ட ஒரே நிறத்தில் சேலை அணிந்து வந்திருந்தார்கள். பிறகுதான் அறிந்தேன் அன்றைய உபயகாரர் சொல்லி வைத்து நீல நிறத்தில் சேலை அணிந்து வந்தவர்களாம் தங்களுடைய திருவிழா ஸ்பேசலிட்டியை காட்டுவதற்கு.

மதியம் சாப்பிடுவதற்கு சென்றிருந்தேன் வேஜிட்டேரியன் சிக்கன், பன்னீர், கஜூ போன்ற விலையுயர்ந்த பொருட்களில் சமையல் செய்து அசத்தியிருந்தார்கள் ஊரிலும் இந்த மனப்பாங்கு இருந்தது. அந்த குழுவினர் எத்தனை கூட்ட மேளம் பிடிக்கிறாங்கள் அதைவிட நாங்கள் அதிகம் பிடிக்கவேண்டும், அவர்கள் எத்தனை சப்பறம் கட்டுறாங்கள் அதைவிட அதிகம் கட்ட வேண்டும். இப்படி பல போட்டி மனப்பான்மை திருவிழா உபயகாரிடையே இருந்தது. புலத்தில் இந்த போட்டி மனப்பான்மையை கண்டவுடன், சந்தனம் மின்சினால் தடவுங்கோடா.... என்ற பழ மொழிதான் எனக்கு ஞாபகத்தில் வந்தது.

தேர்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது சில பக்தர்கள். தேங்காய் உடைத்தார், வேறு சிலர் காவடி எடுத்தார்கள், இன்னும் சில பக்தர்கள் அடிகளித்தார்கள், பிரதட்டடையும் செய்தார்கள். நீயா நானா என்று போட்டி போட்டு ஆண்கள் ஒரு பக்கமாகவும் பெண்கள் ஒரு பக்கமாகவும் தேர் வடத்தை பிடித்து அரோகரா சொல்லி இழுத்துகொண்டிருந்தார்கள். ஊரில் முருகனுக்கு தேர் திருவிழாவில் என்ன எல்லாம் செய்து முருக அடியார்கள் முருகனை மகிழ்வித்தார்களோ அதைவிட அதிகமாகவே சிட்னியில் முருக அடியார்கள் செய்து முருகனை மகிழ்வித்தார்கள். திடீர் என அறிவித்தார்கள் உங்கள் உடமைகளை கவனமாக வைத்திருங்கள் திருடர்கள் ஜாக்கிரதை........

விலையுயர்ந்த காரில், விலையுயர் பட்டுச் சேலை அணிந்து, லொக்கரில் இருந்த நகைகளை போட்டு கொண்டு தரிசிக்க வந்தால் நீ திருடர்களுக்கு அருள் கொடுகிண்றாயே.

சிட்னி முருகனுக்கு 'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற அறிவிப்பு காதில் அதிக வருடங்களாக கேட்காத படியால் இந்த முறை திருட்டு பக்கதர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து ஊக்கப்படுத்தி போட்டார்... முருகா உன் விளையாட்டுக்கு ஒரு எல்லையே இல்லையா? என்னதான் இருந்தாலும் this is too much lord murugaaaa...

வீதியில் கடலை விற்பவர்களும்., திருடர்களும்தான் இல்லாத குறையாக இருந்தது. திருடர்கள் வந்துவிட்டார்கள் கடலைக்காரிதான் இல்லை அடுத்த வருடம் அதுவும் நடக்கலாம். திருடர்கள் யார்? மக்கள் பலவித கருத்துக்களை வைக்கின்றனர்....

—புத்தன் - யாழில்

## ஊருக்கு நான் ஐந்து அறிவு மனிதன்.. ஆனா உனக்கோ நான் இன்னும் உன்பிள்ளை......



ஆசையாய்ப் பெயரிட்டு
மெல்ல நடை பழக வைத்து
சிந்திய சோற்றுப்
பருக்கைகளை
சிரித்தவாறு சாப்பிட்டு....

பல முறை
தூக்கத்தைக்
கெடுத்துக் கொண்டு
நெஞ்சின் மேல்
தாலாட்டியதவும்.....

பள்ளியில் சேர்ப்பதற்கு
பல மணிநேரம்
வரிசையில் நின்றதுவும்.....

மானத்தை விற்றுக் கடன் வாங்கி
இரு சக்கர வாகனம் வாங்கிக்
கொடுத்ததுவும்
தினமும் துடைத்து அதற்கு பெட்ரோல்
வாங்கக் காசு கொடுத்ததுவும்

இருந்த நிலத்தை விற்றுக்
கல்லூரிக்கு அனுப்பியதுவும்

கண் பார்வை மங்கிய பின்னும்
அதிகாலை எழுந்து பால் வாங்கி
வந்ததுவும்

இல்லாத பரிட்சைக்குப்
பணம் கொடுத்ததுவும்

வேலைக்கு சேர்வதற்காக
உயிராய்க் கலந்திட்ட
வீட்டை விற்றுப் பணம் கொடுத்ததும்

தலைக்கு மேல் கடன் வாங்கி
கல்யாணம் செய்து வைத்ததுவும்

என
எதுவும்.,
எதுவும்..
எதுவுமே...
கொஞ்சம் கூட நினைவில் இல்லை
எனக்கு....
நான் மாத்திரம்..,
நான் மாத்திரமே
நினைவில் நின்றது
எனக்கு....!!!

உன்னை
முதியோர் இல்லத்தில்
ஒரு அகதியாய்
விட்டு விட்டு
வந்த பின்னும்
ஊருக்கு நான் ஐந்து அறிவு மனிதன்..
ஆனா
உனக்கோ நான் இன்னும் உன்பிள்ளை..

-றெஜி யேசு

அருள்மிகு ஸ்ரீமேருபுரம் மஹாபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
வோல்தம்ஸ்ரோ, லண்டன்



மஹோற்சவ விஞ்ஞாபனம்

- 21-04-2012 மாலை 6.30 மணி சப்பறம்
- 22-04-2012 காலை 10.00 மணி தேர்
- 23-04-2012 காலை 10.00 மணி தீர்த்தம்
- 24-04-2012 மாலை 6.30 மணி பூங்காவனம்
- 27-04-2012 மாலை 5.00 மணி வைரவமடை

271 Forest Road,
Walthamstow, London;
E17 6HD.

Tel/Fax: 0208 531 0872

# நெருக்கடிக்குள்...

தமிழ்த் தேசியம் பற்றி எம்மிடையே நிலவி வரும் விமர்சனமற்ற அறிவியல் வரட்டுத்தனமே அன்றி வேறில்லை. வெளியிலிருந்து இன அழிப்பை நோக்கிய ஒரு இராணுவ அச்சுறுத்தல் தோன்றும் போது அக முரண்பாடுகள் தாமாக மறைந்து போய் சாதி, மதம், பிராந்தியம், வர்க்கம் என்பவற்றை மேவிய ஒரு தமிழ் தேசிய ஒருமைப்பாடு இயல்பாகவும் தானாகவும் தோன்றிவிடும் என்ற கருத்தையும் நாம் இங்கு நோக்க வேண்டும்.

தமிழ்த் தேசியமானது தமிழ்பேசும் சமூகத்தின் அக முரண்பாடுகளைத் தீர்த்து அதை சரியான அரசியல் பாதையில் அணிதிரட்டிடக்கூடிய ஒரு கருத்தியலாக வளர்த்தெடுக்கப்படாமல் அதன் பாட்டிலேயே விடப்படுமானால் சந்தர்ப்பவாதிகளின் நுனி நாவில் புரட்டப்படும் ஒரு வெற்றுச்சொற்றொடராக அது இருக்குமாயின் எதிர்காலத்தில் மீண்டும் நேரடியாகவோ மறை முகமாகவோ ஏற்படப் போகும் இன அழிப்புப் போர் அச்சுறுத்தல் கூட எமது சமூகத்தை ஒன்று திரட்டுவதற்கு போதாததாகிவிடும்.

1983 இலே நாம் மாபெரும் இன அழிப்பு முயற்சி ஒன்றை எதிர்கொண்டோம். சிங்கள மேலாண்மையாளரின் படைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை அழிப்பதற்கு முனைப்புடன் நின்ற காலமது. நானும் எனது நண்பர் ஒருவரும் புத்தூர் பகுதியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணி பற்றைக் காடும் கட்டாந்தரையுமாகக் கிடந்த ஒரு பக்கமாக ஒளித்து ஓடினோம். அங்கு ஒரு குக்கிராமம் பொழுது சற்றுச் சாய்ந்ததும் ஊருக்குள் சென்றோம். தண்ணீர் தாகம் எமக்கு. ஆனால் அங்கிருந்தவர்களுக்கு நாம் அவர்களிடமிருந்து நீர் அருந்துவோமா என்று சந்தேகம். வெளியூரவராகிய எமக்கு இது அதிசயமாகவிருந்தது.

எனவே அவ்வூர் மக்களைப் பற்றி அறியும் ஆவலிலும் அரசியல் கூட்டம் ஒன்றை நடத்தும் நோக்கிலும் நாம் அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டோம். பனி நிலவில் கோப்பாய் வெளியிலிருந்து வீசிய காற்றின் சரசரப்பில் அம்மக்கள் கூறிய கதை தேச விடுதலைக் கனவுகளையே நெஞ்சில் நிறைத்திருந்த எம்மைத் திடுக்கிட வைத்தது. அவர்கள் காணியற்ற விவசாயக் கூலிகள். தமிழ்ச் சமூகத்தின் பெருவிழுமியமெனப் போற்றப்படும் கல்வி அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. இதை மீறி அவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகள் எரிக்கப்பட்டன. இந்த வேளையில் தென்னிலங்கையிலிருந்து அங்கு ஒரு சிங்களப் பௌத்த பிக்கு சென்றார். க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புகள் கொண்ட கல்விக் கூடத்தை அவர் அங்கு நிறுவினார். பிக்குவின் செல்வாக்கிற்குப் பயந்த உயர் குடியினர் அதில் கைவைக்கவில்லை. அவ்வூர் மக்கள் பௌத்தத்தைத் தழுவினர். சிங்களம் கற்றனர். அவர்களுக்குத் தமிழ் தேசியம் பற்றித் தெரியாது. நாம் திகைத்தோம்.

எமது தேச விடுதலைப் போராட்டம் என்பது எங்ஙனம் ஒரு சமூக சாதி ஒடுக்கு முறைகளை உடைத்தெறியும் குறிக்கோளையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பன போன்ற பல விடயங்களையும் விளங்கப்படுத்தி அவர்களைப்போன்று இழப்பதற்கு ஒன்றுமில்லாத உழைக்கும் மக்களே ஒரு விடுதலைப்போரின் இறுதி வெற்றிவரை சமரசத்திற்கு இடங்கொடாது போராடுவர் என்பதையும் நாம் எடுத்துரைத்து அம்மக்களோடு அளவளாவி முடித்த போது சாமக்கோழி கூவிவிட்டது.

இப்படியாக யாழ்ப்பாணத்தில் பல ஊர்கள் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தோடும் அதன் கருத்தியலோடும். படித்த தமிழ் நடுத்தரவர்க்கங்களிடையே அது அன்று ஏற்படுத்திய உணர்வலைகளோடும் எம் தொடர்புற்றிருந்தன. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்று. வன்னியின் சில பகுதிகளிலும் மட்டக்களப்பில் இரு இடங்களிலும் தமிழ் தேசியவாதிகளுக்கு அன்று தெரிந்திருக்க வில்லை. 1983இல் சிங்கள மேலாண்மையாளர் எம்மண் மீது கட்டவிழ்த்து விட்ட இன அழிப்புப் போர் எம்மிடையே வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களை இயல்பாகத் தமிழ்த்தேசியத்தின் பால் அணி திரட்டிடவில்லை. மாறாக, தமிழ்த் தேசியம் என்பது அன்று கடுமையான மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. அதை ஒரு குறுகிய படித்த யாழ்.நடுத்தர வர்க்கக்கருத்தியல் என்ற நிலையிலிருந்து மாற்றுவதற்கும், அதை அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கான கோட்பாடாக்குவதற்கும், அவர்களுடைய சமூகச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையிலும் பலர் தொடர் முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் விளைவாகவே எமது தாயகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்த மக்களையெல்லாம் சாதி, மத, பிராந்திய, வர்க்க வேறுபாடுகளுக்கப்பால் சிங்கள மேலாண்மையின் ஒடுக்குமுறைக்கெதிராக அணிதிரட்ட கூடியதாயிற்று. ஒரு சந்தர்ப்பவாதத் தலைமையின் கையிலிருந்து பறித்தெடுத்து அதன் வீச்செல்லைக்கு, அது காலவரை உட்படாதிருந்த மக்களிடமும் அதைக் கொடுக்க, எடுக்கப்பட்ட கருத்தியல் முயற்சிகள் இல்லாதிருந்திருந்தால் தமிழ்த் தேசியம் இன்று வறண்டு சுருங்கியிருக்கும்.

இந்திய மத்திய அரசின் பார்வை எமது போராட்டத்தின் பக்கம் திரும்புவதற்கு முன்னர் இந்த நக்சலைட்டுகளும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சமரசத் தமிழ்தேசிய வெற்றியை நிராகரித்த பெருஞ்சித்திரனார் போன்றவர்களுமே எம்மை தமிழகத்தில் ஆதரித்தவர்கள் என்பதை நாம் நோக்க வேண்டும். திராவிட முன்னேற்ற கழகத்தின் தமிழ்த் தேசியத்திற்கு அடித்தளமாக இருந்த தமிழக நடுத்தர வர்க்கத்திற்கு இன்று தமிழ் மொழியும், பண்பாடும் தனது சமூக எழுச்சிக்கு தேவையற்றவை யாகிவிட்டன. அது இன்று ஆங்கில மோகத்தில் மிகக் கேவலமாக உழல்கிறது.

அதன் உச்ச வெளிப்பாடாக சன்.டி.வி தமிழ் மொழியையும் தமிழ் அடையாளத்தையும் படுகொலை செய்து வருகிறது. இங்கு பழமைவாதிகள் போல 'ஐயகோ நமது மொழியும் கலாசாரமும் அழிகின்றன' எனப் புலம்புவதில் பயனில்லை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்' என்பது நன்னூலாரின் கருத்து. ஆனால் தமிழ்த் தேசியம் என்பது இன்று அரசியல் கலாசார சமரச நிலைக்கு வந்துவிட்ட ஒரு நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தின் கையிற் சிக்குண்டு தனது போர்க்குணத்தையும் சாதி, மத, பிராந்திய பொருளாதார பேதங்களை மேவிய கருத்தியல் வீச்சையும் இழந்து பரிதவிப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

உரிமைகளைப் பெறுவதை விட தாம் தற்போது அனுபவிக்கின்ற சலுகைகளைப் பாதுகாப்பதில் தீவிர அக்கறையுள்ள ஒரு வர்க்கத்தின் கையில்தமிழ் தேசியக் கருத்தியல் இன்று சிக்கிக் கொண்டிருக்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் கருணா என்ற மனிதன். சிங்கள மேலாண்மை மற்றும் மேலைத்தேய ஏகாதிபத்தியச் சுரண்டல் என்பவற்றுக்கெதிராக தனது அடையாளத்தையும், தனது மொழி, கலாசார சுயமரியாதையையும் பேணுவதில் எந்த அக்கறையுமின்றிக் கிடக்கும் ஒரு படித்த நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தின் தயவில் தமிழ் தேசியக் கருத்தியல் தங்கியிருக்க நேரிடுமாயின் ஒடுக்கு முறையை சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது எமது மக்களை அணிதிரட்டக்கூடிய வலுவை இன்று தமிழ்த் தேசியம் இழந்து வருகிறது.

மேல்நிலையாக்கமடைந்துவரும் நமது நடுத் தர வர்க்கங்கள் தமது குழந்தைகளுக்கு வைக்கும் கோமாளித்தனமான அர்த்தமற்ற பெயர்களும் சன் டி.வி கலாசாரமும் தமிழ்த் தேசியத்தின் எதிர்கால நெருக்கடியை எதிர்வு கூறி நிற்கின்றன. இப்படியாகத் தமிழ்த் தேசியக் கருத்தியல் வலுவிழந்து வரும் சூழலில் சாதி, மதம், பிராந்தியம் போன்ற பிரிவுகள் தலை தூக்குகின்றன. (அண்மையில் புலிகளைச் சார்ந்த ஒருவர் வெளியிட்ட நூலொன்றில் அவருடைய சாதி பேசப்படுமளவிற்கு நிலைமை போயுள்ளது) தமிழ்தேசியத்தை கடுமையாக மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. அதை நாம் செய்யாவிடின் வரலாறு எம்மைக் கவிழ்த்து விடும்.

*(இடவசதி கருதி சுருக்கப்பட்டது).*

# அறிவியல் தகவல்கள்

## கர்ப்பகால உடல் நலனிற்கு உகந்த வழிகள்.

சில எளிய வழிமுறைகள் பின்பற்றப்படுவதன் மூலம் கர்ப்ப காலத்திலும் மகப்பேற்றின் போதும் பிரச்சனைகள் ஏதும் வராது தவிர்க்கலாம். கர்ப்ப காலத்தில் தாயின் உடல்நலன் பேணப்படுவது பிறக்கப்போதும் குழந்தையின் உடல் நலனுக்கு இன்றியமையாதது. மருத்துவரின் தொடர் ஆலோசனையை நாடுவது அதன் முக்கிய அம்சம்.

**உணவு:** பிறக்கப் போகும் குழந்தையின் உடல் நலனை மனதில் கொண்டு மருத்துவர் அதற்கேற்ற உணவுகளைச் சிபார்சு செய்வார். நீங்களாகவும் கேட்டுத் தெரிந்து செயற்பட வேண்டும். சில உணவுகள் கர்ப்ப காலத்தின்போது பிறக்கப்போகும் குழந்தையின் நலனுக்குக் கூடாது என்று மருத்துவர் சொனனால் அவை தவிர்க்கப்பட்டே ஆக வேண்டும். எடுத்துக் காட்டிற்கு நன்கு சுத்திகரிக்கப்படாத பால்வகை, நன்கு வேகாத இறச்சி முட்டைவகை ஆகியவற்றுடன் நன்கு கழுவப்படாத காய்கறிகள்கூட இப்பட்டியலுள் அடங்கும்.

காய்கறிகளிலும் சிறு தானியங்களிலும் காணப்படும் போலிக் அமிலம். இது சிசுவின் உறுதியான முள்ளம்தண்டு அமைவிற்கு அவசியம். மாத்திரையாகவும் உங்கள் மருத்துவர் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள். எண்ணைச் சத்து மிகுந்த மீன்வகை நல்லது. ஆனால் அதை வாரத்துக்கு இரண்டுநாள் என்று கட்டுப்படுத்தும்படி மருத்துவ ஆலோசனை கூறுகிறது. மற்றைய மீன்களுக்குக் கட்டுப்பாடு கிடையாது. மீன் பிடிக்காதவர்களுக்கு கர்ப்பினிகளுக்கு உகந்த மீன் எண்ணைக் குளிகைகள் உண்டு.

**உடற்பயிற்சி:** கர்ப்பமாக இருக்கும்போது உங்கள் எடை அதிகரிக்கும். அதைச் சமாளிக்கவும், பிரசவத்தின்போது ஏற்படும் வலியைச் சமாளிக்கவும் உடற்பயிற்சி செய்வது அவசியம். குழந்தை பிறந்த பிறகு உங்களது பழைய உடற்கட்டை மீண்டும் பெற இந்த உடற்பயிற்சி உதவும். மனத்தொய்வைத் தவிர்க்கவும் உதவும். நடத்தல் எளிமையான யோகாசனங்கள் போன்றவற்றைச் செய்யலாம். கர்ப்பமாக இருக்கும் பெண்கள், குழந்தை பெற்ற பெண்கள், தும்மும்போதோ சிரிக்கும்போதோ அல்லது உடற்பயிற்சி செய்யும் போதோ சிறிய அளவில் சிறுநீர் கசிவது சாதாரணமான ஒன்று. இடுப்பிற்கான உடற்யிற்சிகளை கற்பமாக முன்பே செய்யத் தொடங்கி கர்ப்ப காலத்தின் போதும் தொடர்ந்து செய்து வந்தால் இதைத் தடுக்கலாம். இதைப்பற்றி உங்கள் மருத்துவரிடம் மேலும் அறியுங்கள்.

**மது:** எம்மத்தியில் பலர் இது அருந்தாததால் இது பற்றிச் சொல்லத் தேவையில்லை. அருந்தும் மது உங்கள் இரத்தத்தில் சேர்ந்து உங்கள் குழந்தையைச் சென்றடையும். அருந்துபவர்கள் இதை முற்றிலுமாகத் தவிர்ப்பது நல்லது. அதையும் மீறி அருந்துபவர்கள் வாரம் ஒருமுறை அல்லது இருமறை அதுவும் சிறிதளவு அருந்தலாம். இதை மீறும் பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் கல்வி கற்பதில் மிகவும் மந்தமாக இருப்பார்கள். மேலும் பலவிதமான உடற்குறைபாடுகளும் பிறப்பிலேயே ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

**கோப்பி, கோலா, தேநீர்:** கோப்பி, கோலா, தேநீர் போன்ற பானங்களில் காபெயின் என்ற பொருள் உள்ளது. இது உடலில் அதிகரித்தால் இரும்புச் சத்தை உடல் ஏற்பது குறையும். காபெயின் அளவு அதிகரிப்பது குழந்தையின் எடைக் குறைவிற்கும், கர்ப்பம் கலைவதற்கும் ஏதுவாகிறது. ஆனால் நான்கு கப் காப்பி அல்லது ஆறு கப் தேநீர் குழந்தைக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. இவற்றைக் குறைப்பதற்கு காபெயின் நீக்கப்பட்ட காப்பி அல்லது தேநீர், பழரசங்கள், சில துளி எலுமிச்சம் சாறு கலந்த தண்ணீர் ஆகியவற்றைக் குடியுங்கள்.

**புகைத்தல்:** புகைப் பழக்கம் உள்ள பெண்களுக்கு கர்ப்பம் கலைதல், குறைப் பிரசவம், இறந்தே குழந்தை பிறத்தல் ஆகியவ்றிற்பான சாத்தியக் கூறுகள் உண்டு. பிறந்த குழந்தைகள் கூட இறப்பதுண்டு. கர்ப்பமாகு முன்னரே புகைத்தலை நிறுத்துவது சிறந்தது. புகைத்தாலும் எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கிறீர்களோ அந்த அளவிவிற்கு உங்கள் குழந்தைக்கு நல்லது.

**ஓய்வு:** கர்ப்பத்தின் ஆரம்பம் மற்றும் இறுதிக் காலங்களில் உங்களுக்கு ஏற்படும் களைப்பின் அர்த்தம் வேலை செய்வதைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று உடல் தரும் செய்தி. மதிய நேரத்தில் சிறிது தூங்குவது உங்களிற்கும் உங்கள் குழந்தைக்கும் நல்லது. தூக்கம் வரவில்லை என்றால் கால்களைச் சற்று உயர்த்தி வைத்து அரை மணி நேரமாவது ஓய்வெடுங்கள்.

*நன்றி: குழந்தைகள் நிலையம்*






# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 28 வயது, 5'6", 10 years visa in France தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3923

2. 33 வயது, 5'8", Swiss citizen, self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3927

3. 39 வயது, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை, Divorced பட்டதாரி, working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1684

4. 61 வயது, 6'1", German citizen, living in UK, Retired தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3958

5. 37 வயது, 5'6", Student visa in UK பட்டதாரி, CIMA & ACCA working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3961

6. 42 வயது, 5'4", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Divorced, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3964

7. 42 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, Self employed, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3965

8. 37 வயது, 5'5", Asylum seeker living in uk for the past 10 years, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3968

9. 26 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, working in a IT sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3970

10. 31 வயது, 5'11", Asylum seeker living in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3973

11. 32 வயது, 5'10", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமைபெற்ற பட்டதாரி, working as an IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3974

12. 31 வயது, 5'7", Work permit visa in UK, பட்டதாரி, Working as head chef in a restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3975

13. 33 வயது, 5'7", Asylum seeker in France, working as Domestic Electrician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3977

14. 30 வயது, 5'6", Student visa, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3980

15. 33 வயது, 5'9", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as a Manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3885

16. 46 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, Divorced, Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

17. 32 வயது, 5'9", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3893

18. 23 வயது, 5'7", Student visa in UK, completed diploma in civil engineering and doing charted accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3899

19. 37 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Assistant manager in a shop, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3890

20. 28 வயது, 5'11", Student visa in UK, working in IT, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3892

21. 29 வயது, 5'10", PSW visa, BSc and MBA holder, working in accounts field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3901

22. 24 வயது, 5'6", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3907

23. 28 வயது, 5'2", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3910

24. 37 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working as a team manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1793

25. 43 வயது, 5'8", Asylumseeker, பட்டதாரி, MBA holder தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3856

26. 31 வயது, 5'6", PSW visa in UK, BA பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3857

27. 31 வயது, 5'7", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3866

28. 31 வயது, 5'10", பிரான்ஸ் நிரந்தர வதிவுரிமை, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3867

29. 26 வயது, 6'0", Student visa in UK, Studying BSc Computer Application, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3869

30. 26 வயது, 5'10", Student visa in UK, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3838

31. 25 வயது, 5'5", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3839

32. 34 வயது, 5'5", France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3840

33. 29 வயது, 5'10", visa in Lithuania, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3842

34. 31 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3844

35. 32 வயது, 5'7", Asylumseeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3845

36. 28 வயது, 5'3", Student visa in UK, Studying BA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3846

37. 26 வயது, 5'8", Canada, Working in IT industry, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3851

38. 33 வயது, 5'10", பிரித்தானிய பிரஜாவுரிமை, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3852

39. 30 வயது, 5'5", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3816

40. 25 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3830

41. 39 வயது, 5'6", Doctor born and brought up in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3831

42. 35 வயது, 5'9", PR holder, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3834

43. 27 வயது, 5'6", Student visa in UK, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3835

44. 33 வயது, 5'8", Permanent residence, Engineer working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3836

45. 38 வயது, 5'8", British citizen currently running a business in Dubai, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3605

46. 35 வயது, 5'8", கனடியநிரந்தரவதிவுரிமை, Land Surveyor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3774

47. 29 வயது, 5'10", Student visa in UK, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3784

48. 27 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, IT sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3785

49. 31 வயது, 5'8", Asylum, BBA, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3786

## மணமகன் தேவை

1. 29 வயது, 5'2", Student visa in UK பட்டதாரி, studying MSc Bio Med தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3934

2. 23 வயது, 5'3", Swiss citizen, Studying Batchelor degree தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3743

3. 30 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Completed Masters degree in Medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 722

4. 25 வயது, 5'2", Born and brought up in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3966

5. 35 வயது, 5'4", Born and brought up in UK, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3967

6. 30 வயது, 5'7", French citizen living in UK பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3976

7. 29 வயது, 5'3", European citizen, MSc graduate, Chemist, working in UK, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3981

8. 33 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, divorced, பட்டதாரி working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3508

9. 34 வயது, 5'8", Workpermit visa, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3889

10. 38 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Part qualified ACCA, working as an assistant accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

11. 41 வயது, 5'2", Student visa in UK, பட்டதாரி, doing MSc in formulation science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

12. 29 வயது, 5'1", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1378

13. 25 வயது, 5'3", BSc degree in Mathematics and Statistic, living in uk for the past 10 waiting for a permanent visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

14. 22 வயது, 5'0", இலங்கை, A/L Bio Science தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3732

15. 31 வயது, 5'2", அமெரிக்க பிரித்தானிய பிரஜாவுரிமை, Doctor, PhD qualified, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3855

16. 35 வயது, 5'6", அமெரிக்க பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in pharmaceutical company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3865

17. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை, Computer degree holder தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3881

18. 34 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3841

19. 31 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Bio Chemist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3793

20. 35 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3853

21. 28 வயது, 5'6", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3803

22. 26 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவுரிமை, Accountant working in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3260

23. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Working in IT field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3502

24. 22 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working in medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

25. 29 வயது, 5'1", இலங்கை, Working for export firm in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3791

26. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரிமை, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3800

27. 31 வயது, 5'3", PSW visa in UK, Masters degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3806

28. 29 வயது, 5'5", Work permit visa in UK, BSc, MBA degree holder, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3810

29. 26 வயது, 5'3", தென்னாபிரிக்க பிரஜாவுரிமை, Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3569

30. 24 வயது, 5'5", Denmark பிரஜாவுரிமை, பட்டதாரி, Working in Medical sector in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

31. 36 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவுரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3573

32. 32 வயது, 5'5", Malaysian citizen, Masters in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3763

33. 27 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

34. 32 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3772

35. Age 37, 5'2", British citizen working in a IT company looking for a suitable groom Ref: 3701

36. Age 28, 5'2", British citizen accountant looking for a suitable groom Ref: 1348

37. Age 32, 5'4", British citizen doctor looking for a suitable groom Ref: 3711

38. Age 25, 5'3", graduate working in a bank in srilanka looking for a suitable groom Ref: 3717

39. Age 31, 5'6", British citizen graduate working in a bank looking for a suitable groom Ref: 3365

40. Age 32, 5'1", graduate working as a accountant in a company in srilanka looking for a suitable groom Ref: 3739

41. Age 33, 5'2", graduate divorced student visa in uk looking for a suitable groom Ref: 3745

42. Age 24, 5'4", Student visa in UK, looking for a suitable groom, Ref no: 3687

43. Age 34, 5'4", British Citizen, Doctor, looking for a suitable groom, Ref no:3694

44. Age 37, height 5'5" Student visa looking for a suitable groom Ref: 3667

45. Age 32, height 5'4" Sweden citizen divorced looking for a suitable groom Ref: 3653

46. Age 27, height 5'6", Canadian citizen student looking for a suitable groom Ref no 3674

47. Age 30, height 5'5", Graduate Teacher in srilanka looking for a suitable groomRef no 3660

48. Age 23, height 5'8" British citizen, graduate working in a company looking for a suitable groom Ref: 3635

49. Age 27, height 5'4" British citizen, a student looking for a suitable groom Ref: 3628

50. Age 29, height 5'2" Student visa looking for a suitable groom Ref: 3631

51. Age 28, height 5'7" British citizen graduate looking for a suitable groom Ref: 3637

52. Age 26 height 5'2" British citizen Doctor ,looking for a suitable groom ,Ref :3627

53. Age 40 height 5'5" working as a Teacher in Srilanka, graduate looking for a suitable groom Ref: 3568

54. Age 26 height 5'0" living in UK in a student visa, graduate looking for a suitable groom Ref: 3585

55. Age 31 height 5'1" in Srilanka a music teacher looking for a suitable groom Ref: 3588

56. Age 28 height 4'9" in Srilanka a graduate looking for a suitable groom Ref: 3590

57. Age 42 height 5'2" in Srilanka working as a Teacher , graduate looking for a suitable groom Ref: 2622

58. Age 26, 5' 3", British citizen, Accountant Looking for a suitable Groom Ref 3539.

59. Age 29, 5' 7", British citizen working in medical sector Looking for a suitable Groom, Ref 722.

60. Age 32, 5' 4", German citizen living in uk working as an Architect

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# பள்ளிக்கூடத் திருவிழா



இன்றைய திருக்கேதீஸ்வரம்

வழமையாக ஒவ்வொரு பெரிய வெள்ளி தோறும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானியாக் கிளை கோயில்களில் விசேட அபிடேகம், பூசை நடாத்தும். இந்த ஆண்டு அது லூசியம் சிவன் கோயிலில் நடந்தது. அந்த ஆலயம் வழங்கிய வசதியைப் பயன்படுத்தி பூசைகள் தமிழில் நடைபெற்றது. இது மற்றொரு சிறப்பாக இருந்தது. கருத்து விளங்கக்கூடிய வகையில் இறைவனை அர்ச்சிப்பது மகிழ்ச்சிக்குரியது தானே. நூறு ஆண்டுகளைக் கடந்து இன்றும் சிறப்போடு இயங்கும் அந்தக் கிராமத்துப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதே சைவமக்களின் நன்மைக்காகத் தான். கல்வி வசதியைக் காட்டி மதமாற்றத்தை ஊக்குவித்த கிறிஸ்தவ மிஷனரியின் முயற்சியை முறியடிக்க அன்னியர் ஏகாதிபத்தியம் நிலவிய 1910ம் ஆண்டில் தெல்லிப்பழை அம்பனைக் கிராமத்தில் அந்தக் கல்லூரி ஆரம்பமானது. அது பழைய கதை. அரசாங்கம் பொறுப்பேற்றதோடு அதுவரை தனிச் சைவப்பாடசாலை என்ற முத்திரையோடு அந்தக் கல்லூரி இயங்கியது. அருகிலுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் 17ம் உற்சவத்திருவிழா, திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 7ம் உற்சவத் திருவிழா இரண்டும் பாடசாலை உபயமாக பாடசாலையால் பொறுப்பேற்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன் நினைவாக அந்தச் செயல்பாட்டை அந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இலண்டனில் செய்து வருகிறது. இங்குள்ள அதன் பழைய மாணவர்கள், அவர்களின் சந்ததியினர், உறவு வட்டங்கள் வழிபாட்டுக்காக வருடத்தில் ஒருநாள் ஒன்றிணைவது கூட நல்ல முயற்சிதான். எங்களுடைய மொழி, கலாச்சாரம் என்ற தனித்துவங்களை இந்த நாடுகளில் பேண தமிழ்ப்பாடசாலைகள் இயங்குவதைப் போல, ஆலயங்களும், சமயப்பரீட்சைகளும், இவ்வாறான பூசைகளும் சமயத்தை தொடர்ந்து பேணச்செய்ய உதவும்தான். எமது சிறுவயதுப் பள்ளிப்பராயத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமியார் ஆலய 17ம் திருவிழா இரண்டாம் தவணைப் பரீட்சைக்குக் கிட்டவாகத்தான் பாடசாலை நாளில் வரும். ஆனால் அன்றைய தினம் பாடசாலை பூசைக்காக விடுமுறை காணும். மாணவர்களின் 25 சதம், 50சதம் என்று வகுப்பு ரீதியாகச் சேர்த்து, ஆசிரியர்களும் பங்களிப்புச் செய்து பள்ளிக்கூடத் திருவிழா நடக்கும். 1400 மாணவர்கள் படிக்கும் பாடசாலை கோயில் சனத்திரளால் நிறையும். மாணவர்கள் எல்லோரும் வேட்டியோடும், மாணவிகள் சேலை, அரைத்தாவணி, அல்லது முழுப்பாவாடை என்று வயதுக்கேற்ற உடையோடும் அந்தத் திருவிழாவில் ஒன்றிணைவார்கள். அந்த உடையில் புதிதாக ஆளையாள் பார்ப்பதுபோல இருக்கும். நாம் கோவிலுக்குள் புகும்போது கழற்றி இடுப்பில் வேட்டிக்கு மேல் கட்டும் சேட் கூட வெள்ளை சேட்டாகத்தான் இருக்கவேண்டுமென்பது அதிபர் ஜெயரத்தினத்தின் கண்டிப்பான கட்டளை.

ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது திருக்கேதீஸ்வரத் திருவிழாவிற்கு அம்மாவுடன் போன அனுபவம் இன்னும் பசுமையாக நினைவில் இருக்கிறது. அந்தத்திருவிழா ஒவ்வொரு முதலாம் தவணை விடுமுறையில்தான் அனேகமாக வரும். பெரிய தனியார் பஸ் இரண்டை ஒழுங்கு செய்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என எல்லோரும் ஒன்றாகச் செல்வது வழமை. சுழிபுரத்தில் வசித்த மூர்த்தியின் பஸ்கொம்பனி பஸ்வண்டிகள் தான் வழமையாக ஒழுங்குசெய்யப்படும். அம்மா, அண்ணர் என எங்களில் மூவர். அடுத்தநாள் பூசைக்கு முதல்நாள் காலையிலேயே பஸ்கள் புறப்படும். மதியச்சாப்பாடும் கட்டிக் கொண்டுதான் எல்லோரும் வருவார்கள். எம்மில் பலருக்கு பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே போவது அதுதான் முதல் அனுபவம். யக்கச்சி தென்னந்தோட்டம், பரந்தன், கிளிநொச்சி முதல் தொடர்ந்த வயல்வெளி, பரந்தன் இரசாயனசாலை, எல்லாமே புதுமையாக இருந்தது. வழிபாட்டுக்குத் தேவையான, மற்றும் தேனீர் இடைவேளைக்காக முருகண்டியில் பஸ் நின்றது. முருகண்டியில் அந்த சிறிய கோயிலில் மரத்தின் கீழ் இருந்த பிள்ளையாரைத் தரிசித்ததும், சிதறுதேங்காய் அடித்ததும் இன்னும் நினைவிருக்கிறது. கடையில் தேங்காய்கள் விலை என்பதால் பலரும் வீட்டிலிருந்தே தேங்காய்கொண்டு வந்திருந்தார்கள். ஓடியோடி ஆட்களுக்குபயப்படாமல் அருகே வந்து தேங்காய்ச் சொட்டு, கடலைக்கொட்டை என்பவற்றை பொறுக்கிக்கொண்டிருந்த குரங்குகளை நாம் விரட்ட, தாய்க்குரங்கு முறைத்தபடி எம்மை நோக்கி வந்ததும் கூட ஒரு பயம் தந்த அனுபவம். சுற்றுச் சூழலில் மயில், காட்டுக்கோழி, யானைகள் கடந்த பாதை என்று சுட்டிக்காட்டப்பட்ட மரங்கள் முறிந்த வளைவுகள், யானை இலத்தி எல்லாமே அந்த திருவிழாப் பயணத்தில் முதலில் காணக்கிடைத்தவைதான்.

**ஊரின் வாசம்**

**சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்**

வவுனியாவில் பஸ் மதிய உணவுக்காக நின்றது. அருகிலிருந்த தாமரைக் குளத்திற்கு குளக்கட்டு மாணவர்களால் நிறைந்தது. கொல்லங்கலட்டி சீனிவாசன் என்ற உயர்வகுப்பு மாணவன் குளத்துக்குள் இறங்கி தாமரைப் பூவைப் பிடுங்கிக்கொண்டு ஏற அவனுக்கு வலிப்பு வந்தது. வாயில் நுரை தள்ளியபடி அவன் துடித்து குளக்கட்டுக்குக் கீழே விழுந்து கிடந்தான். ஆசிரியர்கள் அவனைத்தூக்கி வந்த பஸ்ஸில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். சில மணிநேரத் தாமதத்தின் பின் மீண்டும் பஸ் பயணம். ஆனால் ஆட்டம் பாட்டு எல்லாம் ஆசிரியர்களால் அந்தச் சம்பவத்தின் பின் சிறிது நேரம் அடக்கப்பட்ட நிலை.

நாம் திருக்கேதீஸ்வரத்தை அடைந்தபோது இரவாகி விட்டது. வெளிவீதி சுற்றலாய் சுவாமி வந்துகொண்டிருந்தது. சுத்தமான ஒரு மடத்தில் தங்க வசதி தரப்பட்டது. இரவு உணவும் மடத்தில் தான். மறுநாள் பூசை. பாலாவியில் நீராடிய முதல் அனுபவம். ஆசிரியர்கள் கண்காணிப்புடன் மட்டுப்படுத்தப்பட்ட இடம்வரை தான் நாம் பாலாவிக்குள் இறங்க முடிந்தது. சிறப்பான பூசை. பாலாவியிலிருந்து செம்பு நிறைந்த தண்ணீரோடு வந்து பெரிய சிவலிங்கத்திற்கு அம்மா என்னைத் தூக்கி உயர்த்த நீராட்டியதும் கூட மகிழ்ச்சிதந்தது. பக்தி சிரத்தையான பூசை. மதியம் மடத்தில் வரிசையாக பந்திப்பாயில் இருந்து தேவாரம் ஓதியபின் சாப்பிட்டோம். மன்னாரில் தங்கியிருந்த சித்தி குடும்பமும் பூசைக்காக வந்திருந்தது. சித்தப்பா மன்னார் கச்சேரியில் வேலை என்பதால் சித்தி ரோகிணி ரீச்சரும் மாற்றலாகி நானாட்டான் பள்ளிக்கூடத்தில் படிப்பித்துக் கொண்டிருந்த வேளை அது. சிறுமியான தங்கை கௌரியைப் பராமரிக்க அம்மம்மாவும் அவர்களுடன்தான் தங்கியிருந்தார். குடும்பங்கள் கூடிக் குதூகலிக்கவும் அந்தச் சுற்றுலா பயன்பட்டது.

பிற்பகல் சுற்றுப்புறத்திலிருந்த நடைதூர கோவில் இரண்டு, சுவாமியார் ஒருவர் இருந்த ஆச்சிரமம் ஆகியவற்றை குழுக்குழுவாகப் போய்ப்பார்த்தோம். மான், மரை, குரங்கு, மயில் எல்லாம் அங்குமிங்குமாக சரளமாகத் திரிந்தது இன்னொரு களிப்பூட்டிய காட்சி. அன்றைய திருக்கேதீஸ்வரத்தின் ஆனந்தமயமான சூழல் அது. இரவுப் பூசையும் மாலை அபிடேகத்துடன் ஆரம்பமானது. மடத்தில் தூங்கி அதிகாலை எழுந்து மீண்டும் பஸ் பயணம் மூலம் வீட்டுக்கு வந்தடைந்தோம். ஆண்டுகள் பல ஓடினாலும் துள்ளித்திரிந்த அந்தப் பள்ளிநாட்கள், அவற்றில் நாம் பெற்ற இவ்வாறான சுற்றுலா அனுபவங்கள் இன்றும் நினைத்தாலே இனிக்கும் அனுபவங்கள்தானே. இந்த அனுபவங்களை இரைமீட்க, சகமாணவர்களோடு நினைவூட்டிப் பகிர்ந்து கொள்ள இந்தப் பெரிய வெள்ளிப் பூசைகள் தொடர்ந்து உதவட்டும்.

# சிமிக்கி...

காசு குடுக்கும் பொழுது அந்த ஜயா க நாளய் இஞ்சை வேலை செய்யிறாரோ ? எண்டதும் கடைக்காரரும் வஞ்சமில்லாமல். இப்பதான் ஒரு மூண்டு மாதமாய் நல்ல மனிசன். பாவம் பிள்ளையள் அவரை கவனிக்கிறேல்லை போலை அதுதான் இந்த வயதிலையும் வேலை செய்யிறார் எண்டொரு மேலதிக தகவலையும் சொல்லி வைத்தான்.

♦ ♦ ♦ ♦

இண்டைக்குவீட்டிலை சுனாமி அடிக்கப்போகுது என்று நினைத்தபடியே வீட்டிற்குள் நுளைந்த நாதனிடம் அப்பா உங்களோடை கொஞ்சம் கதைக்கவேணும். எண்டதும் மருமகளும் பேரனை இழுத்துக்கொண்டு அறைக்குள் நுளைந்து விட்டாள். கடைக்காரன் தான் உங்கடை சினேதனோ என தொடங்கியவன் மானம் போகுது மரியாதை போகுது. என்ன குறை விட்டம். சாப்பாடா? சிகரற்றா? பியரா? வெத்திலையா? உடுப்பா? அடுக்கிக் கொண்டே போனான். நாதனின் மௌனம் மட்டுமே பதிலானது. கோபத்தில் லண்டனிற்கு போனடித்து சத்மாய் நடந்ததை சொல்லி முடித்துவிட்டு அம்மா நீங்களே அவரிட்டை கேளுங்கோ எதுக்கு வேலைக்கு போனவெரெண்டு உங்களிட்டையாவது சொல்லுறாரோ பாப்பம் என்று தொலைபேசியை நாதனிடம் நீட்டினான். தொலைபேசியை காதில் வைத்தவர். மறுபக்கத்தில் என்னப்பா இதெல்லாம் என்கிற விசும்பிய குரலிற்கு எல்லாம் காரணத்தோடைதான் என்றுவிட்டு மகனிடம் தொலை பேசியை நீட்டிவிட்டு அறைக்குள் புகுந்து கொண்டார். டேய் அப்பா என்ன செய்தாலும் ஏதாவது காரணம் இருக்குமடா அவரை பேசாதை என்றவரிடம் நீயும் அவருக்கு வக்காளத்து வாங்கு என்று கத்திவிட்டு போனை வைத்தான். அதற்கு பிறகு சாவித்திரியும் சரியாக சாப்பிடுவதில்லை யாருடனும் கதைப்பதில்லை ஏன் இந்த மனுசன் இப்பிடி செய்ததெண்டு அந்த கவலையிலேயெ நாட்கள் போய்க்கொண்டிருந்தது. நாதனை வேலைக்கு போகவேண்டாமென்று மகனிற்கும் அவரிற்கு சண்டை விரிசல் கூடிக்கொண்டே போனதே தவிர இருவரும் ஆற அமர்ந்து இருந்து வேலைக்கு போவதற்கான காரணங்களை கதைக்கவில்லை. அம்மா அப்பா என்கிற உறவு பிள்ளைகளின் வாய்களில் கிழவன் கிழவியாகிப் போனது.

மட்டுமல்லாமல் உறவுகளிற்கிடையில் விரிசல்களும் அதிகரித்துப் போனது அந்த மாத இறுதியில் நாதனின் கைகளிற்கு சிமிக்கி கிடைத்துவிடும். அன்று வேலையால் வந்தவர் மகனிடம் நானும் அம்மாவும் ஊருக்கு போகப் போறம் அதுக்கான வேலையளை பார் என்று விட்டு போய்விட்டார். அவன் மீண்டும் தங்கைக்கு போனடித்து கத்தினான். அம்மவும் அப்பிடித்தான் இஞ்சை சரியா கதைக்கிறேல்லை சாப்பிடுறேல்லை கனதரம் பிறசர் கூடி தலை சுத்தி விழுந்திட்டா ஏதும் நடந்திடுமோ எண்டு எனக்கும் பயமா கிடக்கு பேசாமல் ஊருக்கே அனுப்பிறது நல்லதுபோலை கிடக்கு அங்கை என்ரை சீதன வீடும் காணியும் யாரோ தானே இருக்கினம். அவையளோடை கதைச்சு எழும்ப சொல்லிப் போட்டு பேசாமல் இரண்டு கிழட்டையும் அனுப்பி விடுறது நல்லது போலத்தான் கிடக்கு என்றாள்.

♦ ♦ ♦ ♦

பயண அலுவல்கள் தயாராகி விட்டிருந்தது நாதன் british airwaysல் இலண்டனிற்கு போய் அங்கிருந்து சாவித்திரியுடன் இணைந்து கொழும்பு போவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது தம்பி நான் ஊருக்கு போறன் என்று வேலை செய்த கடைக்காரரிடம் விடை பெற்ற நாதன் சம்பளத்தை வாங்கிக் கொண்டு நகைக் கடைக்குள் நுளைந்தார். மிகுதி பணத்தை கொடுத்ததும் கடைக்காரர் ஒரு சிறிய டப்பாவை திறந்து சிமிக்கியை காட்டினான் ஜயா எப்பிடி இருக்கு நான் நினைச்சமாதிரியே இருக்கு அது சரி இவ்வளவு பெரிய சிமிக்கியை யாருக்கு குடுக்கப்போறியள். என்ரை மனிசிக்கு என்றபடி கொடுப்பிற்குள் சிரித்தவர் அதை வாங்கி சிறிய பையில் சுற்றி சட்டை பையில் பத்திரப்படுத்திக்கொண்டு வீடு நோக்கி போனவர். மகன் அவரது பொருட்கள் தயாராக எடுத்து வைத்திருந்தான் அவர்களது கார் விமான நிலையம் நோக்கி போய்க்கொண்டிருந்தது அவரோ அடிக்கடி சிமிக்கி பத்திரமாக இருக்கிறதா என தொட்டு பார்த்தபடியே இருந்தார். விமான நிலையத்தில் பேரனை கட்டியணைத்து முத்தம் இட்டு விடைபெறும்போது அவரது கண்கள் கலங்கிப்போய்விட்டிருந்தது. மருமகளிடமும் பிள்ளை ஏதும் குறையள் இருந்தால் மனசிலை வைச்சுக்ககொள்ளாதை என்றதும் அவளும் கலங்கித்தான் போனாள். மகனிடம் திரும்பியவர் தம்பி பேட்டுவாறன் என்றதும் போங்கோ ஆனால் அங்கை போய் நிண்டு கொண்டு போனடிச்சு காசு காசு எண்டு உயிரை வாங்க கூடாது என்றபடி முகத்தை திருப்பிக் கொண்டான். அவரிற்கு குளைக் கம்பியால் யாரோ நெஞ்சில் செருகியது போலதொரு வலி. நெஞ்சை தடவினார் சட்டைப் பையில் சிமிக்கி தட்டுப்பட்டது. கீத்றோ விமான நிலையம் கொழும்பு செல்லும் விமானத்தில் ஜன்னல் பக்கமாக சாவித்திரியும் அருகில் நாதனும் அமர்ந்திருந்தார்கள். சாவித்திரிதான் முதலாவதா தொடங்கினாள். நீங்கள் ஊருக்கு போவம் எண்டதும் நானும் ஏன் எதுக்கொண்டு கேக்காமல் மகளையும் பேரப் பிள்ளையையும் விட்டிட்டு பேசாமல் வந்திட்டன். எதுக்கு இதெல்லாம்?

சத்தியமா சொல்லு சாவித்திரி வன்னியிலை நாங்கள் கடைசியா இலைக்கஞ்சி குடிக்கேக்குள்ளை இருந்த நிம்மதி சந்தோசம் இஞ்சை வந்த இரண்டு வரியத்திலை இருந்ததோ?

இல்லைத்தான்.....

சத்தியமாய சொல்லுறன் ஒவ்வொரு நாளும் சாப்பிடேக்குள்ளை எனக்கு ஏதோ கல்லையும் முள்ளையும் விழுங்கின மாதிரியே இருந்தது ஆனால் மகனும் மருமகளும் சங்கடப் படுவினம் எண்டு எதுவும் பேசாமல் விழுங்குவன். அவரின் குரல் தளுதளுத்தது...

எனக்கு மட்டும் என்ன நீங்கள் என்னத்தை சாப்பிடுறியள் எப்பிடி சாப்பிடுறியள் எத்தினை மணிக்கு தேத்தண்ணி குடிக்கிறியள் எல்லாம் கவலைதான். அது மட்டுமில்லை நாலைஞ்சு உடுப்பு காலையும் சப்பாத்துக்குள்ளை செருகிக் கொண்டு மிசின் மாதிரி பிள்ளையள் ஓடித்திரியிதுகள். அதுகளுக்கு எங்களையும் தனிய கவனிக்கிறது ஒரு பாரம். அதே நேரம் இந்த நடைமுறையளும் எங்களுக்கும் சரிவராது அதுதான் போறதெண்டு முடிவெடுத்தனான். அதுகள் விரும்பினால் வருசாவருசம் ஊருக்கு வந்து எங்களை பாத் திட்டு போகட்டும். விமானம் மேலெழும்பத் தொடங்கிவிட்டிருந்தது

நானும் அதைத்தான் யோசிச்சனான். ஆனா எதுக்கு நீங்கள் வேலைக்கு போனனீங்கள் அதாலைதானே பிரச்சனையே தொடங்கினது அதை யாவது சொல்லுங்கோவன். சிரித்தபடி சட்டைப் பையிலிருந்து சிறிய பெட்டியை எடுத்து திறந்து காட்டினார் மின்னிக்கொண்டிருந்த சிமிக்கிளை பார்த்து சாவித்திரியின் கண்கள் மின்னியது. ஆனாலும் இதுக்காகவா இவ்வளவு கஸ்ரப்பட்டு வேலைக்கு போனனீங்கள் மகனிட்டை கேட்டிருக்கலாம்தானே ? அப்பிடியா அப்ப நீ மட்டும் ஏன் மகள் தந்த தோட்டை வாங்கி போடேல்லை எனக்கு உன்னைப்பற்றி தெரியுமடி அதுதான் நானே வேலை செய்து அந்த சம்பளத்திலை இதை செய்தனான். என்றபடி சாவித்திரியிடம் நீட்டினார். அவளோ காதை அவரிடம் நீட்டினாள் கண்ணாடியை கழற்றி துடைத்து மீண்டும் அணிந்து கொண்டவர் அவள் காதிலிருந்த குச்சியை மெதுவாக ஆட்டி இழுத்தெடுத்துவிட்டு சிமிக்கிகளை பூட்டிவிட்டார் அதை கவனித்த பக்த்து இருக்கையில் இருந்த வெள்ளைக்காரி வலக்கை கட்டை விரலை உயர்த்திக்காட்டினாள். நாதனும் அவளிற்கு கை கட்டை விரலை உயர்த்திக் காட்டிவிட்டு சாவித்திரியிடம். டிங்கை அந்தப் பாட்டை ஒருக்கா பாடுமன்...

எந்தப் பாட்டை அதுதான் அந்தப் பாட்டு சாவித்திரியும் அவரது காதில் மெதுவாக நடுங்கும் குரலில் காதோடுதான் நான் பாடுவேன் காதோடுதான் நான் பேசு..... தொண்டை அடைத்தது கணவனின் தோளில் சாய்ந்து கொண்டாள் நாதனின் கை விரல்கள் அவளின் விரல்களிற்குள் புகுந்து இறுக்கிக் கொண்டது. கட்டுநாயக்காவில் தரை தட்டிய விமானத்திலிருந்து பயணிகள் அனைவரும் இறங்கிய பின்னரும் இருவர் மட்டும் இன்னமும் உறக்கத்திலிருந்ததை கவனித்த பணிப் பெண் அவர்களின் அருகில் சென்று உங்கள் பயணம் நிறைவடைந்து விட்டது எழுந்திருங்கள் என்று அவர்களை மெதுவாய் தட்டியவள் பயத்தில் திடுக்கிட்டு உதவி உதவி என கத்தினாள்.



# சார்லி சாப்ளினுக்கு சாவே இல்லை..!

வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும் என்பார்கள் அப்படிப்பார்த்தால் நம்மை வாய்விட்டு சிரிக்க வைப்பவர்களை மருத்துவர்களுக்கு சமம் என்று சொல்லி விடலாம். உலகில் அதிக மக்களை சிரிக்க வைத்த நபர் யார் என்று கேட்டால் ஒரே ஒரு நபரைத்தான் வரலாறு சுட்டிக்காட்டும். அவர்தான் ஈடு இணையற்ற ஆங்கில நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின்.

இன்று திரைப்படங்களில் வசனங்களைக் கேட்டு சிரிக்கிறோம் ஆனால் ஊமைப்படங்கள் மட்டுமே வெளிவந்த ஒரு கால கட்டத்தில் மொழியின் துணையின்றி வசனம் எதுவும் பேசாமால் தன் உடல் அசைவுகளாலே ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்க வைத்தவர்தான் சார்லி சாப்ளின். 16.04.2012 அன்று அவரது 123வது பிறந்த நாள்.. அவர் குறித்த தகவல்களும், சார்லி சாப்ளின் சொன்னவையும்....

சார்லி சாப்ளினின் வாழ்க்கை சந்தோஷமாக இருந்ததே இல்லை. பிறந்ததில் இருந்தே துன்பங்கள், அவமானங்கள், தோல்விகள் தான் அவரின் நண்பர்கள்.

1889ஆம் ஆண்டு லண்டன் நகரில் சாப்ளின் பிறந்து, ஓரிரு வருடங்களிலேயே பெற்றோரிடையே சண்டை வந்து பிரிந்து விடவே, பேசத்தொடங்கும் முன்பே, தாயுடன் சேர்ந்து மேடையில் பாடவேண்டிய நிர்ப்பந்தம். ஐந்து வயதுச் சிறுவனின் பாட்டுக்குக்கிடைத்த அமோக வரவேற்பு, ஏழு வயதிலேயே பறிபோனது. காரணம், அவரது தாயாரின் மனநிலை பாதிக்கப்பட்டதுதான். குடும்பத்தைக் காப்பாற்ற சலூன், கண்ணாடித் தொழிற்சாலை, மருத்துவமனை என எங்கெங்கோ வேலை பார்த்தவர், சில காலம் தந்தையுடன் சேர்ந்து மேடை நாடகங்களிலும் நடித்தார். ஆனால், தந்தை திடீரென இறந்துவிடவே, மீண்டும் தொய்வு!. 1910ல் நாடகக் குழுவினருடன் அமெரிக்கா போனவருக்கு குறும்படங்களில் நல்ல பெயர் கிடைத்தது. அவரது முத்திரை கதாபாத்திரமான 'டிராம்ப்' (பேகி பேண்ட், தொப்பி, கைத்தடி, வளைந்த கால்கள்) பிரபலமானது. 'திகிட்', படத்தில் தொடங்கிய வரவேற்பு, 'தி கிரேட் டிக்டேட்டர்' வரை நீடித்தது. ஆனால், இந்த காலகட்டங்களில் குடும்ப வாழ்வு அவரை பாடாய்ப் படுத்தியது.

1918ல் நடந்த முதல் திருமணம், இரண்டு வருடம் மட்டுமே நீடித்தது. அதற்குப்பின் நடந்த இரண்டு திருமணங்களும்கூட சாப்ளினுக்குச் சோகத்தை மட்டுமே கொடுத்தன. 1942 ல் நான்காவது மனைவியாக ஓனெய்ல் அமைந்த பின் இல்லறத் தொல்லைகள் நின்றன.

1945ம் ஆண்டு. சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் தீவிரவாதி என அமெரிக்க அரசு குற்றம் சாட்டியது. இரண்டாவது மனைவி ஜோன் பெர்ரியும் சாப்ளின் மீது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்திருந்தார். அவர் தரப்பு நியாயங்களை அமெரிக்க அரசு கேட்காததால், வேறு வழியின்றி, 1952 ல் கனத்த இதயத்துடன் சுவிட்சர்லாந்தில் அடைக்கலமானார் சாப்ளின்.

1972 ஆம் ஆண்டு காலச் சக்கரம் சுழல, அதே அமெரிக்க அரசு, 'உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகர்' விருது பெற சாப்ளினை அழைத்தது. பரிசினை ஏற்றுக் கொண்டாலும், அமெரிக்காவில் தங்க விருப்பமின்றி, மீண்டும் சுவிட்சர்லாந்து கிளம்பினார் சாப்ளின். விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் சூழ்ந்து நின்று, 'வாழ்நாள் முழுவதும் போர்க்களமாக இருந்தாலும் எப்படி ஜெயித்தீர்கள்? அது என்ன ரகசியம்?' எனக் கேட்டார்கள். சாப்ளின் சிரித்தார்... 'இந்த நிலை மாறிவிடும் என்பதை நான் எப்போதும் மறந்ததில்லை. அது இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி... மாறிவிடும்! இதோ இந்தக் கணத்திலும் கூட!'

சாப்ளினின் கண்கள் நீல நிறத்தில் இருந்தன. கருப்பு வெள்ளைப் படங்களில் மட்டுமே அவரைப் பார்த்திருந்த ரசிகர்கள், அவரை நேரில் பார்க்கும் பொழுது பெரிதும் வியப்புற்றனர். சாப்ளினின் புகழினால் சாப்ளினைப்போல் தோற்றம் அளிப்போருக்கான போட்டிகள் பல நடத்தப்பட்டு வந்தன. சாப்ளின் ஒரு முறை அப்போட்டி ஒன்றில் ரகசியமாகப் பங்கு பெற்றார். இதில் இவரால் மூன்றாம் பரிசையே வெல்ல முடிந்தது..

இனப் படுகொலையாளி ஹிட்லரின் காலத்தில், ஹிட்லருக்கு எதிராக படமெடுத்த 'மக்களின் கலைஞன்' சார்லி சாப்ளின் சொன்னது இது...

'மனிதன் கொண்ட வெறுப்புகள் ஒரு நாள் மறையும், சர்வாதிகாரிகள் இறப்பார்கள், மக்களிடம் இருந்து அவர்கள் பறித்த அதிகாரம் மீண்டும் மக்கள் கைகளுக்கே திரும்பும், மனிதன் இறக்கும் வரை விடுதலை தாகம் மறையாது'

*உன் மனம் வலிக்கும்போது சிரி!*

*பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்க வை!*

இன்றும் உலக மக்களின் மனதில் சிரிப்பலைகளைத் தவழவிட்டு நாளும் வாழ்ந்து கொண்டிருக்கும் சார்லி சாப்ளின் மறைந்து விட்டாரா என்ன? நம் நினைவலைகளில் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

*- சி.என்.இராமகிருஷ்ணன்*

திரை விமர்சனம்

# The Hunger Games



தமிழ்ப் படங்களில் சென்சார் சான்றிதழ் குறித்து யாரும் பெரிதாக அலட்டிக் கொளவதில்லை பிட்டுபடங்கள் ஓட்டும் தியேட்டர்களை தவிர.... வாலி, பாய்ஸ், துள்ளுவதோ இளமை, மன்மதன், 7/G ரெயின்போ காலனி என பல படங்கள் 'யு' சான்றிதழ் வாங்கி இருந்தாலும் தியேட்டரில் உங்களுக்கு 18 வயது பூர்த்தி ஆகிவிட்டதா என சரிபார்க்க யாருக்கும் நேரமில்லை விருப்பமும் இல்லை. அது மட்டுமல்லாமல் இந்த படங்கள் யாவும் தொலைக்காட்சியில் ப்ரைம் டைமில் ஒளிபரப்பானது அது குறித்தும் யாரும் சட்டை செய்வதில்லை. ஹாலிவுட்டில் கொஞ்சமேனும் இந்த தணிக்கை விஷயத்தில் அக்கறை எடுத்து கொள்வார்கள் போலும் அதனால் தான் பெரும்பாலான வணிக படங்கள் குறைந்த பட்சம் PG-13 ரேட்டிங்காவது வாங்க முட்டி மோதுகின்றன. அந்த வரிசையில் 18 ரேட்டிங்காவது வாங்க வேண்டிய அளவுக்கு வன்முறை மிகுந்த நாவலை ஏதே பல்டி அடித்து PG-13 படமாக்கி இருக்கும் படம் தான் The Hunger Games

பேனம் என்ற நாட்டில் வருடம் குறிப்பிடாத எதிர்காலத்தில் துவங்குகிறது படம். அந்த நாட்டில் உள்ள 12 மாவட்டங்கள் அரசாங்கத்தை எதிர்த்து புரட்சி செய்து தோற்று விடுகின்றன். அதனால் வருடத்திற்க்கு ஒரு முறை 12 முதல் 18 வரை வயதுடைய ஒரு ஆணையும் பெண்ணையும் விளையாட்டு போட்டிக்கு அனுப்ப வேண்டும். 12 மாவட்டங்களுக்கு ரெண்டு பேர் வீதம் 24 பேர் கலந்து கொள்ளும் அந்த விளையாட்டின் பெயர் தான் Hunger Games. விளையாட்டு என்றதும் எதோ ஓட்ட பந்தயமோ இல்ல லாங் ஜம்ப்போ என்று நினைத்து விட வேண்டாம். இந்த போட்டிக்காக தேர்ந்தெடுக்கப்படும் 24 பேரும் ஒரு காட்டில் விடப்படுவார்கள் அவர்களுக்குள் சண்டையிட வேண்டும் சண்டை என்றால் சாதரணாமாக அல்ல சாகும் வரை சண்டையிட வேண்டும். கடைசியாக உயிருடன் இருக்கும் ஒருவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்.

12-ம் மாவட்டத்தில் 74-வது Hunger Games போட்டிக்கு அனுப்புவதற்கான ஜோடியை தேர்ந்தெடுக்க குலுக்கல் நடைபெறுகிறது. அதில் பெண்கள் பிரிவில் 12 வயதே ஆன Katniss Everdeenன் தங்கை தேர்ந்த்டுக்கப்படுகிறார் ஆனால் தன் தங்கையை காப்பாற்றும் பொருட்டு அவர் தானாகவே போட்டியில் பங்கேற்ப்பதாக சொல்லவும் அவரே தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆண்கள் பிரிவில் Peeta Mellark என்ற இளைஞனும் நேர்தெடுக்கப்படுகிறார். இவர்கள் இருவரோடு ஏற்கனவே ஒரு முறை இந்த போட்டியில் வெற்றி பெற்ற Haymitch உடன் 'The Capitol' நோக்கி பயணமாகின்றனர். வறுமை தாண்டவமாடும் District 12 போல் இல்லாமல் கேப்பிடல் ரொம்பவும் செல்வ செழிப்புடும் இருக்கிறது. அறிமுக அணிவகுப்பிலும் ஆரம்ப சுற்றுகளிலும் அனைவரையும் கவர்ந்து அதிக மதிப்பெண் பெறுகிறார் Katniss. அதன் பிறகு போட்டி தொடங்குகிறது ஒருவரை ஒருவர் கொல்கின்றனர் , சிலர் நட்பு பாராட்டுகின்றனர் , சிலர் துரோகம் செய்கின்றனர், Katnissம் Peetaவும் காதலர்கள் என மீடியா சென்ஷேசனுக்காக சொல்லப்படுகிறது அதுமட்டுமல்லாமல் அத்தனையும் டி.வில் நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. Katnissம் Peetaவும் உண்மையில் காதலிக்க தொடங்கினார்களா, ஒருவர் மட்டுமே உயிருடன் திரும்பும் வாய்ப்புள்ள போட்டியில் யார் வென்றார் போன்ற விஷயங்களை வெள்ளி திரையில் காண்க..

படத்தின் கதையை படிக்கும் போதே உங்களுக்கு தெரிந்திருக்கும் நிறைய கொலை நடக்கும் படமென்று அதனால் ரத்த ஆறு ஓடும் என்று எதிர்ப்பார்த்து சென்றால் நிச்சயம் இல்லை. காரணம் மேற்சொன்னது தான். மொத்ததில் The Hunger Games படம் விறுவிறுப்பாக சொல்லப்பட்ட பொழுதுபோக்கு படம் தான். பெரிய எதிர்பார்ப்போடு போகாமல் இருந்தால் நிச்சயம் ரசிக்க முடியும்..

*- கிறுக்கல்கள் இணையம்*


BAR - RESTAURANT - BANQUETING

HAPPY HOUR!
5.00 PM TO 7.00 PM

40% DISCOUNT
ON ALL FOOD AND DRINKS

Orders must be taken before 7.00 pm
Monday to Sunday

3 Brighton Road, South Croydon, CR2 6EA

www.fushiauk.com

Tel: 020 8680 8833

AN INTRODUCTION TO GLOBAL "CURRENCY TRADING"

Currency Trading - gives you the Financial Freedom – a job for life.
Make "TAX FREE" money from the comfort of your own home.

Interested? Then book by email or telephone to attend our FREE introduction...

Thursday 08:00. Places are limited.

Venue:
Knights of Harrow
Seminar Room
164 Pinner Road,
Harrow, HA1 4JJ.

Contact details are below:
Email - admin@knightsofharrow.com. Tel: 0208 424 2002
Tel: Nthiran 0781 221 1663 s2pnet@yahoo.co.uk
Para 0795 850 7010

# சினிமா

திரை விமர்சனம்

# ஒரு கல் ஒரு கண்ணாடி



*நடிப்பு: உதயநிதி, சந்தானம், ஹன்ஸிகா, சரண்யா*

*இசை: ஹாரிஸ் ஜெயராஜ்*

*எழுத்து மற்றும் இயக்கம்: ராஜேஷ்*

தமிழ்முதல் படத்தில் கதையும், காமெடியும் சேர்ந்தது போல இருந்தது. இரண்டாவதில் கொஞ்சம் கதை முழுக்க முழுக்க காமெடி, இதில் கதை என்ற ஒன்றைப் பற்றி கவலைப் படாமல் வெறும் காமெடியை மட்டுமே வைத்து ஜெயித்திருக்கிறார் இயக்குனர் ராஜேஷ்.

சத்யம் தியேட்டரில் டிக்கெட் கிழிக்கும் வேலையிலிருக்கும் ஹீரோவும், உணவகத்தில் வேலை செய்யும் சந்தானமும் இணை பிரியா நண்பர்கள். முகத்தில் முகமுடி போட்டுப் போகும் பெண்கள் பின்னால் அலைபவர்கள். அப்படி பார்த்த பெண்ணை பின் தொடர்ந்து காதலிக்கிறார் உதய். கூடவே எல்லாவற்றிக்கும் உதவுகிறார் சந்தானம். ஒரு கட்டத்தில் காதலர்கள் பிரிந்து கொள்கிறார்கள் இவர்களது வாயாலேயே. பின்னால் எப்படி சேர்ந்தார்கள் என்பதே இப்படத்தின் கதை என்கிற வஸ்து.

சந்தானம் திரையில் தோன்ற ஆரம்பித்த கணத்திலேயே மக்கள் சிரிக்க தயாராகி விடுகிறார்கள். பிறகென்ன அடி தூள் தான். ஆரம்பத்தில் ஆரம்பித்து கடைசிக் காட்சி வரை இவரின் ராஜ்ஜியம். பாஸ் என்கிற பாஸ்கரனை விட இதில் ஒரு படி மேல் போய் ஆல்மோஸ்ட் ஹீரோ ரேஞ்சுக்கு, ரேஞ்சுக்கு என்ன ஹீரோவே தான். படம் முழுக்க இவரின் அட்டகாசம் இருக்கிறதே.. அட அட அட.. பின்னி பெடலெடுக்கிறார். அதுவும் களைமாக்ஸில் கிறிஸ்துவமத போதகர் ஸ்டைலில் உதய் பேசும் பட்லர் இங்கிலிசுக்கு தமிழில் விளக்கம் சொல்லும் காட்சி அய்யயோ.. ஹீரோவாக சொல்லப்படும் உதய் தன் நிலை அறிந்து ஒரு கேரக்டரை தெரிந்தெடுத்ததற்காக பாராட்டுக்கள். ஆரம்பக் காட்சிகளில் இருந்த தயங்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் விலகியிருப்பது தெரிகிறது. நடனம் தான் பாவம் ரொம்பவே கஷ்டப்படுகிறது. இவரிடம் இன்னும் கஷ்டப்படும் விஷயம் ரியாக்ஷன்கள். சீரியசாய் பேச வேண்டிய காட்சியில் வசனம் மட்டுமே சீர்யஸாய் பேசப்பட, முகத்தில் கொஞ்சம் கூட அதற்கான பரபரப்போ, பதட்டமோ இல்லை. பெரும்பாலான நேரங்களில் கண்ணாடிக் கம்பெனிக்காரர்கள் புண்ணியம் கட்டிக் கொள்கிறார்கள். இருந்தும் விமானத்தில் கலாய்க்கும் காட்சியிலும், சந்தானத்துடன் பேசும் காட்சிகளிலும் முதல் படியை தாண்டிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சந்தானத்திற்கு இன்னும் ஆறு ஜென்மங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறார் ராஜேஷ். சந்தானம் மட்டும் இல்லையென்றால் இந்தப்படம் இந்த அளவுக்கு வந்திருக்குமா தெரியவில்லை. படம் முழுக்க சந்தான ராஜ்யம்தான். உள்ளத்தை அள்ளித்தா படத்தை எப்படி கவுண்டமணி இல்லாமல் கற்பனை செய்யமுடியாதோ அதுபோல சந்தானம் இல்லையென்றால் இந்தப்படம் வெடிக்காத பட்டாசு போல நமுத்து போயிருக்கும் !.

ஹன்ஸிகா மோத்வானி மொத்துவானியாகவே இருக்கிறார். குதித்து குதித்து ஓடுவதும், கண்களை சுருக்கி அழ மட்டும் செய்திருக்கிறார். அவரின் காதலுக்கு பின் பெரிய ஆழம் என்ற எந்த எழவும் இல்லையாததால் நத்திங் சீரியஸ்.... உடம்பை குறைக்கவிட்டால் அம்மணி ரொம்ப நாள் தாங்க முடியாது இங்கே.

ஹாரிசு ஜெயராஜ் எப்போதும்போலவே அவர் பாட்டையே அவரே ரீமிக்ஸ் பண்ணி போட்டிருக்கிறார். காமெடி கலாட்டாவில் இசை குறித்தெல்லாம் யாரும் சட்டை செய்ததாக தெரியவில்லை. சொல்லப்போனால் காமெடி எக்ஸ்பிரஸில் பாடல்கள் சிறு ஓய்வாகவே உணர்கிறேன். நன்றி ஹாரிஸ்! பாலசுப்ரமணியத்தின் ஒளிப்பதிவு படத்திற்கு தேவையான அளவிற்கு பளிச்சென இருக்கிறது.

எழுதி இயக்கியவர் ராஜேஷ். முந்தைய படங்களின் கலவையாக நிறைய காட்சிகள் இருந்தாலும் ஒன்றுமே இல்லாத கதையை கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரத்திற்கு மேல் போர் அடிக்காமல் சுவாரஸ்யமாய் கொடுத்ததற்கு முதலில் வாழ்த்த வேண்டும்.எந்த ஒரு படத்திற்கும் திரைக்கதைதான் மிகப்பெரிய பலம் என்பதை இயக்குனர் உணர்ந்தேயிருப்பார் போல ! திரைக்கதை வசனம் இரண்டிற்கும்தான் ரொம்பவே மெனக்கெட்டிருக்கிறார். நிறையவே சின்னதும் பெரிதுமாக குறைகள் தெரிந்தாலும் படத்தின் எல்லா குறைகளையும் திரைக்கதையும் அதிரடி காமெடி வசனங்களும் நிறைவு செய்கின்றன. முழுக்க முழுக்க சந்தானத்தை நம்பியும், அதே நேரத்தில் உதய்க்கு முக்கியத்துவத்தை குறைக்காமலும், சரி விகித அளவில் திரைக்கதையை கொடுத்தது சுவாரஸ்யம். ஆனால் கதை என்ற ஒரு வஸ்து இல்லவே இல்லாததால் சந்தானம் இல்லாமல் உதய், ஹன்சிகா வரும் காட்சிகள் எல்லாம் சோம்பி வழிகிறதை தவிர்க்க முடியவில்லை.

படம் போவது தெரியாமல் சிரித்தாலும் இயக்குனரின் முந்தைய இரண்டு படங்களிலும் பார்த்த அதே கதை , யூகிக்க முடிகின்ற அடுத்தடுத்த சீன்கள் இவையெல்லாம் இன்னும் எத்தனை படம் தான் இப்படியே எடுப்பாரோ என்று கேட்க வைக்கின்றன காமடியான பல காட்சிகளை எடுத்து அதை கதையாக சொல்லாமல் கதையுடன் கூடிய காமெடி படத்தை எடுத்தால் நிச்சயம் காதலிக்க நேரமில்லை, மைக்கேல் மதன காமராஜன் , உள்ளத்தை அள்ளித்தா போல என்றுமே மனதில் நிற்கும் படங்களை இயக்குனர் ராஜேஷாலும் தர முடியும் இயக்குனர்முயற்சி செய்வாரா என்பதை அடுத்த படத்தில் பார்க்கலாம்

ஒரு கல் ஒரு கண்ணாடி - எல்லாம் ஓகே.. ஆனாலும்..

*- அகிலன்*

# சினித்துளி

## முப்பரிமாணத்தில் 'கட்டபொம்மன்'!



சிவாஜி நடிப்பில் வெளிவந்த 'கர்ணன்' படத்தினை புதிய டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் மெருக்கேற்றி வெளியிட்டார்கள். ரசிகர்கள் அப்படத்திற்கு பெரும் வரவேற்பு அளித்தார்கள். 'கர்ணன்' இன் வரவேற்பைத் தொடர்ந்து, சிவாஜி நடித்த 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தினை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மாற்ற இருக்கிறார்கள். அதுவும், 3D முறையில் அப்படத்தினை வெளியிட திட்டமிட்டு இருக்கிறார்கள். இப்படத்தில் நடித்த நடிகர் திலகம் முதல் வெளிநாட்டு விருதினையும் வென்றார்.

3D படங்களுக்கு தற்போது பெரும் வரவேற்பால் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தினை அவ் வடிவில் வெளியிட்டால் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு நிச்சயம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள்.

## '3' நட்டம் - கை கொடுத்த ரஜினி!



தனுஷ், ஸ்ருதிஹாசன் நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 3. கொலவெறி பாடலுக்கு உலகம் முழுவதும் கிடைத்த வரவேற்பு, கமல் மகள் ஸ்ருதிஹாசன் நடிப்பு, ரஜினி மகள் ஐஸ்வர்யா தனுஷ் இயக்கம் என அனைத்தையும் மீறி படம் மக்களிடையே வரவேற்பை பெறவில்லை. 3 படத்தின் தமிழ் தவிர்ந்த ஏனைய மொழி உரிமையை வாங்கி வெளியிட்டோர் பெரும் நஷ்டத்தை அடைந்துள்ளனர். இதனால் ரஜினி தானாகவே முன்வந்து விநியோகஸ்தர்களுக்கு நஷ்டத்தை ஈடுகட்டினார்.

## கடலை வாங்கிய ஜெமினி!!



மணிரத்னம் படம் துவங்குகிறார் என்றால் அப்படம் குறித்து எந்த ஒரு தகவலும் அதிகாரப்பூர்வமாக வெளிவராது. கார்த்திக் மகன் கௌதம், சமந்தா, அர்ஜுன், அரவிந்த்சாமி மற்றும் பலர் நடிக்க 'கடல்' என்னும் படத்தினை இயக்கி வருகிறார் மணிரத்னம. ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்து வருகிறார். மணிரத்னம் இயக்கம், ரஹ்மானின் இசை, கார்த்திக் மகன் கௌதம் அறிமுகம் என வெளிவர இருப்பதால் இப்படத்திற்கு எதிர்பார்ப்பு இன்னும் அதிகமாகும் என்கிறது கோலிவுட் வட்டாரம்.

'கடல்' படத்தினை FIRST COPY முறையில் 25 கோடி கொடுத்து வாங்கி இருக்கிறது ஜெமினி நிறுவனம். எந்தத் தைரியத்தில் வாங்கினார்களோ இது 'கடல்' படக்குழுவினரை உற்சாகப்படுத்தி இருக்கிறது.

*இவங்க எப்போதுமே இப்படித்தான்.., ஆரம்பிக்கும்போது அதகளப்படும்.., வெளியே வந்ததும் வந்த வேகத்திலேயே அடங்கிவிடும்.....*

## 'வனயுத்தம்' படத்துக்குத் தடை!!



பத்திரிக்கையாளர் நக்கீரன் கோபால் தொடர்ந்த வழக்கால் நடிகர் அர்ஜூன் நடித்துள்ள 'வனயுத்தம்' படத்தை வெளியிட சென்னை நீதிமன்றில் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. ராஜ்குமார் கடத்தல் பற்றிய படம் என்பதால், அதில் தூதராகவும், பத்திரிகையாளராகவும் பணியாற்றிய என்னுடைய ஒரு கதாபாத்திரம் இல்லாமல் இருக்க முடியாது. இதனால் அந்தப் படத்தை வெளியிடத் தடை விதிக்க வேண்டும் என்று கோபால் தொடர்ந்த வழக்கால் வெளியீடு நிறுத்தப்பட்டுள்ளது.







# Lycamobile

Call the world for less

## India 1p /min

Landline & Mobile

## Sri Lanka 7p /min

Landline

NEW OFFER

## £10 Free credit

with every £20 online top-ups

## UNLIMITED FREE CALLS

from Lycamobile to Lycamobile

For your FREE Lycamobile SIM
visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears.
1p/min promotion is valid from 31.12.2011 and valid until 30.04.2012. From the March 1st to April 30th 2012, customers with a minimum balance of 20p can enjoy free and unlimited calls from Lycamobile UK to Lycamobile UK. £10 credit offer: When you top up with a £20 voucher online during March and April 2012, you will be credited with an additional £10 call credit. Offer valid only on the first 2 online £20 top ups during March and April 2012. Prices and offers are correct at the time of going to print on 03.04.2012. for more offers and latest rates please visit www.lycamobile.co.uk

Lyca mobile
Call the world for less

# Southall Travel

*Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk